விலை ரூபா: 20.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 13 வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 12 செவ்வாய்க்கிழமை (28.08.2012) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 253

ராம்கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT


SLS 107 தரம் கொண்டதும் 100 வீத சாதாரண போட்லான் சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

RAMCO

# எந்தவொரு மதத் தலத்தையும் உடைக்க அனுமதிக்க மாட்டேன்

## ஜனாதிபதி தெரிவிப்பு

*(சம்மாந்துறை)*, இந்த நாட்டின் ஜனாதிபதியாக நான் இருக்கும்வரை எந்தவொரு மதத் தலமும் பள்ளிவாசல்களும் உடைக்கப்பட மாட்டாது. அதற்கு நான் ஒருபோதும் அனுமதியேன் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சம்மாந்துறையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் தெரிவித்தார்.




சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சம்மாந்துறைத் தொகுதி அமைப்பாளர் ஏஎம்எம் நௌஷக்ட் தலைமையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய ஜனாதிபதி தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் மூன்று தசாப்த காலமாக இடம்பெற்று வந்த கொடூர பயங்கரவாதத்தினால் எமது மக்கள் உயிர்களையும் உடைமைகளையும் இழந்தது மாத்திரமின்றி நமது மக்கள் தொழில்களுக்குச் செல்லமுடியாமலும் வயல்களுக்கு செல்லமுடியாமலும் கடலுக்குச் செல்லமுடியாமலும் சந்தைக்குப் போகமுடியாமலும் ஏன் பள்ளிவாசல்களுக்கு செல்லமுடியாமலும் இருந்த வரலாற்றை நாம் மறந்துவிட முடியாது. *(20ஆம் பக்கம் பார்க்க)*

## தெல்லிப்பழையில் இன்று தேர்



தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலயதேர் இன்று காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து அம்பாள் தேரில் ஆரோகணிப்பார்.

## கச்சதீவை மீட்க அ.தி.மு.க தீர்மானம்

(சென்னை)

சர்ச்சைக்குரிய கச்சதீவை இந்திய அரசு மீட்டு தனது உடைமையாக்க வேண்டும் என அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் (அ.தி.மு.க.) செயற்குழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அ.தி.மு.க. செயற்குழு கூட்டம் நேற்று சென்னையில் உள்ள கட்சி தலைமையகத்தில் கூடியது. தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதாவின் தலைமையில் நடந்த இக் கூட்டத்திலேயே மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## சீனப் பாதுகாப்பு அமைச்சர் உட்பட உயர் அதிகாரிகள் இலங்கை விஜயம்

(கொழும்பு)

சீனப் பாதுகாப்பு அமைச்சர் லியாங் குவாங்லி உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நாளை இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.



படையினருக்கான தொழில்சார் பயிற்சிகள் மற்றும் இலங்கையின் கோரிக்கையின் பேரில் இராணுவ உதவிகளை ஊக்குவித்தல் தொடர்பான கலந்துரையாடல்களில் அவர் பங்குபற்றுவார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத்தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய ஆகியோரையும் அவர் சந்தித்து கலந்துரையாடுவார்.

இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் ஜெகத் ஜெயசூரிய கடந்த வருடம் சீனாவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்ததைத் தொடர்ந்து சீனப் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## மகேஸ்வரன் கொலை வழக்கு குற்றவாளிக்கு தூக்கு தண்டனை

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ரி.மகேஸ்வரனின் கொலை வழக்கின் முக்கிய சந்தேகநபரான ஜொண்ஸ்டன் கொலின் வலன்ஸ்டினோ என்பவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## ஆஸி செல்ல முயன்ற 1600 பேர் சிறைகளில்

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முற்பட்டநிலையில் பாதுகாப்பு தரப்பினரால் கைது செய்யப்பட்டோரில் ஆயிரத்து 600 பேர் நாட்டிலுள்ள பல்வேறு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று ஐ.தே.கவின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## துரித விசாரணைக்கு தேரர் கோரிக்கை

பயங்கரவாத சந்தேக நபர்களுக்கு எதிரான வழக்கு விசாரணைகளை துரிதப்படுத்துமாறு கண்டி மல்வத்து பீடாதிபதி திப்பட்டுவாவே ஸ்ரீசுமங்கல தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பயங்கரவாத குற்றச் செயல்கள் தொடர்பில் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## அமைச்சர் ரிசாத்துக்கு பிணை



(மன்னார்)

மன்னாரில் நீதவானை தொலைபேசி ஊடாக அச்சுறுத்தியதுடன் அதன்மூலம் நீதிமன்றச் செயற்பாடுகளில் தலையிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ள வழக்குத் தொடர்பில் அமைச்சர் ரிசாத் பதியுதீன் மன்னார் நீதிமன்றத்தின் மேலதிக நீதவான் நிபந்தனையுடன் கூடிய பிணை வழங்கியிருக்கிறார்.

10 ஆயிரம் ரூபாய் ரொக்கப் பிணையிலும் 5 இலட்சம் ரூபாய் பெறுமதியான 2 ஆட்பிணையிலும் செல்வதற்கு அனுமதித்துள்ள மன்னார் நீதிமன்றம், வழக்கு விசாரணையை ஒக்டோபர் மாதம் 4-ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளது.

நேற்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோது மன்னார் நீதிமன்றத்திலும் அதன் சூழலிலும் இராணுவத்தினரும் பொலிஸாரும் பலத்த பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர்.

அமைச்சர் ரிசாத் பதியுதீன், நீதிமன்றம் ஏற்கெனவே வழங்கியிருந்த உத்தரவுக்கமைய நேற்று நீதிமன்றத்திற்கு வருகை தந்திருந்தார்.

அவ *(20ஆம் பக்கம் பார்க்க)*

## கோமா நிலையில் தமிழ் அரசியல் கைதி

காலி சிறைச்சாலையில் இருந்து திடீர் சுகவீனமுற்ற நிலையில் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தமிழ் அரசியல் கைதியொருவர் கோமா நிலையில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 25ஆம் திகதி கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட 29 வயதுடைய சுந்தரம் சதீஸ்குமார் என்ற அரசியல் கைதியே இவ்வாறு கோமா நிலையில் இருப்பதாகவும் அவர் கடந்த 2 வருடங்களாக விளக்கமறியலில் இருந்தவர் எனவும் காலி சிறைச்சாலை அத்தியட்சகர் தெரிவித்தார்.

நுவரெலியா, கொழும்பு, புத்தளம், காலி மற்றும் நீர்கொழும்பு உள்ளிட்ட பகுதிகளில் பல நீதிமன்றங்களில் இவருக்கு எதிராக வழக்குகள் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவரும் குறித்த கைதிக்கு எவ்வித உயர் ஆபத்தும் *(20ஆம் பக்கம் பார்க்க)*

## இலங்கைப் படைக்கு தொடர்ந்தும் பயிற்சி

### இந்தியா திட்டவட்டம்

இலங்கைப் பாதுகாப்பு படையினருக்கு தொடர்ச்சியாக பயிற்சி அளிக்கப்படும் என இந்திய பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்திய பாதுகாப்பு பயிற்சி நிலையங்களில் தொடர்ச்சியாக இலங்கைப் படையினருக்கு பயிற்சி அளிக்கப்படும் என இந்திய மத்திய பாதுகாப்பு அமைச்சர் எம்.எம்.பள்ளம் ராஜு தெரிவித்துள்ளார்.

இலங்கைப் பாதுகாப்பு படையினருக்கு பயிற்சி அளிக்கக்கூடாது என தமிழக முதல்வர் ஜெயலலிதா விடுத்த கோரிக்கைக்கு பதிலளிக்கும் வகையில் மத்திய அமைச்சர் ராஜு இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கை நட்பு நாடு எனவும் தொடர்ச்சியாக பயிற்சிகள் அளிக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். *(20ஆம் பக்கம் பார்க்க)*

சிங்கர் அறிமுகப்படுத்தும் அதிசிறந்த உறுதியான மோட்டர் சைக்கிள்கள்

SAFARI



72 CC 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
சிவப்பு, நீலம், கறுப்பு, சில்வர் வர்ணங்களில்

GALAXY 100



100 CC ஸ்கூட்டர் 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்

CAMY 80



80 CC ஸ்கூட்டர். 4 ஸ்ட்றோக் என்ஜின்
மின்சார, கிக் ஸ்ராட்
அலோய் சில்லு
டிஸ்க் பிறேக்
பாதுகாப்பு அலாம் மணி
சிவப்பு, நீலம், கறுப்பு வர்ணங்களில்

SUPER CUP



4 Stroke 90cc Air Cooled Engine
Starting System : Electric/ Kick
Detachable Rear Seat
Alloy Wheels
Drum Brakes
Colours: RED/BLACK / GREEN

ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். சுன்னாகம். மானிப்பாய். சங்கானை, நெல்லியடி. சாவகச்சேரி, கிளிநொச்சி

⇨ தவணைக் கொடுப்பனவு முறையிலும் பெற்றுக்கொள்ளலாம்

சிங்கர் – யாழ் மண்ணின் பரம்பரைத் தோழன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# டிப்ளோமா பட்டதாரிகளின் வழக்கு எதிர்வரும் 7ஆம் திகதிக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

உயர்தேசிய கணக்கியல், முகாமைத்துவப் பட்டதாரிகளினால் உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை மனிதவுரிமை மீறல் வழக்கு நேற்று மூன்று நீதிபதிகள் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டதோடு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களைச் சேர்ந்த பட்டம் பெற்ற 228 பட்டதாரிகள் கடந்த மாதம் 31ஆம் திகதி உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவினை ஒவ்வொருவரும் தனித்தனியாகத் தாக்கல் செய்தனர்.

பட்டதாரிப்பயிலுநர் ஆட்சேர்ப்பில் தம்மையும் இணைத்துக் கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்து பல போராட்டங்களை முன்னெடுத்திருந்த போதும் பட்டதாரிப் பயிலுநர் ஆட்சேர்ப்பில் குறித்த பட்டதாரிகள் இணைத்துக் கொள்ளப்படவில்லை.

ஆனால் யாழ்., கிளிநொச்சி மாவட்டங்கள் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களைச் சேர்ந்த குறிப்பாக தென்னிலங்கையிலுள்ள மாவட்டங்களைச்சேர்ந்த மேற்படி பாடங்களில் பட்டம் பெற்ற பட்டதாரிகள் பட்டதாரி பயிலுநர் ஆட்சேர்ப்பில் இணைத்துக்கொள்ளப்பட்டனர்.

இதனால் பாதிப்படைந்த பட்டதாரிகள் மனிதவுரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ததோடு உயர் நீதிமன்றிலும் வழக்குத் தாக்கல் செய்தனர்.

பட்டதாரிகள் சார்பாக வாதாடுவதற்கு தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எம். ஏ.சுமந்திரன் முன்வந்ததோடு பட்டதாரிகள் வழக்குத்தாக்கல் செய்வதற்கான ஆலோசனைகளையும் வழங்கியிருந்தார்.

இந்நிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட மேற்படி வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட நீதிபதிகள் அரசாங்க சட்டத்தரணிகளினால் விடுக்கப்பட்ட வேண்டுகோளையடுத்து வழக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 7ஆம் திகதி வரை ஒத்திவைத்தனர்.

வழக்கின் விசாரணையின் போது பட்டதாரிகள் சார்பாக ஆஜராகிய சட்டத்தரணி சுமந்திரன் தனது வாதத்தின் போது குறித்த பட்டதாரிகள் தற்போது பட்டதாரிப் பயிலுநர் ஆட்சேர்ப்பில் இணைத்துக்கொள்ளப்பட்ட பட்டதாரிகளுக்கு அரச நியமனம் வழங்கப்பட முன்பு பட்டதாரிப் பயிலுநர்களாக இணைந்து கொள்ளக் கூடிய வகையில் வழக்கு விசாரணைகள் இடம் பெறவேண்டும் என நீதிபதிகளிடம் வேண்டுகோள் விடுத்தார்.

இதேவேளை அரசசட்டத்தரணிகள் வாதிடும் போது குறித்த பாடங்களில் பட்டம்பெற்ற பட்டதாரிகள் வேறு மாவட்டங்களில் பட்டதாரிப் பயிலுநர்களாக இணைத்துக்கொள்ளப்பட்டார்களா என்பதற்கு போதிய தகவல்கள் எம்மிடம் இல்லை. எனவே கால அவகாசம் வழங்க வேண்டும் எனத் தெரிவித்தார். இதனால் மேற்படி திகதிக்கு வழக்கை நீதிபதிகள் ஒத்திவைத்தனர் என உயர்நீதி மன்றில் வழக்குத் தாக்கல் செய்த பட்டதாரிகள் சங்க உறுப்பினர்கள் தெரிவித்தனர். (அ-6)

# புலமைப்பரிசில் பரீட்சையை மீண்டும் நடத்த கோரிக்கை

ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையை இரத்துச் செய்துவிட்டு அப் பரீட்சையை உடனடியாக மீண்டும் நடத்த வேண்டும் என இலங்கை ஆசிரியர்கள் ஒன்றியம் கோரியுள்ளது.

பரீட்சைக்கு முன்னதாகவே வினாத்தாள் வெளியே கசிந்துள்ளதாக அச்சங்கம் தெரிவித்துள்ளது. இவ்விடயம் தொடர்பாக தற்போது குற்றப்புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தி வருகின்றனர். (எ-11)

# நாம் தமிழர் 30 பேர் கைது

(குன்னூர்)

இந்தியாவில் இலங்கை இராணுவ வீரர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து நாம் தமிழர் கட்சியினர் நேற்று குன்னூரில் போராட்டம் நடத்தினர்.

மாவட்ட அமைப்பாளர் ஆனந்த் தலைமையில் நாம் தமிழர் கட்சியினர் பிளாக் பிரிட்ஜ் பகுதியில் உள்ள இராணுவப் பயிற்சி முகாமுக்குள் நுழைய முற்பட்டபோது நாம் தமிழர் கட்சியினருக்கும் பொலிஸாருக்கும் இடையே பயங்கரத் தள்ளுமுள்ளு ஏற்பட்டது.

15 நிமிடம் இரு பிரிவினரும் ஒருவரை ஒருவர் தள்ளியதில் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

பின்னர் முகாமுக்குள் நுழைய முயன்ற 30 பேரும் கைது செய்யப்பட்டனர். (எ-11)

# கொழும்பு பல்கலைக்கழக மருத்துவ பீடமும் மூடப்பட்டது

பல்கலைக்கழகங்கள் யாவும் மூடப்பட்ட போதும் சகல மருத்துவ பீடங்களும் இயங்கிக் கொண்டிருந்த நிலையில் பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனத்தின் தொழிற் சங்க நடவடிக்கைகளுக்கு ஆதரவு தெரிவிக்கும் முகமாக கொழும்பு பல்கலைக் கழக மருத்துவ பீடம் நேற்று திங்கட்கிழமை அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளது.

கொழும்பு மருத்துவ பீட ஆசிரியர்கள் மேற்படி சம்மேளனத்தில் சேர்ந்திருக்கவில்லை ஆயினும் பல்கலைக்கழகங்களில் காணப்படும் பிரச்சினைகளை உடனடியாக தீர்க்க வேண்டியதன் அவசியத்தை அதிகாரிகளுக்கு உணர்த்த வேண்டிய தேவை எழுந்துள்ளது என கொழும்பு மருத்துவ பீட ஆசிரியர் சங்கம் கூறியது.

பல்கலைக்கழகங்களை மூடிவிடுதல் இப்பிரச்சினைக்கு தீர்வாகாது என பல்கலைக் கழக ஆசிரியர்கள் சங்கத்தின் தலைவர் டாக்டர் அசேல மெண்டிஸ் கூறினார்.

மருத்துவ பீட ஆசிரியர் போதனா வைத்தியசாலையில் கடமை புரிபவர்கள். இவர்களும் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டால் நோயாளர்கள் பாதிக்கப்படுவர். இதனால் தான் மருத்துவ பீடங்களால் வேலை நிறுத்தத்தில் தொடர்ச்சியாக பங்குபற்ற முடியாது என அவர் கூறினார்.

இதேவேளையில் அரசாங்கத்துடன் இதுவரையில் எந்த ஒரு ஒப்பந்தமும் ஏற்படவில்லை என பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனம் கூறியுள்ளது. வேலை நிறுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது என கூறும் வெளிவட்டாரத் தகவல் உண்மையல்ல என அவர் கூறினார்.

பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனத்திற்கும் அரசாங்கத்திற்கும் இடையில் எழுத்து வடிவில் திட்டவட்டமான தெளிவான ஒப்பந்தம் ஏற்படும் வரை வேலைநிறுத்தம் ஒருபோதும் முடிவுக்கு வராது என பல்கலைக்கழக ஆசிரியர்கள் சங்கங்களின் சம்மேளனத்தின் பேச்சாளர் வைத்தியர் டி மெண்டிஸ் மேலும் கூறினார். (எ-11)

# வெளிநோயாளர் பிரிவு இரவு 8.00 மணிவரை

(யாழ்ப்பாணம்)

யாழ் போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவு காலை 7.00 மணி தொடக்கம் இரவு 8.00 மணிவரை செயற்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே யாழ் நகரப்பகுதியை அண்டியவர்கள் மாலை வேளைகளில் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவை பயன்படுத்துமாறும் இதனால் தூர இடங்களில் இருந்து வருபவர்கள் காலையில் சன நெரிச்சல் இன்றி சிகிச்சை பெற முடியும் எனவும் வைத்தியசாலையின் அபிவிருத்திக்குழு அறிவித்துள்ளது. (எ-11)

# முன்னேஸ்வரம் காளி கோவிலில் திட்டமிட்டபடி மிருக பலி நடக்கும்

## ஆலய நிர்வாகம் அறிவிப்பு

(சிலாபம்)

எந்தவித எதிர்ப்புக்களோ அல்லது தடைகளோ ஏற்படுத்தப்பட்ட போதிலும் சிலாபம் முன்னேஸ்வரம் ஸ்ரீபத்திரகாளி அம்மன் கோவிலில் வருடாந்த மிருகபலி பூஜை திட்டமிட்டபடி எதிர்வரும் சனிக்கிழமை இடம் பெறும் என அக்கோவிலின் நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் அக்கோவிலின் முன்னால் மிருகபலி பூஜைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பௌத்த பிக்குகள் தலைமையிலான குழுவினர் சத்தியாக்கிரகப் போராட்டமொன்றை நடத்திய நிலையிலேயே கோவில் நிர்வாகத்தினர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

குறிப்பிட்ட சிலரின் எதிர்ப்புகளுக்காக எமது சமய விடயங்களை நாம் கைவிடப் போவதில்லை. இவ்வாறான எதிர்ப்புக்களினால் எமது சமய விடயங்களை முன்னெடுப்பதில் எமக்குப் பிரச்சினை ஏற்பட்டுள்ளது.

எமது இந்த சமயப் பணியை தடையின்றி முன்னெடுப்பதற்கு வசதி செய்து தருமாறு நாம் ஜனாதிபதி உட்பட பாதுகாப்புச் செயலாளருக்கும் கடிதம் அனுப்பியுள்ளோம். எமது இந்த நடவடிக்கைக்கு ஆதரவாக கருத்துக்களை தெரிவித்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் நாம் நன்றி தெரிவித்துக் கொள்கின்றோம்.

நேற்று முன்தினம் எதிர்ப்பு நடவடிக்கையில் ஓர் இருவரைத் தவிர ஏனைய அனைவரும் வெளியில் இருந்து வந்தே ஈடுபட்டனர். அவர்கள் இனவாதக் கோஷங்களை எழுப்பினர். எவ்வாறாயினும் நாம் சட்டப்படியே இந்த நடவடிக்கையில் ஈடுபடுவுள்ளோம் என நிர்வாகத்தினர் மேலும் தெரிவித்தனர். (எ-11)

# எல்சல்வடோருக்கு அருகில் பாரிய பூகம்பம்

எல்சல்வடோர் நாட்டிற்கு அருகில் நேற்று ஏற்பட்ட 7.4 ரிச்டர் அளவிலான பூகம்பத்தை தொடர்ந்து மத்திய அமெரிக்க பிராந்திய நாடுகள் மற்றும் மெக்ஸிகோவில் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எல்சல்வடோர் நாட்டின் தலைநகரின் தென்கிழக்கு பகுதியில் 177 கிலோ மீற்றர் தொலைவின் கீழ் 33 மைல் ஆழத்தில் இப் பூகம்பம் ஏற்பட்டுள்ளது.

இப்பூகம்பத்தால் ஏற்பட்ட சேத விபரங்கள் தொடர்பில் உடனடியாக அறிவிக்கப்படவில்லை.

இப்பூகம்பத்தை தொடர்ந்து எல்சல்வடோர் மற்றும் அண்மைய நாடுகளான கொஸ்டாரிக்கா, நிக்கரகுவா, ஹொன்டுராஸரஸ், கௌதமாலா, பானமா மற்றும் மெக்ஸிகோ ஆகிய நாடுகளுக்கு சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-11)


## மனோதத்துவ வைத்தியம்
## (General Psychotheraphy)
## பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P. ஆறுமுகம் | T.P.: 0719315664 , 0777569205

மீண்டும் யாழில்

28.08.2012 முதல் 05.09.2012 வரை 9 நாட்கள்மட்டுமே இருப்பார். உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு, கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர். ஆண்களுக்கு ஏற்படும் விந்து உயிரணுக்கள் குறைபாடுகளுக்கு சிறந்த மூலிகை மருந்து கொடுக்கப்படுவதால் யாழ்ப்பாணத்தில் பல பேருக்கு குழந்தைகள் கிடைத்தமைக்கு ஆதாரங்கள் உண்டு.

நாதன் இன்

(பழைய கமால் லொஜ்) 392/A. மணிக்கூட்டு கோபுர வீதி,யாழ்ப்பாணம். (சிவதர்சன் எலக்ரிக்கல் கடைக்கு அருகில்) (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்கும் இடையில்)

(347)



## பாராட்டி வாழ்த்துகிறோம்



சர்வதேச இந்து மதகுருபீடம் நடாத்திய 15வது ஆன்மீக பெருவிழாவில் சர்வதேச இந்துமத குருபீடாதிபதி ஐயப்பதாஸகுருக்கள், நடிகர் சரத்பாபு முன்னிலையில் சிவாச்சாரிய சிரோன்மணி சிறப்பு பட்டமும் கௌரவ விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்ட

"வேதாகம ஞானபானு"
"தமிழமுதக் குருமணி"

சிவஸ்ரீ க. ஜெயராமக்குருக்கள்

அவர்களை பாராட்டி வாழ்த்தி வணங்குகின்றோம்.

அன்பர்கள்
வளலாய், தம்பாலை,
இடைக்காடு.

(302)





## தனுஸ் வேக்ஸ்சொப் அன் சேவிஸ் சென்ரர்

மோட்டார் சைக்கிள் திருத்தம், வயரிங், பெயின்ரிங் வேலைகளும் ஆட்டோ, மோட்டார் சைக்கிள் சேவிசும்

(29)

95, பலாலி வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தொ.பேசி.இல.: 021 4914625, 077 4191251, 077 2090482, 077 7293312

உரிமையாளர்: உதயகுமார் திலீபன் (அண்ணாமலை)

ஞாயிற்றுக்கிழமையும் திறக்கப்படும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## மூளையும் அறிவும்

"அந்த நபருக்கு மூளை ஜாஸ்தி! அதனாலே அவனிடம் சற்று அவதானமாக நடந்து கொள்ள வேண்டும்" என்று சொல்வதுண்டு. மூளை ஜாஸ்தி என்றால், அறிவு நிறைந்தவர் என்ற அர்த்தத்தில் நாம் அப்படி சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

மூளைக்கும் அறிவுக்கும் தொடர்பு உண்டு என்பது சரி... மூளை அதிகமாக இருந்தால் அறிவும் அதிகமாக இருக்கும் என்பது சரியா?

சாதாரண மனிதனுடைய மூளை அளவுக்கும் அறிவுத்திறனுக்கும் சம்பந்தம் இல்லையென்றுதான் இதுவரைக்கும் சொல்லிக் கொண்டிருந்தார்கள். ஆனால், அமெரிக்காவில் ஒரு ஆராய்ச்சியாளர் அது சரி இல்லை என்று கூறியுள்ளார்.

ஒரு நபருக்கு தலை பெரிதாக இருந்தால், அவருக்கு அறிவும் அதிகமாக இருக்கும் என்று அவர் கூறுகிறார். அப்படியென்றால் நமது ஊரிலே நிறைய அறிவாளிகள் இருப்பார்கள் போல இருக்கிறது.

தலை பெரிதாக இருப்பவர்கள் "நமது தலை இப்படி இருக்கிறது- என்று நினைத்து இனிமேல் கவலைப்பட வேண்டாம்; அதற்காகப் பெருமைப்படலாம்.

ஒரு மனிதனுடைய மூளை எவ்வளவு பெரிதாக இருக்கிறது என்பதையும் அவன் தலையைத் திறக்காமலே கண்டு பிடிக்கும் வசதியெல்லாம் இப்போது வந்து விட்டது.

ஆராய்ச்சியாளர் என்ன செய்தார் என்றால்... 40 மாணவர்களைத் தேர்ந்தெடுத்தார். ஸ்கானிங் செய்தார். அவர்களுடைய மூளையின் அளவையெல்லாம் குறித்துக்கொண்டார்.

அதன்பின் அவர்களுக்கெல்லாம் I.Q.Test வைத்தார். அத்தேர்வு அறிவுத்திறனைக் கண்டு பிடிக்கும் தேர்வு. கடைசியாகத் தேர்வு முடிவுகளை ஆராய்ந்து பார்த்தார்... மூளை அளவு பெரிதாக உள்ளவர்கள் எல்லாம் முன்னணியிலே இருக்கிறார்கள்.

பொதுவாக ஒருவருடைய உடல் பருமன், உடல் எடை ஆகியவற்றிற்கு ஏற்ற மாதிரி மூளையின் அளவு சற்று வித்தியாசம் அடையும். அதையெல்லாம் சீராக்கி விட்டு, விகிதாசாரப்படி பார்த்தால்... பெரிய மூளை உள்ளவர்களுக்கு கூடுதல் அறிவு இருக்கிறது தெரிய வந்தது.

ஆண்களின் மூளை சராசரியாக ஆயிரத்து 425 கிராம் எடை இருப்பதாகவும்; பெண்களின் மூளை சராசரியாக ஆயிரத்து 265 கிராம் எடை கொண்டதாகவும் கணிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஒரு நூற்றாண்டு கால மருத்துவக் குறிப்புக்களை ஆராய்ந்து பார்த்தபோதிலும் அதில் மனித மூளையின் எடை அதிகரித்து வருவது தெரிகிறது. அதனாலேதான் தற்போது மனிதனுக்கு "தலைக் கவசம்" அதிகமாக இருக்கிறது என்று கூறப்படுகிறது.

மூளையினுடைய பகுதிகளிலே ஒன்று பெருமூளை! அங்கே அதிகமான நியுரான்கள் இருக்கிறது- அறிவுத் திறன் அதிகரிப்பதற்கான காரணமாக இருக்கலாம்... இல்லையென்றால் அதையெல்லாம் மூடியிருக்கிற மையலின் உறை (Myelin Sheath) பெரிதாக இருந்திருக்கலாம்.

இதெல்லாம் அந்த ஆராய்ச்சியாளர் கூறுகின்ற காரணங்கள் ஆகும்.

எப்படியோ... மனிதனுக்கு வரவர மூளையும் பெரிதாகிக் கொண்டு வருகிறது... அறிவும் வளர்ச்சி அடைந்து வருகிறது. அது நல்லதுதான்! இருந்தாலும் அந்த அறிவு நல்ல விடயத்திற்குப் பயன்பட்டால் பரவாயில்லை.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# மக்களுடன் தொடர்புகளைப்பேண பொலிஸார் சந்திப்புக்களை நடத்துகின்றனர்

## யாழ்.சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவிப்பு

பொலிஸார் சிவில் சமூக தொடர்புகளை சிறந்த முறையில் பேணுவதற்காக மக்களிடையே நடமாடும் சேவை, விழிப்புணர்வுகள் என்பவற்றினை தொடர்ந்து நடத்தி வருவதாக யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிறிகுகனேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், பொலிஸார் தற்போது மக்கள் மத்தியில் அர்ப்பணிப்புள்ள சேவைகளை வழங்கி வருகின்றனர். இப்பணிகள் ஒவ்வொரு வாரமும் நடைபெற்று வருகின்றன. அவற்றில் கடந்த வாரம் மட்டும் கோப்பாய் பகுதியில் இரு சிரமதானப் பணிகளும் உரும்பிராய் ஜே/267 பகுதி மற்றும் கொடிகாமத்தில் டெங்கு விழிப்புணர்வு நடவடிக்கையும் சுன்னாகம் பொலிஸ் பிரிவினரால் இணுவில் இந்துக் கல்லூரியில் சிரமதானப் பணியும் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவினரால் மாவடிப் பிரதேசத்தில் டெங்கு ஒழிப்பு சிரமதானப் பணியும் சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பிரிவினரால் சிரமதானப் பணியும் இளவாலை பொலிஸ் பிரிவினரால் ஜே/176, ஜே/140, ஜே/150 ஆகிய கிராம சேவகர் பிரிவுகளிலும் சிரமதானப் பணியும் அச்சுவேலி பொலிஸ் பிரிவினரால் புத்தூர் வடக்கில் நடமாடும் சேவையும் தெல்லிப்பழை பொலிஸ் பிரிவினரால் 4 இடங்களில் சிவில் பாதுகாப்பு கூட்டங்களும் நடத்தப்பட்டுள்ளன.

இவ் விழிப்புணர்வு மற்றும் சிரமதானப் பணிகள் சிவில் பாதுகாப்பு கூட்டங்கள் என்பவற்றால் டெங்கு கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளதோடு டெங்கு ஒழிப்பில் யாழ்.மாவட்டம் முதன்மையாகவும் காணப்படுகின்றது.

மேலும் சிவில் பாதுகாப்பு கூட்டங்களால் சாதாரண மக்களுக்கு இழைக்கப்படுகின்ற, திணிக்கப்படுகின்ற குற்றங்கள் பொலிஸாரால் இனங்கண்டு அவற்றுக்குரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ள முடியும்.

அந்தவகையில் பொலிஸார் மக்களின் தோழனாக, பாதுகாவலனாக இருக்கின்ற வேளை மக்களும் பொலிஸாருடன் இணைந்து செயலாற்ற வேண்டும் என்றார். (அ-4)

# கணனிப்பயிற்சிநெறி நடைபெறவுள்ளது

(யாழ்ப்பாணம்)

சங்கானை, வலி.மேற்கு பிரதேச செயலக விதாதா வள நிலையத்தில் அடிப்படை கணனிப் பயிற்சிநெறி (MS OFFICE) நடைபெறவுள்ளதாக சங்கானை பிரதேச செயலர் எஸ்.சோதிநாதன் அறிவித்துள்ளார்.

மேற்படி பயிற்சி நெறியில் பங்குபற்ற ஆர்வமுள்ளவர்கள் தங்களின் சுயவிபரக் கோவையைப் பூர்த்தி செய்து விஞ்ஞானம் தொழில்நுட்பவியல் உத்தியோகத்தர், பிரதேச செயலகம், வலி.மேற்கு, சங்கானை எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ எதிர்வரும் செப்டெம்பர் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு அவர் கேட்டுள்ளார். (ந-2)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 70 | 80 | 60 | 50 |
| உருளைக்கிழங்கு | 70 | 70 | 80 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 60 | 80 | 90 |
| தக்காளி | 70 | 50 | 50 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 40 | 40 | 40 |
| கோவா | 80 | 70 | 65 | 70 |
| கரட் | 100 | 120 | 90 | 150 |
| பூசணி | 40 | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 40 | 40 | 40 |
| வாழைக்காய் | 50 | 60 | 50 | 60 |
| சின்ன வெங்காயம் | 60 | 70 | 70 | 70 |
| பெரிய வெங்காயம் | 70 | 90 | 80 | 70 |
| பாகற்காய் | 80 | 70 | 80 | 60 |
| வெண்டிக்காய் | 70 | 40 | 40 | 50 |
| கருணைக் கிழங்கு | 70 | 80 | 90 | -- |
| பயற்றங்காய் | 80 | 60 | 90 | 40 |
| லீக்ஸ் | 90 | 110 | 100 | 120 |
| பீற்றூட் | 60 | 40 | 50 | 60 |
| கறிமிளகாய் | 70 | 70 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 50 | 120 | 100 | 70 |
| போஞ்சி | 100 | 110 | 110 | 100 |
| கத்தரிதம்புள்ள | 55-60 | 60 | 40 | -- |
| கீரை - 1 பிடி | 07-08 | 10 | 20 | 15 |
| தேசிக்காய் | 140 | 200 | 65-90 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 15-30 | 30 | 20 | 20-25 |

# இராசி பலன்

*28.08.2012*

*(ஆவணி 12, செவ்வாய்க்கிழமை)*

*சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு*

*துவாதசி முன்னிரவு 11.05 மணிவரை*

*பூராடம் முற்பகல் 8.02 மணிவரை*

*இராகுகாலம் 3.05-4.35 மணிவரை*

*சுபநேரம் 10.35-12.05 மணிவரை*

**மேடம்** செவி குளிரும் செய்திகள் வந்து சேரும் நாள், சொன்ன சொல்லைக்காப்பாற்றி மகிழ்வீர்கள், தொழில் ரீதியாக புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், தடைப்பட்ட காரியங்கள் மதியத்திற்குப் பின்னர் நடைபெறலாம்.

**இடபம்** மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், இனத்தார் பகை மாறும், ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படுவீர்கள், அலைச்சல்கள் குறைந்து ஆதாயம் பெறுவீர்கள்.

**மிதுனம்** மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, யோகங்கள் வந்து சேர யோசித்து செயற்பட வேண்டிய நாள், சஞ்சலங்கள் அதிகரிக்கும்.

**கடகம்** அன்பு நண்பர்கள் ஆதரவு தர முன்வருவர், விவாகப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள்.

**சிங்கம்** போட்டிக்கு மத்தியில் முன்னேற்றம் காணும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், சுவாரஸ்யமான நாள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும்.

**கன்னி** மாமன்,மைத்துனர் வழி ஒத்துழைப்புகள் கிடைக்கப் பெறுவீர்கள், உதிரி வருமானங்கள் பெருகும் நாள், வியாபாரத்தை விரிவுபடுத்த எடுத்த முயற்சி வெற்றி தரும், அரசு வழி உதவிகள் கிடைக்கும்.

**துலாம்** வருமானம் வரும் வழியைக் கண்டு கொள்வீர்கள், பெற்றோர் வழியில் பிரியம் கூடும், புதிய பொருட்கள் வாங்கும் எண்ணம் மேலோங்கும், உற்சாகத்தோடு பணி புரிவீர்கள்.

**விருச்சிகம்** உடன்பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்டுவர், வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரலாம், பாராட்டும் புகழும் கூடும் நாள், தொழில் முன்னேற்றத்திற்கு பெண் வழி ஒத்துழைப்புக்கள் கிடைக்கும்.

**தனுசு** தேகாரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் ஆதாயமுண்டு, வாக்கு மேன்மையுண்டு.

**மகரம்** தொழிலில் நீண்ட நேரம் பணி புரிய நேரிடலாம், வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டம் காட்டுவீர்கள், பயணங்கள் மேற்கொள்ளும் சூழ்நிலை ஏற்படலாம்.

**கும்பம்** சுப காரியங்களுக்கான செலவுகள் அதிகரிக்கும், இறைவழிபாட்டில் நாட்டம் செல்லும், தொழிலில் சில மாற்றம் செய்வது பற்றி அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள்.

**மீனம்** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள், அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும், பணப்புழக்கம் அதிகரிக்கும், தொலைபேசி மூலம் நல்ல தகவல்கள் வந்து சேரலாம்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.வரும் மின்சக்தி அமைச்சர் சம்பிக்க வலி.வடக்கிற்கு மின்சாரம் வழங்குவாரா?

## பாதிக்கப்பட்ட மக்கள் காத்திருப்பு

(யாழ்ப்பாணம்)

**மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க இன்று யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளார்.**

யாழ்ப்பாணத்திற்கு இன்று காலை வருகை தரும் அமைச்சர் சுன்னாகம், அச்சுவேலி, மறவன்புலோ, புங்குடுதீவு, நயினாதீவு போன்ற இடங்களுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இதேவேளை, வடக்கின் வசந்தம் திட்டத்தின் கீழ் சுமார் 5 ஆயிரத்துக்கும் அதிகமான குடும்பங்கள் மின்சார இணைப்புக்காக விண்ணப்பங்களைக் கொடுத்து விட்டு நீண்ட காலமாக மின்சாரம் வரும் என்ற நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர்.

இந்தத் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்தவர்களில் மிகவும் சொற்பமானவர்களுக்கே இதுவரை மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக வலிகாமம் வடக்குப் பகுதியில் மீள்குடியேற்றப்பட்ட குடும்பங்களே அதிகமாக இத்திட்டத்தின் கீழ் மின்சாரம் பெற விண்ணப்பித்துள்ளனர்.

இலவசமாக மின்சார இணைப்புக்கள் வீடுகளுக்கு வழங்கும் வகையில் இத்திட்டம் விளங்கியபோதும் மிகவும் காலதாமதமாவது மக்கள் மத்தியில் விரக்தியை ஏற்படுத்தியுள்ளது. இன்று யாழ்ப்பாணத்திற்கு வருகை தரும் மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் தமது கோரிக்கைகள் தொடர்பில் நடவடிக்கை எடுப்பாரா எனவும் அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இந்தப் பகுதி மக்கள் தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொடுக்கும் படியும் மின்சார இணைப்பு வேலைகளைத் துரிதப்படுத்தி மின்சாரத்தை விரைவாக பெற்றுத் தருமாறு கோரிக்கை விடுத்தும் ஜனாதிபதிக்கு அண்மையில் மகஜர் ஒன்றினை யாழ்.மாவட்ட அரச அதிபர் ஊடாக அனுப்பி வைத்திருந்தனர். இருப்பினும் எந்தவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும் அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

அத்தோடு இந்த வருட முற்பகுதியில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்தபோது அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க 2013 ஆம் ஆண்டு யாழ்.குடாநாடு பூராகவும் 24 மணி நேர சீரான மின்சாரம் வழங்கப்படும் என உறுதிபடத் தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ-6)

# ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளலாம்

(யாழ்ப்பாணம்)

உரிமை கோரப்படாத இரண்டு சைக்கிள்கள், போன்-1 ஆகியன கோப்பாய் பொலிஸாரால் மன்றில் பாரப்படுத்தப்பட்டுள்ளது. எனவே, உரியவர்கள் உரிய ஆதாரம் காட்டி பெற்றுக் கொள்ளலாம்.

6 மாத காலத்திற்குள் உரிமை கோர தவறும் பட்சத்தில் அவை அரசுடைமையாக்கப்படும் என்றும் யாழ்.நீதவான் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (அ)

# 'சிசு செரிய' பாடசாலை போக்குவரத்துச் சேவை

(யாழ்ப்பாணம்)

தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவினால் பாடசாலை மாணவர்களுக்கென போக்குவரத்து சேவையினை மேற்கொள்ளும் முகமாக அறிமுகப்படுத்தப்பட்ட "சிசு செரிய" போக்குவரத்துச் சேவை தொடர்பான விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதிவரை யாழ்.மாவட்ட செயலக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அலுவலகத்தால் விநியோகிக்கப்படும்.

இலங்கை போக்குவரத்து சபையினரின் சேவை வழங்கப்படுகின்ற வழிகளிலே சேவையில் ஈடுபடுகின்ற பேருந்துகளுக்கே வழியனுமதி வழங்கப்படவுள்ளது. இதற்காக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்கள் கடைப்பிடிக்கப்படும்.

சேவையாற்ற வேண்டிய வழி இலக்கங்கள் பற்றிய மேலதிக விபரங்களை செயலக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் அறிவித்துள்ளார். (அ)




# எழுதுமட்டுவாழ் மீள்குடியேற்ற கிராமத்தில் நீர் தட்டுப்பாடு

எழுதுமட்டுவாழ் பிரதேசத்தில் அரசினால் மீள்குடியேற்றத்திற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும் தமக்கு வடக்கின் வசந்தம் வீசவில்லை என்று மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஏற்கனவே இப்பகுதியில் 500 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இருந்ததாகவும் தற்போது 50 குடும்பங்களே மீளக்குடியமர்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மீளக் குடியமர்ந்த மக்களுக்கு தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுப்பதில் பாரபட்சம் காட்டப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

குடிநீர் வசதிகள் உள்ளிட்ட ஏனைய வசதிகளை உடனடியாக ஏற்படுத்தித்தந்து இப்பகுதி மக்களின் நலனில் அக்கறை காட்டுமாறு மக்கள் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-9-254)

# பொலிஸாரால் பாதிக்கப்படும் மக்கள் முறையிட வாய்ப்பு

## தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் வடமாகாண பணிப்பாளர் தகவல்

(யாழ்ப்பாணம்)

காணிப்பிரச்சினைகள் தொடர்பில் அதிகளவிலான மக்கள் ஆலோசனைகளை பெற்றுச் செல்கிறார்கள் என தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் வடமாகாண அலுவலகப் பணிப்பாளர் க.சிறிதரன் தெரிவித்தார்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் வடமாகாண அலுவலகம் யாழ்.மாவட்ட செயலகத்தில் இயங்கி வருகின்றது.

பொலிஸாரால் பாதிப்படையும் பொது மக்கள் தமது முறைப்பாடுகளை பதிவு செய்தால் குறித்த பொலிஸாருக்கு எதிராக பொலிஸ்மா அதிபர் ஊடாக எமது ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கும்.

ஆனால் எமது அலுவலகம் தனது செயற்பாடுகளை ஆரம்பித்து இதுவரை பொலிஸாருக்கு எதிராக எந்தவித முறைப்பாடும் பொதுமக்களினால் முன்வைக்கப்படவில்லை.

மாறாக காணிப்பிரச்சினைகள் தொடர்பில் ஆலோசனைகளை பெறுவதற்கு வருகை தந்து ஆலோசனைகளை பெற்றுச் செல்கின்றனர் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# தமது கடமையை செய்ய தவறும் அதிகாரிகள் குறித்து முறையிடலாம்

## யாழ்.அரச அதிபர் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

மக்களிடமிருந்து வரும் முறைப்பாடுகள் மிகவும் குறைவடைந்துள்ளதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

அத்தோடு அரசாங்க அதிகாரிகள் தமது கடமைகளை சரிவர செய்யத் தவறினால் தமக்கு எழுதி அனுப்பும் படியும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மக்கள் முறைப்பாட்டுபெட்டி யாழ்.மாவட்ட செயலகத்தில் வைக்கப்பட்டுள்ளது. அதிலும் தமது முறைப்பாடுகளை எழுதி இடமுடியும்.

அதிகாரிகள் பொது மக்களுக்குரிய சேவையினை செய்யத்தவறினால் பொதுமக்களிடமிருந்து முறைப்பாடு கிடைத்தால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அரசாங்க அதிபராக நான் பதவியேற்ற போது மக்களிடமிருந்து முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றன. அது தொடர்பில் உரிய நடவடிக்கையினை மேற்கொண்டிருந்தேன்.

ஆனால் தற்போது மக்களிடமிருந்து வரும் முறைப்பாடுகள் குறைவடைந்துள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (அ-6)

# நீரியல் வள திணைக்களத்துடன் கடற்படை அதிகாரி சந்திப்பு


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மீனவர்களின் பாதுகாப்பு மற்றும் அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் யாழ்.கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உத்தியோகத்தர்களுடன் இலங்கை கடற்படையின் வடமாகாண இணைப்பதிகாரி ஜனந்த டி சில்வா கலந்துரையாடியுள்ளார்.

இக்கலந்துரையாடல் நேற்றுக்காலை 10 மணிக்கு ஆரம்பமாகி சுமார் 2 மணி நேரம் நீடித்திருந்தது.

இதில் கடற்படையினரின் பாதுகாப்பு கெடுபிடிகள் மற்றும் கடற்றொழில் ஊழியர்களின் பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டுள்ளது.

இக்கலந்துரையாடலில் யாழ்.கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (அ-4)









சர்வதேச இந்துமத குருபீடம் நடத்திய 15 ஆவது ஆண்டு ஆன்மீகப் பெருவிழா கடந்த 24 ஆம் திகதி தொடக்கம் நேற்று முன்தினம் வரை நடைபெற்றது. கோண்டாவில் ஆசிமட அரசடி விநாயகர் கல்யாண மண்டபத்தில் நடைபெற்ற இறுதிநாள் நிகழ்வில் தென்னிந்திய பிரபல திரைப்பட நடிகர் சரத்பாபு மாலை அணிவித்து வரவழைத்து வரப்படுவதையும் நடன நிகழ்வையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- அலுவலகச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுயநினைவற்ற நிலையில் மற்றொரு அரசியல் கைதி

## மனோகணேசன் தகவல்



(கொழும்பு)

கொழும்பு மகசின் சிறைச்சாலையிலிருந்து வழக்கு விசாரணைக்காக காலி நீதிமன்றிற்குக் கொண்டு செல்லப்பட்ட சுந்தரம் சதீஷ்குமார் (வயது 34) வலது காது பகுதியில் கட்டு போடப்பட்ட நிலையில் காலியில் உள்ள கராபிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். அவர் கீழே விழுந்ததால் இந்த காயம் ஏற்பட்டதாக நேற்று முன்தினம் அவரை சென்று பார்வையிட்ட கைதியின் மனைவியிடம் அதிகாரிகள் தெரிவித்ததாக கைதியின் மனைவி என்னிடம் தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீரவை நேற்று தொலைபேசியில் நேரடியாக தொடர்பு கொண்டு அரசியல் கைதி சதீஷ்குமாரை உடனடியாக காலி கராபிட்டிய வைத்தியசாலையிலிருந்து கொழும்பு பொது வைத்தியசாலைக்கு கொண்டு வர ஆவன செய்யும்படி கூறியுள்ளதாக மக்கள் கண்காணிப்பு அழைப்பாளரும் ஜனநாயக மக்கள் முன்னணித் தலைவருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மனோகணேசன் மேலும் தெரிவித்ததாவது,

கொல்லப்பட்ட தமிழ் கைதிகள் நிமலரூபன், டெல்றொக்சன் ஆகியோரை அடுத்து தற்போது சதீஷ்குமாருக்கு ஏற்பட்டுள்ள இந்த நிலை தமிழ் அரசியல் கைதிகளின் பரிதாப நிலைமையினை படம் பிடித்து காட்டுகின்றது.

கொழும்பிலிருந்து நல்ல நிலைமையில் வழக்கு விசாரணைக்காக காலிக்கு அழைத்துச் செல்லப்பட்ட இந்த கைதி எவ்விதம் சுயநினைவற்ற நிலைமையில் கராபிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பது பற்றி குழப்ப நிலை நிலவுகின்றது.

அவரது வழக்கை முன்னெடுக்கும் சட்ட மற்றும் மனிதவுரிமை நிறுவனத்திற்கும் நான் இதுபற்றி அறிவித்துள்ளேன்.

மக்கள் கண்காணிப்பு குழுவின் உறுப்பினரும் எம்.பியுமான சுரேஷ் பிரேமச்சந்திரனின் கவனத்திற்கு கைதியின் மனைவி இது தொடர்பில் தகவல்களை அறிவித்த நிலையிலேயே இந்த விடயம் எனது கவனத்திற்கு வந்துள்ளது என்றார். (அ-2)

# நுரைச்சோலை மீண்டும் இயங்கும்

(கொழும்பு)

தொழில்நுட்பக்கோளாறினால் கடந்த பல நாட்களாக செயலிழந்த நுரைச்சோலை அனல்மின்நிலையம் மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளதாகவும் இதனால் விரைவில் மின்வெட்டு முடிவுக்கு வரும் எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இம்மின்நிலையத்தின் மின்னுற்பத்தி கொள்ளளவு இன்று மீள்மதிப்பீடு செய்யப்படும் எனவும் 300 மெகாவோட் எனும் அதிகபட்ச மின்னுற்பத்தியை மேற்கொள்ளும் நிலையில் அந்நிலையம் தற்போது இயங்கவில்லை எனவும் இலங்கை மின்சார சபையின் தலைவர் பேராசிரியர் விமலதர்ம அபேவிக்கிரம தெரிவித்துள்ளார்.

எனினும் படிப்படியாக மின்னுற்பத்தி அதிகரிக்கப்படும் எனவும் மின்வெட்டு தொடர்பாக இன்றையதினம் தீர்மானிக்கப்படும் எனவும் அவர் கூறினார். (அ-2)

# விரல் துண்டிப்பு தொடர்பாக விசாரணை

பேராதனை சிறுவர் வைத்தியசாலையில் பிறந்த குழந்தை ஒன்றின் விரல் துண்டிக்கப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

கடந்த வாரம் பிறந்து ஏழு நாட்கள் மட்டுமே ஆன குழந்தையின் கட்டை விரல் துண்டிக்கப்பட்டது. வைத்தியசாலை தாதியின் கவனயீனத்தால் குழந்தையின் விரல் துண்டிக்கப்பட்டதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. இந்நிலையில் சுகாதார அமைச்சின் செயலாளர் டாக்டர் நிமால் ஜயதிலக்கவின் ஆலோசனையின்படி விசாரணைகள் நடைபெற்று வருகிறன. (அ-2)

# ராஜீவின் அமைதி உடன்படிக்கை வீணாவதற்கு வைகோவும் காரணம்

## தி.மு.க. பொதுச்செயலாளர் அன்பழகன் குற்றச்சாட்டு

ஈழத்தமிழர்களுக்கு நன்மை செய்யும் அமைதித் திட்டத்தை தடுத்ததில் வைகோவுக்கும் பங்கு உண்டு என்று திருப்பூரில் நடைபெற்ற டெசோ மாநாட்டு தீர்மான விளக்கக்கூட்டத்தில் தி.மு.க.பொதுச் செயலாளர் க.அன்பழகன் தெரிவித்துள்ளார்.

திருப்பூரில் நடைபெற்ற டெசோ மாநாட்டு தீர்மான விளக்கக்கூட்டத்தில் அவர் உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஈழத்தமிழர்கள் வாழ்வுக்காக டெசோ மாநாடு நடத்தப்பட்டது. இங்குள்ள தமிழர்களுக்கும் இலங்கைத் தமிழர்களுக்கும் தொப்புள்கொடி உறவு உள்ளது. ஈழத்தமிழர்களை சிங்களவர்கள் வீழ்த்தியதாலும் அமைதி வழிப் போராட்டத்தில் பலன் இல்லாமல் போனதாலும் விடுதலை இயக்கங்கள் தீவிரவாதத்திலும் போரிலும் ஈடுபட்டன.

ஈழத்தமிழர் போராட்டக்குழுக்கள் தங்களுக்குள் சண்டையிட்டு சகோதர யுத்தத்தில் ஈடுபடாதீர்கள் என கருணாநிதி கூறினார். ராஜீவ்காந்தி பிரதமராக இருந்தபோது அமைதி வழியில் தீர்வுகாண முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அந்தச் சமயத்தில் சென்னையில் ஈழப் போராட்டக் குழுத் தலைவரை பிரபாகரன் இயக்கத்தினர் சுட்டுக்கொன்றனர்.

இதன் விளைவாக ஈழத்தமிழருக்கான பயன்தரும் அமைதித்திட்டம் தடுமாறிப்போனது. மேலும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் வைகோ கள்ளத்தோணி மூலமாகச் சென்று பிரபாகரனைசந்தித்தார்.

ராஜீவ்காந்தியால் கொண்டுவரப்பட்ட ஈழத் தமிழர்களுக்கான அந்த அமைதித்திட்டத்தை நிறைவேற்ற முடியாமல் போனதற்கு வைகோவுக்கும் பங்குண்டு. இப்போது டெசோ மாநாடு எதற்கு எனக் கேட்கின்றனர்.

ஈழத்தமிழர்கள் மனிதவுரிமை அடிப்படையில் வாழமுடியவில்லை என்று ஐ.நா. சபையின் மனிதவுரிமை பாதுகாப்புக்குழு அதைக் கையில் எடுத்துள்ளது. இத்தகைய தருணத்தில் ஈழத்தமிழர்களுக்கு மேலும் நடக்கும் கொடுமைகளை தடுத்து நிறுத்த தமிழக மக்களும் குரல் கொடுக்கவேண்டும் என்பதற்காகத்தான் டெசோ மாநாடு நடத்தப்பட்டது. டெசோ மாநாட்டு தீர்மானம் ஐ.நா.சபைக்கு எட்டும் என்றார். (அ-2)

# மனித தன்மைகளுக்கு மதிப்பளிக்காத சமூகம் ஒன்று உருவாகி வருகின்றது

## கரு ஜயசூரிய எம்.பி. வேதனை

(கொழும்பு)

தற்பொது சமூகம் மனித தன்மைகளுக்கு மதிப்பளிப்பதில்லை எனவும் பணத்திற்கும் அதிகாரத்திற்குமே மதிப்பளித்து வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்கள் பல்வேறு பிரச்சினைகள் காரணமாக வீதியில் இறங்கி போராடி வருகின்றனர். பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இதனை தவிர வீடுகளில் மக்களுக்கு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. இந்தப் பிரச்சினைகளுக்கு அரசாங்கத்திடம் தீர்வில்லை. இந்த பிரச்சினைகளுக்கு நாட்டின் ஆட்சியாளர்கள் செவி கொடுக்க வேண்டும்.

இலங்கையில் இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதில்லை. எரிமலைகள் இல்லை. மண்சரிவுகள் ஏற்படுவதில்லை. இதனால் நாட்டை நல்ல முறையில் அபிவிருத்தி செய்ய முடியும். நாட்டின் துரதிர்ஷ்டம் காரணமாக நாட்டின் தற்போதைய ஆட்சியாளர்கள் இதனை உணர்ந்து கொள்ளவில்லை.

நாட்டை அதளபாதாளத்திற்கு கொண்டு செல்வதா இல்லையா என்று தீர்மானிப்பதற்கான காலம் எழுந்துள்ளது. மனச்சாட்சிக்கு இணங்க முடியாத வெள்ளை வான் கடத்தல்கள் இடம்பெறும் சமூகமாக நாட்டு சமூகம் மாறியுள்ளது.


இன்று பத்திரிகைகளைப் பார்த்தால் பாலியல் வல்லுறவு, சிறுவர் துஷ்பிரயோகம், பாரிய கொலை சம்பவங்கள் போன்ற செய்திகளே பிரதான இடத்தை பிடிக்கின்றன. இந்த நிலைமையை மாற்ற வேண்டுமானால் பிள்ளைகளை ஒழுக்கம் மிக்கவர்களாக உருவாக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)


மணமகள் தேவை **கல்யாண மாலை** மணமகன் தேவை

| மணமகள் தேவை | மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:- 1982 இந்து செட்டியார்<br>நட்சத்திரம்:-அத்தம் 4<br>உயரம்:-5'5"<br>கி.பா:-54, 7 இல் செவ்வாய்<br>தொழில்:-சொந்த நகை வேலைப் பட்டறை B/372 | பிறப்பு:- 1967 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- ஆயிலியம் 1<br>உயரம்: 5'<br>கி.பா:-39.5, 12 இல் செவ்வாய்<br>எதிர்பார்ப்பு:-விவாகரத்தானவர்களும் விண்ணப்பிக்கலாம் G/211 |
| பிறப்பு:- 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- சித்திரை 4<br>உயரம்:-5'4"<br>கி.பா:-4.5<br>தொழில்:-பொறியியலாளர் B/371 | பிறப்பு:- 1981 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- சுவாதி 3<br>உயரம்: 5'3"<br>கி.பா:-67.75, 7 இல் செவ்வாய்<br>தொழில்:-MBBS டாக்டர்<br>திருமண எழுத்து எழுதிக்குழம்பியது G/126 |
| பிறப்பு:-1982 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-உத்தரம் 4<br>உயரம்:-5'11"<br>கி.பா:-31.75, 8 இல் செவ்வாய்<br>தொழில்:-பொறியியலார் அவுஸ் PR B/363 | பிறப்பு:- 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:- சுவாதி 1<br>உயரம்: 5'3"<br>கி.பா:- 40, 8 இல் செவ்<br>தொழில்:-சுயதொழில் (விவகாகரத்துப் பெற்றவர் ஒரு பெண் குழந்தை உண்டு) G/150 |
| பிறப்பு:- 1979 இந்து வேளாளர்<br>நட்சத்திரம்:-மூலம் 1<br>உயரம்:-6'2"<br>கி.பா:-83.25, 7 இல் செவ்வாய்<br>தொழில்:-நிகழ்ச்சி உதவியாளர் Bsc B/351 | பிறப்பு:- 1977 இந்து<br>நட்சத்திரம்:- பூசம் 4<br>உயரம்: 5'5"<br>கி.பா:- 79, 1 இல் செவ்<br>தொழில்:- BA நிதி உதவியாளர்<br>விவாகரத்துப் பெற்றவர் G/148 |

சகல தொடர்புகளுக்கும்:-
**கல்யாண மாலை**
(சர்வதேச இலவச திருமண சேவை)
இல.144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E.mail:-kalyanamalai.jaffna@gmail.com
ஊடக அனுசரணை வலம்புரி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுன்னாகம் பொலிஸாரின் ஏற்பட்டில் நடத்தப்பட்ட சேவை கடந்த 25 ஆம் திகதி யா/ ஏழாலை மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நடமாடும் சேவையில் வைத்திய பரிசோதனை மேற்கொள்ளப்படுவதையும் இணக்க சபை பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரணை செய்து பதிவினை செய்வதையும் படங்களில் காணலாம்.

# நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஒழிக்கப்பட வேண்டும்

## பிக்குகள் முன்னணி வலியுறுத்து

(கொழும்பு)

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை உடனடியாக இல்லாதொழிக்கப்பட வேண்டுமென ஐக்கிய பிக்குகள் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக பதவி வகித்தாலும் நாடு பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்க நேரிடும் என ஐக்கிய பிக்குகள் முன்னணியின் தினியாவல பாலித தேரர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபை முறைமை மற்றும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை ஆகியவற்றை இல்லாதொழிக்க வேண்டுமென ஜனாதிபதி பதவியில் மஹிந்த ராஜபக்ஷவோ ரணில் விக்ரமசிங்கவோ பதவி வகித்தாலும் நிலைமையில் மாற்றம் இருக்காது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை நாட்டுக்கு அழிவையே தேடித் தருகிறது என்றார். (அ-2)

# பிரேதங்களால் நிறைகிறது களுபோவில வைத்தியசாலை

(களுபோவில)

களுபோவில போதனா வைத்தியசாலையில் ஒரு வருடத்துக்கு மேலாக உள்ள இரண்டு உடல்கள் உட்பட 21 உடல்கள் ஒன்றின்மேல் ஒன்றாக அடுக்கப்பட்ட நிலையில் உள்ளதாகவும் இதனால் நிர்வாகத்துக்கு பல பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது.

விபத்துக்களில் மரணமாகி உறவினரில்லாதவர்களால் கொண்டு வரப்பட்ட உடல்களும் இங்கு உள்ளன. பொய்யான பெயர்களை கொடுத்து உறவினர்களால் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டவர்களின் உடல்களும் இங்கு உள்ளன.

சொந்த பிள்ளைகள் கூட மாற்றுப் பெயரில் பெற்றோரை வைத்தியசாலையில் சேர்த்து விட்டு மாயமாகிவிட்ட சம்பவங்களும் உள்ளன என்றார். (அ-2)

GLOBAL VISA

நாம் கொழும்பில் இயங்கிவரும், வெளி நாடுகளில் உயர்கல்விக்கு மாணவர்களை அனுப்புதல் மற்றும் ஐரோப்பிய நாடுகளுக் கான வேலைவாய்ப்பு விசாக்களையும் ஒழுங்கு செய்து கொடுக்கும் நிறுவன-மாகும். எங்களோடு இணைந்து பணியாற்ற யாழ். குடாநாட்டில் இயங்கி வரும் முகவர்களை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு கொள்ளவும் - +94 11 465 1727
+94 777 886288

(சீ/844)

# பூநகரியில் 10 குளங்களை புனரமைக்கும் பணி ஆரம்பம்

(கிளிநொச்சி)

பூநகரி பிரதேசத்திலுள்ள பத்து குளங்களை புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்ட புனரமைப்பு பணிகள் ஒரு மாத காலப் பகுதிக்குள் பூர்த்தி செய்யப்படவுள்ளன.

இராணுவத்தின் பொறியியல் பிரிவினரால் முன்னெடுக்கப்படும் இந்த புனரமைப்புத்திட்டத்திற்கு தேவையான இயந்திர உதவிகளை பொருளாதார அபிவிருத்தி அமைச்சும் இயந்திரங்களுக்கான எண்ணெய் வசதிகளை வடமாகாண சபையும் வழங்குகிறது.

மேற்படி குளம் புனரமைக்கப்படுவதன் மூலம் இந்த பிரதேசத்திலுள்ள 800 குடும்பங்கள் நன்மையடையவுள்ளதுடன் விவசாயிகளும் பயனடையவுள்ளனர்.

மக்களின் நலன் கருதி இந்த திட்டம் முன்னெடுக்கப்படு வதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ-2)

# 47 சமாதான நீதவான்களுக்கான பதவியை பறிக்கிறது நீதியமைச்சு

(கொழும்பு)

கடந்த மார்ச்மாதம் நடைபெற்ற உள்ளூராட்சி சபைத்தேர்தலில் போட்டியிட வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்திருந்த வேட்பாளர்கள் வழங்கியிருந்த தவறான தகவல்களை சரியான தகவல்கள் என உறுதிப்படுத்தி சத்தியக் கடிதங்களை வழங்கிய 47 சமாதான நீதவான்களை அந்தப் பதவிகளில் இருந்து நீக்குமாறு தேர்தல் ஆணையாளர் மகிந்த தேசப்பிரிய விடுத்த கோரிக்கையை நிறைவேற்ற நீதியமைச்சின் செயலாளர் தீர்மானித்துள்ளார்.


வேட்புமனுக்களைத்தயாரிக்கும் போது பிறப்பத்தாட்சிப் பத்திரங்கள் மற்றும் வேட்பாளர்களின் கையெழுத்து ஆகியவற்றை உறுதிப்படுத்த சமாதான நீதவான்களிடம் சத்தியக் கடிதங்கள் சமர்ப்பித்து உறுதிப்படுத்த வேண்டும்.

கடந்த உள்ளூராட்சி சபைத்தேர்தலில் வேட்பு மனுக்களை தாக்கல் செய்த வேட்பாளர்கள் வழங்கிய தகவல்களை ஆராய்ந்து பார்க்காது சமாதான நீதவான்கள் அவற்றை உறுதிப்படுத்தியுள்ளனர்.

இது குறித்து விசாரணை நடத்துமாறு தேர்தல் ஆணையாளர் அண்மையில் நீதியமைச்சின் செயலாளருக்கு அறிவித்திருந்தார். இதனையடுத்து விசாரணைகளை நடத்திய அமைச்சின் செயலாளர் சமாதான நீதவான்களை அந்தப் பதவிகளிலிருந்து நீக்க முடிவு செய்துள்ளார். இது குறித்து நீதியமைச்சு சமாதான நீதவான்களுக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளது. (அ-2)

# 31ம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி கிரியையும்

அன்னை மடியில்
05
10
1962



இறைவனின் அடியில்
30
07
2012

## அமரர் சந்திரலிங்கம் (துரைச்சி) சகுந்தலாதேவி

கடந்த (30.07.2012) திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவைக் கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் ஆறுதல் கூறி எமது துயரில் பங்கேற்ற உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு நாளை (29.08.2012) புதன்கிழமை கல்லூரி வீதியில் அமைந்திருக்கும் மண்டபத்தில் நடைபெறும் கிரியையிலும் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

துரைச்சி, ஓடக்கரை,
பருத்தித்துறை

(சி/842)

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுமதிப்பத்திரமற்ற
# பேருந்து சேவைகளை கட்டுப்படுத்த முடியவில்லை
## போக்குவரத்து ஆணைக்குழு தகவல்

(கொழும்பு)

அனுமதிப்பத்திரம் இன்றி கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கு பேருந்து சேவைகளை நடத்துபவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முடியாதிருப்பதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறு பாதுகாப்பு தரப்பினர் மற்றும் அரசியல் வாதிகளே பெரும்பாலும் அனுமதிப்பத்திரம் இன்றி பேருந்து சேவைகளை நடத்துவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்க செல்லும் போது பல்வேறு அழுத்தங்களுக்கு முகம்கொடுக்கவேண்டி இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து ஆணைக்குழுவின் சில அதிகாரிகளுக்கு அவர்களால் மரண அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான பேருந்துகளுக்கு எதிராக எந்த நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது போகலாம் என்ற தகவல் வெளியாகியுள்ளது. (அ-2)

# பிள்ளையானுக்கு நான் இட்ட பிச்சையே முதலமைச்சர் பதவி
## இப்படிக் கூறுகிறார் கருணா

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் கடந்த முறை பிள்ளையான் முதலமைச்சரானது எனது கருணையினால் தான். ஆனால், இம்முறையும் முதலமைச்சர் பதவி தனக்குத்தான் என நினைப்பது வெறும் பகல் கனவு என பிரதியமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டு. வாழைச்சேனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேலுள்ளவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 2008 ஆம் ஆண்டு நடைபெற்ற கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் நான் போட்டியிடவில்லை. இதன் காரணமாகத்தான் பிள்ளையான் முதலமைச்சராக வந்தார். எனவே, அவர் வகித்த முதலமைச்சர் பதவியானது நான் போட்ட பிச்சை. இதை மறந்து விட்டுத்தான் அவர் தற்போது எனது சகோதரிக்கு எதிராக பிரசாரம் செய்து திரிகின்றார்.

எனது சகோதரியின் கல்வித் தரத்துடன் பிள்ளையானை ஒப்பிட முடியாது. அது ஒரு பெரிய மலைக்கும் ஆழமான மடுவிற்கும் உள்ள வித்தியாசமாகும்.

தமிழர் ஒருவர் முதலமைச்சராக வருவதனால் அது எனது சகோதரி ருத்திரமலராகத்தான் இருக்குமே தவிர பிள்ளையான் இல்லை. ஆனால், மீண்டும் தானே முதலமைச்சர் என பிள்ளையான் பகல் கனவு காண்கின்றார். இது இவரின் அறியாமையைக் காட்டுகின்றது என்றார். (அ-2)

# முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் கட்சியிலிருந்து விலகாது
## ஹசன் அலி தெரிவிப்பு

(கொழும்பு)

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆளும் கட்சியிலிருந்து விலகிச் செல்லாது என கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் உள்ளிட்ட சிரேஷ்ட தலைவர்கள் ஆளும் கூட்டணியிலிருந்து விலகவுள்ளதாகவும் அமைச்சு, பிரதி அமைச்சுப் பதவிகளைத் துறக்கவுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

எனினும், இந்தத் தகவல்களில் எவ்விதமான உண்மையும் கிடையாது. வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதன் பின்னர் இதுவரையில் அதி உயர்பீட கூட்டங்கள் எதுவும் நடத்தப்படவில்லை. கட்சியின் உறுப்பினர்கள் ஆளும் கட்சியை விட்டு விலகுவாக வெளியான தகவர்களில் உண்மையில்லை.

எவ்வாறெனும் தனிப்பட்ட காரணங்களுக்காக முஸ்லிம் காங்கிரசின் பசீர் சேகுதாவுத் பதவியை இராஜினாமா செய்தார் என ஹசன் அலி குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# சங்காபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தர்மடம் ஆத்திசூடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த 14ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து திருவிழா நடைபெற்று வருகின்றது.

இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு சங்காபிசேகமும் பிற்பகல் 4 மணிக்கு திருவூஞ்சலும் நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதியுலா வருதலும் நடைபெறவுள்ளதாக ஆலய பரிபாலன சபை அறிவித்துள்ளது. (அ-2)




★1349-கொள்ளை நோயைக் காரணம் காட்டி ஜேர்மனியின் மாயின்ஸ் நகரில் 6 ஆயிரம் யூதர்கள் படுகொலை செய்யப்பட்டனர்.

★1511-போர்த்துக்கீசர்கள் மலாக்காவைக் கைப்பற்றினர்.

★1521-ஓட்டோமான் துருக்கியர் பெல்கிரேட் நகரைக் கைப்பற்றினர்.

★1619- ஜேர்மனியின் இரண்டாம் பேர்டினண்ட் புனித ரோமப் பேரரசன் ஆனான்.

★1789-வில்லியம் ஹேர்ச்செல் சனிக்கோளின் புதிய சந்திரனைக் கண்டுபிடித்தார்.

★1844-பிரெட்ரிக் எங்கெல்ஸ் மற்றும் கார்ல் மார்க்ஸ் இருவரும் பாரிசில் சந்தித்தனர்.

★1845-சயன்டிஃபிக் அமெரிக்கன் முதலாவது இதழ் வெளிவந்தது.

★1849-ஒரு மாதகால முற்றுகையின் பின்னர் வெனிஸ் நகரம் ஆஸ்திரியாவிடம் வீழ்ந்தது.

★1867-ஐக்கிய அமெரிக்கா மிட்வே தீவைப் பிடித்தது.

★1879-சூளுக்களின் கடைசி மன்னன் செட்ஸ்வாயோ பிரித்தானியர்கனினால் சிறைபிடிக்கப்பட்டான்.

★1898-காலெப் பிராடம் தான் கண்டுபிடித்த மென்பானத்திற்கு பெப்சி கோலா எனப் பெயரிட்டார்.

★1913-நெதர்லாந்தின் அரசி வில்ஹெல்மினா த ஹேக் நகரில் அமைதி அரண்மனையைத் திறந்தார்.

★1916-முதலாம் உலகப் போர்: ஜேர்மனி ருமேனியா மீதும் இத்தாலி ஜேர்மனி மீது போரை அறிவித்தன.

★1922- ஜப்பான் சைபீரியாவில் இருந்து தனது படைகளை விலக்கச் சம்மதித்தது.

★1924-சோவியத் ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக ஜோர்ஜியர்கள் கிளர்ச்சியை ஆரம்பித்தனர்.

★1931-பிரான்சும் சோவியத் ஒன்றியமும் போர் தவிர்ப்பு ஒப்பந்தத்தை ஏற்படுத்தின.

★1943-நாசி ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக டென்மார்க்கில் பொது வேலை நிறுத்தம் ஆரம்பமானது.

★1963-மார்ட்டின் லூதர் கிங் 2 இலட்சம் பேருடன் **என் கனவு யாதெனில்** என்ற புகழ்பெற்ற வார்த்தைகளுடன் சொற்பொழிவாற்றினார்.

★1964-பிலடெல்பியாவில் இனக்கலவரம் ஆரம்பித்தது.

★1979-ஐ.ஆர்.ஏயின் குண்டு ஒன்று பிரசல்சில் வெடித்தது.

★1988-ஜேர்மனியில் வான வேடிக்கை விழா ஒன்றின் போது மூன்று விமானங்கள் மோதி பார்வையாளர்கள் மீது வீழ்ந்ததில் 75 பேர் கொல்லப்பட்டு 346 பேர் படுகாயமடைந்தனர்.

★1991-சோவியத்திடம் இருந்து உக்ரைன் விடுதலை பெற்றது.

★1991-மிக்கைல் கொர்பச்சோவ் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலர் பதவியில் இருந்து விலகினார்.

★1996-வேர்ஸ் இளவரசர் சார்ள்ஸ் இளவரசி டயானா மணமுறிவு ஏற்பட்டது.

★2006-திருகோணமலை சம்பூரில் 20 பொதுமக்கள் உயிரிழந்தனர்.

★2006-இலங்கையில் பத்தாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் முடிவடைந்தன.

### பிறப்புக்கள்

★1749-ஜொஹான் வூல்ப்காங் ஃபொன் கேத்தா, ஜேர்மனிய எழுத்தாளர், அறிவியலாளர் (இ.1832)

★1828-லியோ டால்ஸ்டாய், உருசிய எழுத்தாளர் (இ.1910)

★1855- ஸ்ரீநாராயணகுரு, இந்து ஆன்மீகவாதி (இ.1928)

★1957-ஈவோ யொசிப்போவிச், குரோவாசியா அரசியல்வாதி

★1965- ஷானியா ட்வைன், கனேடிய நாட்டுப்புற பொப் பாடகர்

★1983-லசித் மாலிங்க, இலங்கைத் துடுப்பாட்ட அணியின் அதிவேகப் பந்து வீச்சாளர்


### இறப்புக்கள்

★430-புனித அகஸ்டீன், மெய்யியலாளர் (பி.354)

★**1891-ராபர்ட் கால்டுவெல், பிரித்தானியத் தமிழறிஞர் (பி.1814)**

★1973- முகவை கண்ண முருகனார், கவிஞர், தமிழறிஞர் (பி.1890)

### ராபர்ட் கால்டுவெர்



கால்டுவெல் என்று அழைக்கப்படும் ராபர்ட் கால்டுவெல் திராவிட மொழி நூலின் தந்தை எனப் போற்றப்படுபவர். திராவிட மொழிகளின் தனித்துவத்தை நிலை நிறுத்தியதில் பெரும்பங்கு இவருடையதே.

**இளமைக் காலம்**

இவர் 1814 ஆம் ஆண்டு மே மாதம் அயர்லாந்தில் பிறந்தார். இளமையிலேயே சமயப் பற்று மிக்கவராகக் காணப்பட்டார். தொடக்கத்தில் தானாகவே கல்வி பயின்ற இவர் பின்னர் கிளாஸ்கோ பல்கலைக்கழகத்தில் இணைந்து கல்வி பயின்றார். அவருக்கு 24 வயதாக இருந்தபோது லண்டன் மிஷனரி சொசைட்டி என்னும் கிறிஸ்தவ மதக் குழுவினருடன் சேர்ந்து மதத்தைப் பரப்புவதற்கென்று 1838 ஜனவரி 8 ஆம் திகதி சென்னைக்கு வந்து தமது மதப்பணியைத் தொடங்கினார். பின்னர் இவர் நற்செய்தி பரப்புவதற்கான சபை எனும் குழுவினருடன் இணைந்து கொண்டார்.

1841 இல் குரு பட்டம் பெற்று திருநெல்வேலி சென்று அங்கே இடையன் குடி என்னும் ஊரில் தங்கி 50 ஆண்டுகள் தமது மதப்பணியுடன் சேர்த்து தமிழ்ப்பணியும் செய்தார். இவர் ஆங்கில மொழியில் ஆக்கிய திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூல் உலகெங்கும் இவருக்கு மிகுந்த புகழ் ஈட்டித்தந்தது. தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகள் எல்லாம் ஓரினத்தைச் சேர்ந்தவை என்பதை இந்நூல் மூலம் உலகம் ஒப்ப விளக்கிச் சொன்னார்.

**இயற்றிய தமிழ் நூல்கள்**

நற்கருணை தியான மாலை (1853), தாமரைத் தடாகம் (1871), ஞான ஸ்நானம் (கட்டுரை), நற்கருணை (கட்டுரை)

**இயற்றிய ஆங்கில நூல்கள்**

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், திருநெல்வேலியின் அரசியல் பொது வரலாறு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ குடியிருப்புக்களைக்கு சீனா 100 மில்லியன் டொலர் உதவி

## தமிழ் மக்களுக்கு வேதனை தருகிறது- சுரேஷ் எம்.பி.

(பூந்தோட்டம்)

**இலங்கையின் வடக்கு கிழக்கில் இராணுவக் குடியிருப்புக்களை நிறுவுவதற்கு 100 மில்லியன் அமெரிக்க டொலரை சீனா உதவியாக வழங்கவுள்ளதாக வெளிவரும் செய் திகள் தமிழ் மக்களுக்கு வேதனையளிக்கும் செயற்பாடாகும் என தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் உத்தியோகபூர்வ பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிக்கை வெளியிட்டுள்ளார்.**

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு,

வடக்கு கிழக்கு மாகாணத்தை இராணுவ ஆக்கிரமிப்பிற்குள் வைத்திருக்க வேண்டுமென்பதில் இலங்கை அரசாங்கம் மிகத் தீவிரமாக இருக்கின்றது. ஏற்கனவே திருமுறிகண்டியில் நான்காயிரம் ஏக்கருக்கு மேல் எடுக்கப்பட்டு அங்கு சீன உதவியுடனான இராணுவக்குடியிருப்புக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மன்னார் முள்ளிக்குளத்தில் கடற்படை முகாம் நிறுவப்பட்டுள்ளதுடன் கடற்படையினருக்கான குடியிருப்புக்களும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இப்பொழுது சீன அரசாங்கம் 100 மில்லியன் அமெரிக்க டொலர்களை கொடுத்து வடக்கு கிழக்கில் இராணுவத்திற்கான கட்டுமானங்களை புனருத்தாபனம் செய்வதற்கும் இராணுவக் குடியிருப்புக்களை உருவாக்குவதற்கும் நீண்டகால அடிப்படையில் இந்தக் கடனுதவி வழங்கப்படுகின்றது.

இலங்கையில் இரண்டு இலட்சம் இராணுவத்தினர் அதாவது இருபது பிரிவு இராணுவத்தினர் இருப்பதாக அரசாங்கம் கூறுகின்றது.

இதில் ஏறத்தாழ ஒரு இலட்சத்து ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் வடக்கு கிழக்கில் இருப்பதாக நம்பப்படுகிறது. இராணுவக் குடியிருப்புக்களை உருவாக்குவதன் மூலமும் அவர்களது குடும்பங்களை குடியேற்றுவதன் மூலமும் சிங்கள மக்களை குடியேற்றுவதன் மூலமும் வடக்கு கிழக்கின் குடிசனப் பரம்பலை மாற்றி பெரும்பான்மையாக வாழும் தமிழர்களை அவர்களது சொந்த இடங்களிலேயே சிறுபான்மையினமாக்கும் முயற்சிக்கு அரசாங்கம் வித்திடுகின்றது.

சீன் அரசாங்கம் திபெத்தில் சீனர்களை குடியமர்த்தி எவ்வாறு திபெத்தியர்களை சிறுபான்மையாக்குகின்றதோ அவ்வாறே இலங்கையிலும் தமிழ் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு கிழக்கில் தமிழ் மக்களை சிறுபான்மையாக்க முயற்சிக்கின்றது. சீன அரசாங்கத்தை பொறுத்தவரை தனது சொந்த நலன்களும் தனது நாட்டின் பாதுகாப்பும்தான் பிரதானமாக இருக்கின்றது. இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் தனது ஆதிக்கத்தை நிலைநிறுத்தவும் இந்திய உபகண்டத்தில் தனது கழுகுப்பார்வையை வைத்திருக்கவும் இலங்கையை ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரதேசமாக வைத்திருக்க முயற்சிக்கின்றது.

சீனாவின் இந்த செயற்பாடும் இலங்கை அரசாங்கத்தின் அதற்கான ஆதரவும் தமிழ் மக்களின் பாதுகாப்பிற்கும் இப்பிராந்தியத்தில் பதற்ற நிலைகள் உருவாகவும் வழிவகுக்கும் என்று தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நம்புகின்றது.

வடக்கு கிழக்கில் அமைதியும் சமாதானமும் நிலவுவது இந்தியாவின் பாதுகாப்பிற்கு முக்கியமானது. ஆனால் தொடர்ச்சியான சிங்கள இராணுவ ஆக்கிரமிப்பென்பது சமாதான சக வாழ்விற்கு எந்தவிதத்திலும் துணைபுரியாது.

ஆகவே இந்திய உபகண்டத்தையும் தென்னாசிய பிராந்தியத்தையும் தொடர்ச்சியான ஒரு பதற்ற நிலையில் வைத்திருப்பதற்கு சீனா முயற்சிப்பதும் அதற்கு இலங்கை ஆதரவளிப்பதும் ஒட்டுமொத்தமான இலங்கையின் எதிர்கால நலன்களுக்கு குந்தகமானது.

இலங்கை அரசாங்கம் தனது வெளிநாட்டுக் கொள்கையை சரியான திசை வழிக்கு இட்டுச் செல்லாவிட்டால் இந்தநாடு மேலும் பல பிரச்சினைகளுக்கு உள்ளாகலாம் என்பதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு சுட்டிக்காட்ட விரும்புகின்றது. இத்தகைய திட்டங்களை இலங்கை அரசாங்கம் உடனடியாக கைவிட வேண்டும். மேலதிகமான இராணுவங்கள் விலக்கிக்கொள்ளப்பட வேண்டும்.

இந்த விடயத்தில் இந்தியாவும் சரியான இராஜதந்திரத்தை கடைப்பிடிக்க வேண்டும் என்பதையும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு எதிர்பார்க்கின்றது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-2-266)

# இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு முஸ்லிம்களுக்கு ஏற்றதாக அமைய வேண்டும்

## இரா.சம்பந்தன் தெரிவிப்பு

(கொழும்பு)

ஆறு தசாப்தங்களுக்கு மேலாக நீடித்து வரும் இனப்பிரச்சினைக்கு சர்வதேச பங்களிப்புடன் காணப்படும் அரசியல் தீர்வு முஸ்லிம் மக்களுக்கும் ஏற்புடையதாக இருக்க வேண்டும் என்பதில் தமது கட்சி உறுதியான நிலைப்பாட்டை கொண்டிருக்கின்றது என்று தமிழ்த்தேசிய கூட்டமைப்பு தலைவரும் திருகோணமலை மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

திருகோணமலை பெரியகுளத்தில் கட ந்த சனிக்கிழமை மாலை நடைபெற்ற கூட்டமைப்பின் தேர்தல் பிரசாரக்கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமையுடன் நாம் பேசிக்கொண்டிருக்கின்றோம். தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையே நெருங்கிய உறவு இருக்க வேண்டும்.

கிழக்கு மாகாணசபைத் தேர்தலின் பின்னர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுடன் இணைந்து ஆட்சி அமைக்க நாம் தயாராக இருக்கின்றோம். தாராளமாக விட்டுக்கொடுத்து செயற்படுவதற்கு நாம் தயாராகவும் உள்ளோம்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்புக்கும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கும் இடையே நெருங்கிய உறவு இருக்க வேண்டும். நீதிக்காக போராடும் நாம் எவருக்கும் அநீதி இழைக்க மாட்டோம் என்றார். (அ-2)

# உயர்ஸ்தானிகர் பதவிகளில் தொடர் இடமாற்றங்கள்

## விசனத்தில் அதிகாரிகள்


லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகராலயத்தின் பிரதி தூதுவராக பணியாற்றி வரும் எம்.ஆர்.பி.லேனகல செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் பிரதி உயஸ்தானிகராக பேர்லினில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு இடமாற்றம் செய்யப்படவுள்ளார்.

லண்டனில் உள்ள இலங்கை தூதரகத்திற்கு 6 மாதங்களுக்கு முன்னர் நியமனம் பெற்றுச் சென்ற இந்த அதிகாரியை அவசரமாக இடமாற்றம் செய்துள்ளமை குறித்து லண்டனில் வாழும் இலங்கையர்கள் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

லண்டனுக்கான இலங்கை தூதுவராக கிறிஸ் நானிஸ் நியமிக்கப்பட்ட பின்னர் இடமாற்றம் செய்யப்படும் இரண்டாவது அதிகாரி லேனகல ஆவார். இதற்கு முன்னர் பிரதித்தூதுவராக பணியாற்றிய அம்சா பிரசல்ஸுக்கான இலங்கை உயர்ஸ்தானிகராக நியமிக்கப்பட்டார். அத்துடன் லண்டனில் உள்ள இலங்கை தூதரகத்தில் மக்கள் தொடர்பு அதிகாரியாக பணியாற்றிய நபர் கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டார்.

இதனை தவிர லண்டனில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகரின் இரண்டு செயலாளர்கள் தமது பதவிகளை தாமே இராஜினாமா செய்தனர்.. (அ-2)





வவுனியா தமிழ்ச்சங்கம் நடத்திய நால்வர் விழா ஆதிவிநாயகர் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அதிதிகள் மேடையில் அமர்ந்திருப்பதையும் வவுனியா மெய்கண்டான் ஆதீனக்குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சிவக்கொழுந்து சிவதேசிக ஞானப்பிரகாச பரமாச்சாரிய சுவாமிகள் வைய கம் துயர் தீர்க்கவே என்ற தொனிப்பொருளில் உரையாற்றுவதையும் கலந்து கொண்டோரில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:- பூந்தோட்டச் செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வரலாறு

23

# துட்டகாமினி மன்னன்


தூண்கள் மட்டும் எஞ்சியுள்ள ஆயிரங்கால் மண்டபம்

துட்டகாமினி இலங்கையின் மன்னனாக முடிபுனைந்த பின்னர், பௌத்த தேரர்களிடம் தன் மனத்துயரை வெளியிட்டான். "ஆயிரக்கணக்கானவர்களை எனது வாளுக்கு இரையாக்கியுள்ளேன்; என் மனதில் அமைதியில்லை" என வினவினான். "பௌத்தத்தை நம்பாதவர்கள், பைசாச வாழ்க்கையை அனுட்டிப்பவர்கள், விலங்குகளுக்குச் சமமாகக் கருதப்பட வேண்டும்" எனச் சங்கத்தினர் கூறினர். பரண்விதான தனது கட்டுரையில் இதனை "துட்டகாமினியால் கொல்லப்பட்டவர்கள் (தமிழர்). பௌத்தத்தில் நம்பிக்கையில்லாதவர்கள், பாவம் செய்தவர்கள், விலங்குகளிலும் மேலானவர்களல்லர். இவர்களைக் கொன்றால் பாவம் சேராது" என்கிறார் முழு இனவாதத்துடன். தமிழர்கள் மீதான அசூசையும், அவர்களை வெற்றி கொள்ள வேண்டும் என்ற விருப்பும் துட்டகாமினியின் நெஞ்சில் அவன் பெற்றோரான காக்கை வண்ணதீசனாலும், விகாரைமாதேவியாலும் சிறு வயதிலிருந்தே கனலாக எரியவிடப்பட்டுள்ளது. விகாரைமாதேவி நேரடியாகவும், காக்கைவண்ணதீசன் மறைமுகமாகவும் அக்கனலைக் கிளறி அணையாது பார்த்துக் கொண்டனர். "தமிழர் மீது படையெடுக்காதே. மகாகங்கைக்கு இப்பாலுள்ள நிலமே போதும்" என்று காக்கைவண்ணதீசன் கூறியதன் மூலம் அதற்கு மாறான எண்ணத்தை துட்டகாமினியின் மனதில் விதைத்தான். பிளவுபட்டிருந்த உருகுணையை ஒன்றாக்கியதன் மூலமும் பத்து மல்லர்களையும், ஆயிரக்கணக்கான சேனா வீரர்களையும் சேர்த்ததன் மூலமும் அவனே யுத்தத்திற்குக் காரணமாயினான். தன் மகன் துட்டகாமினியின் புகழால் தன் புகழ் துலங்காது போன துர்ப்பாக்கிய சாலி காக்கைவண்ணதீசன் என வரலாற்றாசிரியர்கள் கணிப்பர். காக்கை வண்ணதீசன் தன் காலத்தில் மேற்கொண்ட நடவடிக்கைகள் துட்டகாமினியின் வெற்றியை இலகுவாக்கின.

**துட்டகாமினியின் சமயப்பணிகள்**

"நான் அரசபோகங்களுக்காக எல்லாளனுடன் யுத்தத்தில் இறங்கவில்லை. பௌத்த சாசனத்தின் உன்னதத்திற்காகவே போர் தொடுக்கிறேன்" என்ற கவர்ச்சியான சுலோகத்தை முன் வைத்தான். அதன்படி தன் ஆட்சிக் காலத்தில் பௌத்த மேன்மைக்காக உழைத்தான். துட்டகாமினி 89 சமயக் கட்டடங்களை அமைத்துள்ளான்.



எல்லாளனின் வீழ்ச்சிக்குப்பின் துட்டகாமினியால் அமைக்கப்பட்டது -ருவான்வெலிசாய

துட்டகாமினி அனுராதபுரத்தில் நிறுவிய முதலாவது தூபி திசாவாவிக்கு அண்மையில் அவன் கட்டிய மிரிசுவட்டி தாது கோபமாகும். துட்டகாமினியின் முக்கிய சமய [illegible] கருதப்படுவது ருவான்வெலிசாய தாதுகோபமாகும். மகாதூபம், மகாசாயா ஆகிய பெயர்களாலும் இது அழைக்கப்படுகின்றது.


மிரிசுவட்டி தாதுகோபுரம்

வெசாக் விழாவை இலங்கையில் ஆரம்பித்து வைத்தவன் துட்டகாமினி ஆவான். பிக்குகளுக்குக் தானம் வழங்கியதோடு சமயக்கிரியைகளையும் இவ்விழாவில் ஆற்றினான். ருவான்வெலிசாயாத் தாதுகோபம் மகாதூபி எனப்படும். மகாவிகாரைக் கட்டத் தொகுதியில் மிக முக்கியமானது. மகாவிகாரையின் மத்தியில் அமைந்துள்ளது. இது துட்டகாமினியால் கி.மு. 137 இல் கட்டப்பட்டது. எனினும் இத்தூபி கட்டப்பட்டு முடிக்க முன்னரே துட்டகாமினி மரணமடைந்ததால் இதனை அவனது சகோதரனான சதாதீசன் கட்டி முடித்தான். மகாதூபியின் நான்கு மூலைகளிலும் சிறிய தூபிகள் அமைக்கப்பட்டுள்ளன. யானை சிற்ப மதில்களைக் கொண்டுள்ளது. நான்கு புறமும் வாகல்கட எனும் நுழை வாயில்களைக் கொண்டுள்ளது. பௌத்த சமயத்தின் முக்கிய பிரிவான தேரவாதபௌத்தத்தின் (ஹீனயான) ஒரே மத்திய நிலையமாக இது விளங்கியது. லோகமகாபாயா எனும் ஆயிரங்கால் மண்டபமும் துட்டகாமினியால் அமைக்கப்பட்டது. இது 1000 தூண்களையும் 100 அறைகளையும் 9 மாடிகளையும் கொண்டது. கட்டடத்தின் மத்தியில் ஒரு பொன் மண்டபம் இருந்தது. செப்பு ஒடுகளினால் இது வேயப்பட்டிருந்ததால் லோகமகாபாயா எனப்பட்டது. பிக்குமார் தங்கிச் சமயக் கிரியைகள் செய்யும் மண்டபம் இதுவாகும். இன்று கற்றூண்கள் மட்டும் எஞ்சியுள்ளன.

அனுராதபுர யுகத்தில் இந்து சமயம் இங்கு நிலைகொண்டிருந்தது. அதற்கு ஆதாரங்கள் உள்ளன. பண்டுகாபயன், பண்டுலன் என்ற பிராமணனிடம் கல்வி கற்றுள்ளான். வலகம்பாகுவின் காலத்தில் தீசன் என்ற பிராமணன் நாட்டில் கலவரங்களை ஏற்படுத்தியுள்ளான். சிவன், விஷ்ணு, பத்தினி, கந்தன் ஆகிய தெய்வங்களுக்கு இங்கு தேவபூசைகள் இருந்துள்ளன. இலங்கையில் மகாதீர்த்தம் (மாந்தை), கோகர்ணம் (திருகோணமலை), நகுலேஸ்வரம் (யாழ்ப்பாணம்), முன்னேஸ்வரம் (சிலாபம்), தொண்டேஸ்வரம் (மாத்தறை-தேவேந்திரமுனை) ஆகிய ஐந்து இடங்களில் சிவதேவாலயங்கள் இருந்துள்ளன. அவை முறையே திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம், நகுலேஸ்வரம், முன்னேஸ்வரம், தொண்டேஸ்வரம்; என வழங்கப் பட்டன. சிவன், விஷ்ணு, பிரம்மா ஆகிய மும்மூர்த்திகளுக்கு வழிபாடு செய்தல் இருந்துள்ளது.

துட்டகாமினியால் எல்லாளனுக்காக அமைக்கப்பட்ட நினைவுத்தூபி (தக்கிணதூபி)


(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரோக்கியம் தரும் அன்றாட உணவுகள்

நமது உடல் பாதுகாப்பாக இயங்க பத்து சிறந்த உணவுகள் உள்ளன. காற்று, நீர் மூலம் பரவும் நோய்த் தொற்றை மிகவும் சுத் தமான மனிதர் கூடத் தடுக்க முடியாது. நாம் சாப் பிடும் முக்கியமான உணவு வகைகள் நமது உட லில் சேரும் இத்தகைய நோய் நுண்மங் களை எளிதில் தடுத்து அழித்து விடும்.

நோய் பரவுவதைத் தடுக்கும் பத்து சிற ந்த உணவுகள் தொடர்பான விபரங்கள் வருமாறு,

### வெள்ளைப் பூண்டு

பண்டைய எகிப்திலும் பாபிலோனியா விலும் அற்புதங்களை விளைவித்துக் குண மாக்கிய மண்ணடித் தாவரம் இது.

கிரேக்கத் தடகள வீரர்கள் விரைந்து ஓட ஊக்கம் தரும் மருந்தாக வெள்ளைப் பூண்டை கைகளில் அழுத்தித் தடவிக் கைகளைக் கழு வினார்கள். இதனால் நோய் நுண்மங்கள் அழிந்தன. குடலில் உள்ள புழுக்களிலிரு ந்து மற்றும் தலைவலி முதல் புற்றுநோய் வரை பல நோய்களையும் குணமாக்க வெள்ளைப்பூண்டு பயன்படுத்தப்படுகிறது.

அறிவியல் முடிவுகளால் கூட வெள்ளைப் பூண்டின் பெருமையை மங்கச் செய்ய முடியவில்லை. உடலில் நன்மை செய்யக் கூடிய கொலஸ்ரோல் உருவாக பூண்டின் பங்கு மகத்தானது.

### வெங்காயம்

வெள்ளைப் பூண்டுடன் சேர்ந்து வல் லமை மிக்க புகழ்மிக்க மருந்தாக வெங் காயம் செயற்பட்டு வருகிறது.

ஜலதோஷத்தை ஏற்படுத்தும் நச்சு நுண் மங்களையும் புற்று நோய்களையும் இதய நோய்களையும் தடுத்து நிறுத்துகிறது. நோய்த் தொற்றைத் தடுத்து உடலில் நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது.

வெங்காயத்தில் உள்ள அலிலின் என்ற இரசாயனப் பொருள்தான் பக்றீரியாக்கள், நச்சு நுண்மங்கள், காளான் போன்றவை உடலில் சேராமல் தடுக்கின்றன. இத்துடன் புற்று நோய்க் கட்டிகள் வளராமலும் தடுக்கின்றன.



### கரட்

நோய் எதிர்ப்புச் சக்தி வேலிகள் நன்கு உறுதிபட கரட்டில் உள்ள பீட்டா கரோட்டின் உதவுகிறது.

குறிப்பாக நம் உடல் தோலிலும் சளிச் சவ்விலும் நோய் எதிர்ப்புப் பொருட்கள் நன்கு செயற்படும்படி தூண்டிக் கொண்டே இருப் பது கரட் தான்.




### ஒரேஞ்

விற்றமின் சி ஒருமுகப்படுத்தப்பட்டு சேக ரித்து வைக்கப்பட்டுள்ளது.

இப்பழத்தில் இன்டர்பெரான் என்ற இரசா யனத் தூதுவர்களை அதிகம் உற்பத்தி செய் வது விற்றமின் சி. காற்று மற்றும் நீர் மூலம் பரவும் நோய்த் தொற்றுக் கிருமிகளை இந்த இன்டர்பெரான்கள் எதிர் த்துப் போராடி உடலில் அவை சேராமல் அழிக் கின்றன. ஒரேஞ் கிடைக் காத போது எலுமிச்சம் பழச்சாறு அருந்தலாம்.

### பருப்பு வகைகள்

பாதாம் பருப்பு, வேர் க்கடலை போன்ற பரு ப்பு வகைகளில் உள்ள விற்றமின் ஈ, வெள்ளை இரத்த அணுக்கள் சிறப் பாகச் செயற்பட தூண்டி விடுகின்றன. இதனால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கின்றது.

### கோதுமை ரொட்டி

நரம்பு மண்டலமும் மூளையும் நன்கு செயற்படவும் புதிய செல்கள் உற்பத்தியில் உதவும் மண்ணீரலும் நோய் எதிர்ப்புச் சக் தியை அதிகரிக்கும்.

தைமஸ் சுரப்பியும் விரைந்து செயற்பட ப்ரௌன் (கோதுமை) ரொட்டியின் உள்ள பைரிடாக்ஸின் (B4) என்ற விற்றமின் உதவு கிறது. இத்துடன் கீரையையும் முட்டையை யும் தவறாமல் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

### இறால், மீன் மற்றும் நண்டு

அழிந்து போன செல்களால் நோயும் நோய்த்தொற்றும் ஏற்படாமல் தடுப்பதில் உள்ள துத்தநாக உப்பு உதவுகிறது. எனவே, ஒரு நாள் இவற்றில் ஒன்றைச் சேர்த்து சாப்பிட்டு வரவும்.

### தேநீர்

தேநீரில் உள்ள மக்னீசியம் உப்பு நோய் எதிர்ப்புச் செல்கள் அழிந்து விடாமல் பாது காப் பதில் ஒரு நாட்டின் இராணுவம் போன்று செய ற்படுகிறது. சூடான தேநீர் ஒரு கப் அருந்து வதால் நோய்த் தொற்றைத் தடுத்து விடலாம்.

### பாலாடைக்கட்டி

சீஸ் உட்பட பால் சம்பந்தப்பட்ட பொருட் களில் உள்ள கல்சியம், மக்னீசியம் உப்பு டன் சேர்ந்து கொண்டு உடலில் நோய் எதிர்ப்புத் தன்மை அமைப்பு கருதி தவறாமல் ஆற்றலுடன் செயற்பட உதவுகிறது.

### முட்டைக்கோஸ்

குடல் புண்கள் ஆறு மடங்கு வேகத்தில் குணம் பெற முட்டைக்கோஸில் உள்ள குளு ட்டோமைன் என்ற அமிலம் உதவுகிறது. உணவின் மூலம் உள்ளே சென்றுள்ள நோய்த் தொற்று நுண்மங்கள் முட்டைக்கோ ஸால் உடனே அகற்றப்பட்டுகின்றன.

இதனால் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக் கிறது. முட்டை கோஸுக்குப் புற்று நோயைத் தடுக்கும் ஆற்றல் உண்டு.

மேற்கண்ட உணவுப் பொருட்களில் ஏழு உணவுப் பொருட்களாவது தினமும் நம் உணவில் இடம்பெற வேண்டும். இதைச் செய்து வந்தால் நம் மருத்துவச் செலவு குறைந்து விடும்.

# துளசியின் மகத்துவம்

### கருந்துளசி

மருத்துவத்தில் துளசிக்கு தனி மகத்துவம் உண்டு. சளி, காய்ச்சல், ஒவ்வாமை போன் றவைகளை நீக்கும் ஆயுர்வேத நிவாரணி துளசி.




இதனால்தான் பண்டைய காலங்களில் இருந்து இன்றைக்கும் வீடுகளில் துளசி மாடம் வைத்து வணங்கி வருகின்றனர்.

மழைக்காலம் வந்தாலே சளித் தொந்தர வுக்கும் தண்ணீர் ஒவ்வாமையும் அதிகம் ஏற்படும். இதற்கு மருத்துவமனைகளுக்கு சென்று மாத்திரை வாங்கி சாப்பிட்டாலும் நிவாரணம் கிடைப்பதில்லை. நோய் எதிர்ப்பு சக்தி குறைவாக இருப்பவர்களுக்கு சளித் தொல்லையானது பெரும் சிக்கலை ஏற்ப டுத்தி விடும். சளித்தொல்லையை ஆரம் பத்தில் கவனிக்காவிட்டால் காசநோய், நிமோ னியா போன்றவற்றின் பாதிப்பு உண்டாகி விடும்.

பக்றீரியா, பூஞ்சை கிருமிகளினால் உண் டாகும் ஒவ்வாமை மற்றும் தொற்றினால் ஏற்பட்ட சளித் தொல்லை மருந்துகளுக்கு கட்டுப்பட்டாலும் வைரஸ் கிருமிகளால் ஏற் பட்ட சளித்தொல்லை மருந்துகளுக்கு கட்டுப் படாமல் வேதனையை உண்டாக்குகிறது.

நுரையீரலில் வரட்சி ஏற்படாமல் இருப் பதற்காகவே சளியானது இயற்கையாக உடலில் சுரக்கி றது. இது அள விற்கு மீறி பெருகும்போது அதனைவெளி யேற்றி மீண் டும் ஒவ்வாமை யினால் சளி உண்டாகாமல் தடுக்க நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும் மருந்துகளை உட்கொள்ள வேண்டும்.

அடிக்கடி தோன்றும் சளித்தொல்லையை நீக்கி நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தி நுரையீரலுக்கு வலுவை தரும் அற்புத மூலிகை கருந்துளசி. இச் செடிகளின் இலைகள் கப த்தை நீக்கி நோய் எதிர்ப்பு சக்தியை அதி கப்படுத்தும். சளியை கட்டுப்படுத்த இரண்டு அல்லது மூன்று கருந்துளசி இலைகளை பசும்பாலில் போட்டு காய்ச்சி குடிக்க பாலின் ஒவ்வாமையால் ஏற்பட்ட கபம் நீங்கும்.

துளசி இலைகளை நீரில் போட்டு கொதி க்க வைத்து ஆவி பிடிக்க தும்மல் (சைனஸ்) தொல்லையால் ஏற்பட்ட சளி நீங்கும். அடி க்கடி சளி பிடிக்காமல் இருக்க ஐந்து அல்லது பத்து கருந்துளசி இலைகளை ஒரு லீற்றர் நீரில் ஊறவைத்து அந்த நீரை அருந்தி பின் இலைகளை மென்று சாப்பிட வேண்டும்.

தினமும் அதிகாலையில் இரண்டு முதல் நான்கு கருந்துளசி இலைகளை வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர ஒவ்வாமை மற்றும் கிருமித் தொற்றினால் ஏற்படும் சளித் தொல் லையிலிருந்து காத்துக் கொள்ளலாம்.

மேலும் சளித் தொந்தரவினால் பாதிக்கப் பட்டவர்கள் மஞ்சள், மிளகு, சிற்றரத்தை,




பூண்டு, மல்லி, சிறிய வெங்காயம் ஆகியன நோய் எதிர்ப்பு சக்தியை அதிகப்படுத்தும் இயற்கை உணவுகளை அன்றாட உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.

### துளசி

நீரிழிவு நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் தின சரி சில துளசி இலைகளை மென்று சாப்பிடு வதால் நீரிழிவு நோயை கட்டுப்படுத்தலாம் என்று ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது.

நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்டவர்களு க்கு நரம்பு மண்டலம், சிறுநீரகம், கண்கள் போன்றவை பாதிக்கப்படுகின்றன.

இந்நிலையில் துளசியின் மருத்துவ குண ங்கள் குறித்து ஆய்வாளர்கள் ஆய்வு மேற் கொண்டனர். இந்த ஆய்விற்கு எலிகளைப் பயன்படுத்திய இந்த ஆய்வுக்குழுவினர் முதலில் ஸ்ட்ரெப்டோசோசின் என்ற இரச யானத்தைப் பயன்படுத்தி எலிகளுக்கு சீனி யின் அளவை அதிகரித்தனர்.

பின்னர் துளசி இலையில் இருந்து இவர் கள் கண்டுபிடித்த மருந்தை நாளொன்றுக்கு ஒரு முறை 30 நாட்களுக்கு கொடுத்து வந் தனர். இந்த ஆய் வின் முடிவில் சீனி யின் அளவு குறை க்கப்பட்டிருந்த தோடு முக்கிய உறு ப்புக்களான சிறு நீரகம், ஈரல் ஆகி யவை இந்தத் துளசி மருந்தால் பாதுகாக்கப்பட்டி ருப்பதும் தெரிய வந்தது.

தினசரி இரவில் ஒரு கைப்பிடி அளவு துளசி இலையை தண்ணீரில் ஊற வைத்து அதை காலையில் எழுந்து குடித்து வர நீரி ழிவு கட்டுப்படும் என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அதேபோல் தினசரி துளசி இலைகளை மென்று தின்றாலும் நீரிழிவு கட்டுப்படும் என்றும் ஆய்வாளர்கள் கூறியுள்ளனர். மேலும் துளசி இலை இரத் தத்தில் கலந்திருக்கும் சீனியின் அளவைக் குறைக்கவல்லது என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாம் அர்ப்பணிப்புடன் கட்டியெழுப்பிய ஐக்கியத்தை சீர்குலைக்க இடமளியேன்

## ஜனாதிபதி தெரிவிப்பு

(அம்பாறை)

**மக்களின் அர்ப்பணிப்பாலும் நாட்டு மக்களின் தியாகத்தாலும் கட்டி எழுப்பப்பட்டுள்ள இன ஐக்கியத்தை எவரும் சீர்குலைக்க இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கிழக்கு மாகாண சபைக்கான முதலாவது தேர்தல் பிரசாரக்கூட்டம் ஜனாதிபதி தலைமையில் அம்பாறை நகரசபை மைதானத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் அம்பாறைக்கு விஜயம் செய்த போது இங்கு பௌத்த விகாரையை காண்கின்றேன். இந்துக் கோவிலை காண்கின்றேன். முஸ்லிம், கிறிஸ்தவ வழிபாட்டு ஸ்தலங்களை காண்கின்றேன். சகல இன மக்களும் இங்கு சகோதரத்துவத்துடன் வாழ்கின்றனர்.

நாம் அர்ப்பணிப்புடன் அரும்பாடுபட்டு வளர்த்த இன நம்பிக்கையையும் மத ஒற்றுமையையும் சீர்குலைக்க எவருக்கும் இடமளிக்க முடியாது. சிலபிரிவினர் இந்த இன ஒற்றுமையையை விரும்பவில்லை. அவர்கள் தமிழர், சிங்களவர், முஸ்லிம் என இனங்களை பிரித்துப் பார்க்கின்றனர். எம்மால் அப்படிப்பிரிந்து நின்று செயற்படமுடியாது.

இந்த நாட்டு மக்கள் கடந்த 30 வருடங்களாக பல துன்பங்களையும் கஷ்டங்களையும் அனுபவித்து எமது படைவீரர்கள் தமது உயிர்களை தியாகம் செய்தும் நாட்டில் அமைதியும் ஒற்றுமையும் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

கிழக்கு கிராமங்களில் மக்கள் நிம்மதியாக வாழ முடியாத யுகம் ஒன்று இருந்தது. அறந்தலாவையில் பௌத்த பிக்குகள் படுகொலை செய்யப்பட்டனர். காத்தான்குடி பள்ளியில் மதவழிபாட்டில் ஈடுபட்டிருந்த முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

இத்தகைய எல்லா நிலைகளிலும் நாட்டு மக்கள் அமைதி காத்தனர். பொறுமையுடன் செயற்பட்டனர். மக்களின் அந்த நம்பிக்கையையும் அனைவராலும் கட்டியெழுப்பப்பட்ட இனங்களுக்கிடையிலான ஒற்றுமையையும் எவரும் சிதைக்க இடமளிக்க முடியாது.

சகல இன மக்களும் அமைதியுடன் வாழக்கூடிய சூழ்நிலையை கட்டியெழுப்புவது எமது பொறுப்பும் கடமையுமாகும். நாம் அபிவிருத்தியில் மட்டுமன்றி அமைதியிலும் ஒற்றுமையிலும் நாட்டை கட்டியெழுப்பி வருகின்றோம். நாம் பெற்றுக்கொண்டதை மீள காட்டிக்கொடுப்பதற்கு எவருக்கும் இடமளிக்கப்படமாட்டாது.

நாம் பெற்றுக்கொண்டதை தேர்தலுக்காக அபிவிருத்திகளை மேற்கொள்பவர்கள் அல்ல. தேர்தல்களை நடத்தும் அதேவேளை சகல பிரதேசங்களின் அபிவிருத்திக்கும் சகல மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கும் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம் என்றார். (அ-2)

## கிழக்கு மாகாண தேர்தலுக்கான

# தபால்மூல வாக்களிப்பு யாழ்ப்பாணத்தில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

கிழக்கு மாகாண சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்பு நேற்று யாழ். மாவட்டத்தில் இடம்பெற்றது.

தபால்மூல வாக்களிப்புக்கு யாழ். மாவட்டத்திலிருந்து 9 ஆயிரம் பேர் தகுதி பெற்றிருந்தனர்.

கலைக்கப்பட்ட மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தல் அடுத்தமாதம் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான தபால் மூல வாக்களிப்பு நேற்றும் இன்றும் இடம் பெறுகின்றது.

நாடளாவிய ரீதியில் இந்த தபால்மூல வாக்களிப்பு இடம்பெற்றது. இதற்கென வடபகுதிக்கு நேற்று முன்தினம் 150 அதிகாரிகளை தேர்தல்கள் திணைக்களம் அனுப்பி வைத்துள்ளது.

இந்த அதிகாரிகள் குழு வடபகுதியில் தபால் மூலம் வாக்களிப்புக்கு தகுதி பெற்றவர்கள் வாக்களிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதோடு இன்று நடைபெறும் தபால்மூல வாக்களிப்பை கண்காணிக்கவுள்ளனர்.

கலைக்கப்பட்ட மூன்று மாகாணசபைக்கான தேர்தலில் வாக்களிக்க யாழ். மாவட்டத்திலிருந்து 9 ஆயிரம் பேர் தகுதி பெற்றுள்ளனர். இதில் இராணுவத்தினரே அதிகம் எனவும் யாழ். மாவட்ட தேர்தல் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன. (அ-6)

# ஜனாதிபதி உத்தரவிட்டால் மிருகபலியை நிறுத்துவோம்

## முன்னேஸ்வரம் ஆலய பிரதமகுரு தெரிவிப்பு

(சிலாபம்)

கடந்த ஆண்டில் முன்னேஸ்வரம் காளி கோயிலில் மிருகபலி கொடுப்பதற்கு பலத்த எதிர்ப்புக்கள் கிளம்பியதையடுத்து விவகாரம் நீதிமன்றம் வரை சென்றது.

அவ்வேளையில் கோயில் வளாகத்துக்குள் சென்ற அமைச்சர் மேர்வின் சில்வா அங்கு பலி பூஜைக்காக காத்திருந்த மிருகங்களை அங்கிருந்து அப்புறப்படுத்தி பூஜையை தடுத்திருந்தார்.

இம்முறையும் இந்த பலிபூஜை நடக்கக் கூடாது என்றும் அப்படி நடந்தால் அதனை தான் தடுக்கவுள்ளதாகவும் சில தினங்களுக்கு முன்னர் அமைச்சர் மேர்வின் சில்வா அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக பிபிசி தமிழோசையிடம் கருத்து வெளியிட்ட முன்னேஸ்வரம் காளி கோயிலின் தலைமை மதகுரு பலிபூஜையை தடுப்பதன் மூலம் தமது பக்தர்களின் வழிபாட்டு உரிமையில் அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் தலையிடுகி ன்றனர்.

பொலிஸாரின் ஒத்துழைப்புடன் எதிர் வரும் முதலாம் திகதி பலிபூஜை நடத்துவதற்கு தமது கோயில் பக்தர்கள் தயாராக இருக்கின்றனர்.

இதேவேளை ஜனாதிபதிக்கு இந்த பிரச்சினை பற்றி அறிவித்துள்ளதாகவும் ஜனாதிபதி நேரடியாக தமது பலிபூஜை வேள்வியை நிறுத்தச் சொன்னால் அதனை ஏற்க முடியும் என்றார். (அ-4)

# தனியார் பேருந்து கம்பனியின் புதிய நிர்வாகிகள் தெரிவு

(பூந்தோட்டம்)

வவுனியா மாவட்ட தனியார் பேருந்து கம்பனியின் 14 ஆவது ஆண்டுக்கான புதிய நிர்வாகிகள் நேற்று முன்தினம் வவுனியா சுவர்க்கா ஹோட்டலில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலேயே தெரிவு செய்யப்பட்டனர்.

நடப்பாண்டுக்கான தலைவராக எஸ்.ரி. இராஜேஸ்வரன், செயலாளராக ஏ.தாவீது, பொருளாளராக எஸ்.டீ.ஏ.ரசீன், உபதலைவராக ஏ.சிவஞானமூர்த்தி, உபசெயலாளராக பி.காமராஜா ஆகியோர் தெரிவு செய்ய ப்பட்டதுடன் நிர்வாக உறுப்பினர்களாக நந்தகுமார், கந்தசாமி, பாசீம், கமலேந்திரன், சஞ்சீவலிங்கம், தில்லைநாதன், ராஜகுலசிங்கம், பாரூக் ஆகியோரும் கணக்காய்வாளராக ரவீந்திரனும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-9-266)



பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அண்மையில் வன்னி பாதுகாப்பு படைத்தலைமையகத்திற்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார். இதன் போது கட்டடத்திற்கான நினைவுக்கல்லினை திரை நீக்கம் செய்து வைப்பதை படத்தில் காணலாம்.

# மட்டக்களப்பு நகர்ப்பகுதியில் 24 பவுண் நகை கொள்ளை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரிலுள்ள வீடொன்றில் துப்பாக்கி முனையில் கொள்ளைச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது.

கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி சார்பில் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பில் கிழக்கு மாகாண சபை தேர்தலில் போட்டியிடும் எட்வின் சில்வா கிருஸ்ணானந்தராஜாவின் சகோதரி வீட்டிலேயே இக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குடிப்பதற்கு தண்ணீர் கேட்டுள்ளார். தண்ணீர் எடுப்பதற்கு உள்ளே சென்ற போது துப்பாக்கியைக் காட்டி பயமுறுத்தி வீட்டிற்குள் இருந்த சுமார் 24 பவுண் தங்க நகைகளைக் கொள்ளையிட்டுச் சென்றுள்ளதாக மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர். (அ-2)

# சுப்பர்மார்க்கெட் கட்டடம் தீக்கிரை

(கொழும்பு)

காலி உக்வத்தையிலுள்ள சுப்பர்மார்க்கெட் கட்டடமொன்று நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாத நபர்களால் தீவைக்கப்பட்டுள்ளது.

இரு குழுக்களிடையே ஏற்பட்ட மோதலையடுத்து இக்கட்டடம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஜிந்தோட்டை பகுதியில் மத பாரம்பரியம் தொடர்பாக இரு குழுக்களிடையில் மோதல் நிலவியதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அசம்பாவிதங்களை தவிர்ப்பதற்காக அப்பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீனவர்கள் மீதான தாக்குதல் இனியும் நீடித்தால் தமிழகத்தில் இலங்கை தூதரகம் இருக்காது..!

**தமிழக வாழ்வுரிமைக் கட்சி- தி. வேல்முருகன்**

**1974** ஆம் ஆண்டு ஜூன் 28 ஆம் திகதி கச்சத்தீவை இலங்கைக்கு தாரை வார்த்துக் கொடுத்த நாள் முதல் கடந்த 30 ஆண்டு காலமாக 600 க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை சுட்டுப் படுகொலை செய்திருக்கிறது.

தமிழக மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவது என்பதை நாள் தோறும் மேற்கொள்ளும் ரோந்து நடவடிக்கையைப்போல் செய்து வருகிறது.

இந்த ஓரிரு வாரத்திலும் 3 முறை தமிழக மீனவர்களைத் தாக்கி அரிவாளால் வெட்டி விரட்டியடித்துள்ளனர்.

இந்நிலை தொடர்ந்தும் நீடிக்குமேயானால் தமிழகத்தை விட்டே இலங்கை தூதரகத்தை அப்புறப் படுத்தப்படும் என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சி எச்சரித்துள்ளது.

**பறிபோன உரிமை**


தமிழக மீனவர்கள் தங்களது பாட்டன், முப்பாட்டன் காலத்திலிருந்து மீன்பிடித்துக் கொண்டிருந்த கடற் பரப்பில்தான் தற்போதும் மீன்பிடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கச்சதீவை இலங்கைக்கு தாரை வார்த்துக் கொடுத்த நாள் முதல் கடந்த 30 ஆண்டு காலமாக 600 க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்களை சிங்கள கடற்படை சுட்டுப் படுகொலை செய்திருக்கிறது.

கச்சதீவு ஒப்பந்தம் போடப்பட்ட பிறகு தமிழக மீனவர்களின் மீன்பிடி உரிமை பற்றிய கேள்வி எழுந்த போது நாடாளுமன்றத்தில் பதிலளித்த அந்நாளைய வெளியுறவுத் துறை அமைச்சர் ஸ்வரன்சிங், தமிழக மீனவர்களின், மீன்பிடி உரிமையை கச்சத்தீவு ஒப்பந்தம் மூலம் விட்டுக் கொடுத்துவிடவில்லை என்று பகிரங்கமாக அறிவித்தார். ஆனால், 1976 ஆம் ஆண்டு இந்திய வெளியுறவு செயலராக இருந்த கேவல்சிங்குக்கும் இலங்கை வெளியுறவுச் செயலாளர் வி.டி. ஜெயசிங்கேவுக்கும் இடையே கடிதப் பரிமாற்றங்களில் இந்த உரிமை பறிகொடுக்கப்பட்டு விட்டது.

**600 க்கும் மேற்பட்ட படுகொலை**

கச்சத்தீவை இலங்கைக்கு தாரை வார்த்ததால் 600 க்கும் மேற்பட்ட மீனவர்கள் படுகொலை செய்யப் பட்டுள்ளனர். இலங்கைக் கடற் படையால் தாக்கப்பட்டு ஆயிரக் கணக்கானோர் படுகாயமடைந்திருக்கின்றனர். ஒவ்வொரு நாளும் வாழ்வாதாரம் தேடிப் போகும் மீனவர்கள் உயிரோடு மீண்டும் கரைக்குத் திரும்புவோமா என்ற உத்தரவாதமின்றி நடுக்கடலில் தவியாய் தவிக்கின்றனர்.



இலங்கை கடற்படையினரால் கொல்லப்பட்ட தமிழக மீனவனின் இறுதிச் சடங்கின் போது 2012

காக்கை, குருவிகளைச் சுடுவது போல் தமிழக மீனவர்களைச் சுட்டுப் படுகொலை செய்து வருகிறது இலங்கை அரசு. தட்டிக்கேட்கவேண்டிய, கண்டிக்க வேண்டிய மத்திய அரசோ வாய்மூடி மௌன மாகவே, இத்தனை ஆண்டுகாலமாக இருந்து வருகிறது. தமிழ்நாட்டில் அனைத்து அரசியல் கட்சிகளும் கூப்பாடு போட்டு கண்டனம் தெரிவித்த போதும்கூட மத்திய அரசு தமி ழனின் உயிரை மதிக்கத் தயாராக இல்லை.

தமிழக மீனவர்கள், கச்சத்தீவு கடற் பரப்பில் மீன்பிடித்தால் 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிப்பேன் என்று இலங்கை அரசு தெரிவித்தபோது, அதைக்கூட கண்டிக்க திராணியற்ற அரசாங்க மாகவே இந்திய மத்திய அரசு இருக்கிறது. இலங்கை அரசு இப்படி கொலை வெறியோடு பேசும் போது அவரது கட்டளைக்குக் கீழ்ப் படியும் சிங்கள கடற் படை சும்மா இருப் பார்களா?



தமிழக மீனவர்களின் ஆர்ப்பாட்டம் 2010


இந்தியாவின் பரம எதிரியாக கருதப் படுகின்ற பாகிஸ்தான் நாட்டு மீனவர்கள் இந்திய கடற்பரப்புக்குள் நுழைந்தாலும், இந்திய மீனவர்கள் தவறுதலாக பாகிஸ்தான் கடற் பரப்புக்குள் நுழைந்தாலும்கூட, சுட்டுக் கொல்லப்படுவதில்லை. ஏன் இலங்கை மீனவர்கள் எத்தனையோ முறை இந்திய கடற் பரப்பில் நுழைந்தபோதும் சுட்டுக் கொல்லப்பட்டது கிடையாது. அவர்கள் எல்லாம் உரிய நீதிமன்ற விசாரணைகளுக்குப் பிறகு விடுவிக்கப்படுவதுதான் தொடர்ந்தும் நடைபெற்று வருகிறது.

**தொடர்ந்து சிறை**

தற்போதும்கூட கடந்த ஆண்டு நவம்பர் மாதம் போதைப் பொருட்களை கடத்தியதாக இராமேஸ்வரம் மீனவர்களை கைது செய்த இலங்கை கடற்படை 23 முறை வாய்தா வாங்கி இன்னமும் சிறையில்தான் அடைத்து வைத்திருக்கிறது. இலங்கையில் உள்ள இந்திய தூதரகம் இது தொடர்பாக உருப்படியான எந்த ஒரு நடவடிக்கையுமே மேற்கொள்ளவில்லை என்பது தான் உண்மை. தமிழக மீனவர்களை இந்தியக் குடிமக்களாக இந்திய அரசு கருதவில்லை என்பதைத் தானே இது வெளிப்படுகிறது!

**சீனர்களுக்கு மீன்பிடி அனுமதி**

இந்தியாவின் முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி காலத்தில் சீனா, அமெரிக்கா உள்ளிட்ட எந்த ஒரு அந்நிய நாடும் இந்தியாவின் அனுமதியின்றி இலங்கைக்குள் நுழைய முடியாத நிலை இருந்தது. அப்போது இந்தியாவின் கொள்கை முடிவெடுக்கும் அதிகாரம் அரசியல் தலைவர்களிடத்தில் இருந்து வந்தது. ஆனால், ராஜீவ்காந்தி காலத்துக்குப் பிறகு இந்திய வெளிவிவகார அமைச்சகத்தில் தமிழின எதிரிகளாக அமர்ந்திருப்போரே அனைத்து முடிவுகளையும் எடுக்கக் கூடிய நிலையே நீடித்து வருகிறது. இதற்காகவே தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படை சுட்டுப் படுகொலை செய்தாலும், கண்டும் காணாமல் இருக்கின்றனர்.



இலங்கை கடற்படையினரிடம் இருந்து தங்களுக்குப்பாதுகாப்பளிக்க வேண் டும் என்று சென்னை உயர்நிதி மன்றத்தின் மதுரை கிளையில் கோரிக்கை விடுக்கும் மீனவ குடும்பம்

இப்போது தமிழக மீனவர்கள் பாரம்பரியமாக மீன்பிடிக்கும் மன்னார் வளைகுடாவில் எண்ணெய் அகழ்வுப் பணிக்காக சீனாவுக்கு அனுமதி கொடுத்திருக்கிறது இலங்கை அரசு. இதேபோல் மன்னார் வளைகுடா உட்பட தமிழர்கள் மீன்பிடிக்கும் கடற் பரப்பில் இலங்கைக்கு கடல் வழியிலோ அல்லது நிலவழியிலோ எந்தத் தொடர்புமே இல்லாத சீனர்களுக்கும் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

அண்மையில்கூட திருகோணமலை கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட சீன மீனவர்களை இராஜமரியாதையுடன் நடத்தி விடுதலை செய்திருக்கிறது அரசு.




கச்சதீவு வரைபடம்

இலங்கையின் இந்த முடிவால் எதிர்காலத்தில் மன்னார் வளைகுடாவில் முற்றுமுழுதாகவே தமிழக மீனவர்கள் மீன்பிடிக்க முடியாத ஒரு நிலை உருவாக்கப்பட்டு இருக்கிறது என்பதையும் தமிழக வாழ்வுரிமைக் கட்சி எச்சரிக்கையுடன் சுட்டிக் காட்டுகிறது.

தமிழக மீனவர்கள் தங்களுக்கு மீன்பிடி உரிமை உள்ள கடற்பரப்பில் மீன்பிடித்தார்கள் என்பதற்காக சுட்டுக் கொல்லும் அநியாயத்தை மத்திய அரசும் கண்டுகொள்ளாதபோது தமிழர்கள் எங்குதான் போய் முறையிடுவது? தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலுக்கு ஒரே தீர்வு கச்சதீவை மீட்பதுதான்! இல்லையேல் தமிழக மீனவர்கள் தங்களைத் தற்காத்துக் கொள்ள ஆயுதமேந்துவது! இந்த இரண்டில் ஒன்று மட்டுமே தமிழக மீனவர்களின் மீதான தாக்குதலுக்குத் தீர்வாக இருக்க முடியும் என்பது தான் வாழ்வுரிமைக் கட்சியின் நிலைப் பாடு.

தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படை நடத்தும் தாக்குதல் தொடருமேயானால் தமிழகத்தை விட்டே இலங்கைத் தூதரகத்தை அப்புறப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளிலும் தமிழக வாழ்வுரிமைக் கட்சி ஈடுபடும் என எச்சரிக்கிறோம் என்றும், மேலும் த தமிழ்நாட்டில் உள்ள இலங்கை தூரகத்தை தமிழ் நாட்டிலிருந்து அடியோடு அப்புறப் படுத்துவதற்கான நடவடிக்கைகளில் தமிழகத்தில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகள், தமிழக மீனவர் அமைப்புகள், தமிழர் இயக்கங்களை ஒருங்கிணைத்து தமிழக வாழ்வுரிமைக் கட்சி தொடர்ந்து போராடும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறார்.



இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்ட மீனவர்கயைப் பார்வையிடுகின்றனர்-2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தூரனை பாதுகாக்க உண்ணாவிரதம்; ஆபத்து ஏற்பட்டால் இந்திய அரசே பொறுப்பு

## வைகோ உறுமல்



உண்ணாவிரதம் காரணமாக உயிருக்கு போராடிக் கொண்டிருக்கும் ஈழத்தமிழர் செந்தூரனை விடுதலை செய்யக்கோரி இன்று முதல் ம.தி.மு.க. தலைமைக்கழக அலுவலகத்தில் தொடர் உண்ணாவிரதப் போராட்டம் தொடங்கப் போவதாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ அறிவித்துள்ளார்.

செந்தூரன் தற்போது சென்னை ராயப்பேட்டை அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவரது நிலைமை கவலைக்கிடமாக உள்ளது.

அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில்,

செந்தூரனின் நியாயமான கோரிக்கையை அரசு ஏற்க வேண்டும். அவரது உடல் நிலை மிகவும் மோசமாக உள்ளது. அவரது உயிருக்கு ஊறு நேர்ந்தால் தமிழக அரசும் பொலிஸாருமே முழுப்பொறுப்பு. உடனடியாக அவரையும் சிறப்பு முகாம்களில் அடைபட்டு கிடக்கும் 47 ஈழத்தமிழர்களையும் விடுதலை செய்ய வேண்டும்.

இந்த கோரிக்கையை வலியுறுத்தி இன்று முதல் ம.தி.மு.க. தலைமை அலுவலகமான தாயகம் முன்பு நான் தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபடுகிறேன்.

எங்களது உண்ணாவிரதப் போராட்டம் செந்தூரனின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் வரை தொடரும்.

இதேவேளை 25 நாட்களாக உண்ணாவிரதம் இருக்கும் ஈழத்தமிழர் செந்தூரனை திறந்த வெளி சிறைக்கு மாற்றி அவரை காப்பாற்ற வேண்டும் என ம.தி.மு.க. பொதுச் செயலர் வைகோ தமிழக முதல்வருக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து முதல்வர் ஜெயலலிதாவுக்கு அவர் எழுதியுள்ள கடிதம் வருமாறு,

ஈழத்தமிழர் செந்தூரன் உட்பட பலரை சென்னை பூவிருந்தமல்லி சிறப்பு முகாமில் பொலிஸார் அடைத்துள்ளனர். சில மாதங்களுக்கு முன் தங்களை திறந்த வெளி சிறைக்கு மாற்ற வேண்டும் என இவர்கள் உண்ணாவிரதம் இருந்தனர்.

இதற்கு தமிழக வருவாய்த்துறையினர் ஒப்புக்கொண்டதால் உண்ணாவிரதத்தை கைவிட்டனர். ஆனால் வாக்குறுதிக்கு மாறாக அவர்களை தொடர்ந்து சிறப்பு முகாமில் அடைத்து வைத்துள்ளனர்.

இதைக் கண்டித்த செந்தூரன் கடந்த 25 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வருகிறார். இதனால் அவரது உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ளது. (அ-2)

# தயாசிறி ஜயசேகர மீது நடவடிக்கை இல்லை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் குருணாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர வெளியிட்டுள்ள கருத்துக்கள் தொடர்பாக கட்சியின் தலைமை அவருக்கு எதிராக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் அவருக்கு மன்னிப்பு வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

பல எதிர்ப்பாளர்கள் தயாசிறி ஜயசேகரவுக்கு தண்டனை வழங்கப்படும் வரை பார்த்துக் கொண்டிருப்பதாகவும் ஆனால், கட்சி அவருக்கு தண்டனை வழங்காது எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்தத் தேர்தலில் அனைத்து கட்சிகளுக்கு சாதகமான முறையில் நடந்து கொள்ளும் தேர்தல் ஆணையாளர் ஒருவர் கிடைத்துள்ளார். இது குறித்து நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

தேர்தல் ஆணையாளர் நேர்மையாக தனது தேர்தல் பணிகளை முன்னெடுத்து வருகின்றார். எதிர்வரும் நாட்களிலும் இந்த நேர்மையை நாம் தேர்தல் ஆணையாளரிடம் எதிர்பார்க்கின்றோம் என்றார். (அ-2)

# வடக்குக்கிழக்கில் மட்டும் படை அதிகாரிகள் ஆளுநர்களாக நியமிக்கப்பட்டிருப்பது ஏன்?

## கேட்டாரே கேள்வி அமைச்சர் ஹக்கீம்

(கொழும்பு)

நாட்டின் ஏனைய பகுதிகளில் ஆளுநர்களாகவும் அரசாங்க அதிபர்களாகவும் சிவில் அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கும் வேளையில் வடக்கு, கிழக்கில் படை உயரதிகாரிகள் அவ்வாறான பதவிகளில் அமர்த்தப்பட்டிருப்பது ஏன் என நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவருமான ரவூப் ஹக்கீம் கேள்வி எழுப்பியுள்ளார்.

வாழைச்சேனையில் அண்மையில் நடைபெற்ற கட்சியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் முஸ்லிம்களுக்காக பரிந்து பேச முன்வந்துள்ளது. முஸ்லிம் தரப்பின் தேவைகளை அவர்களிடம் முன்வைத்தால் எங்களுக்காக அவற்றைப் பெற்றுத்தர அவர்களால் முடியும் என்கிறார்கள். இவ்வாறுதான் விடுதலைப்புலிகளும் கூறி வந்தனர்.

முஸ்லிம்கள் தனித்துவ அடையாளங்களைக் கொண்ட ஒரு தேசிய இனம். அதன் உரிமைகளைச் சொந்தக் கால்களில் நின்று பெற்றுக் கொள்ளும் திராணி எங்களுக்கு உள்ளது என்பதை சகல தரப்பினர்களுக்கும் உறுதியாகக் கூறிவைக்க விரும்புகின்றேன்.

இக்கூட்டத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர், பாராளுமன்ற உறுப்பினர் பசீர் சேகுதாவூத், மாகாண சபை வேட்பாளர்களான ஹாபிஸ் நசீர் அஹமத், சவாஹிர் சாலி, சட்டத்தரணி ராசிக் ஆகியோரும் உரையாற்றினர். (அ-2)

# நீலகிரியில் பயிற்சிபெறும் சிங்கள அதிகாரிகளை வெளியேற்றுங்கள்

## தொல்.திருமாவளவன் வலியுறுத்து

செங்கல்பட்டு மற்றும் பூந்தமல்லியிலுள்ள இலங்கை அகதிகள் முகாம்களை நிரந்தரமாக மூட வலியுறுத்தி விடுதலைச் சிறுத்தைகள் கட்சி சார்பில் முற்றுகைப்போராட்டம் நடத்தப்படும் என அக்கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்தார்.

கோவையில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீலகிரி மாவட்டம்,வெலிங்டன் இராணுவப் பயிற்சி மையத்தில் பயிற்சி பெறும் சிங்கள இராணுவ அதிகாரிகளை உடனடியாக வெளியேற்ற வேண்டும். இது தொடர்பாக தமிழக அரசு பிரதிநிதிகள் குழுவை உருவாக்கி பிரதமரைச் சந்திக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்

பூந்தமல்லி மற்றும் செங்கல்பட்டில் உள்ள இலங்கை அகதிகள் முகாமை நிரந்தரமாக மூடி அங்குள்ளவர்களை திறந்தவெளி முகாம்களில் தங்கவைக்கவேண்டும்.

இக்கோரிக்கையை வலியுறுத்தி விடுதலைச்சிறுத்தைகள் கட்சி சார்பில் செங்கல்பட்டு பூந்தமல்லியில் உள்ள இலங்கை அகதிகள் முகாமை முற்றுகையிடும் போராட்டம் இன்றைய தினம் நடத்தப்படும் என்றார். (அ-2)


# மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.07.2011 வரையும் அடகு வைத்து (மீட்புக்காலம் ஒரு வருடத்திற்கானது) மீட்கப்படாத நகைகளும் 31.01.2012 வரையும் அடகு வைத்து (மீட்புக்காலம் ஆறு மாதத்திற்கானது) மீட்கப்படாத நகைகளும் 2012.09.15 (சனிக்கிழமை) மு.ப. 8.30 மணிக்கு மக்கள் வங்கி, யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் |
|---|---|
| யாழ்.ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி |
| | மானிப்பாய் |
| காங்கேசன்துறை | மல்லாகம் |
| யாழ்.பிரதான வீதி | உரும்பிராய் |
| நெல்லியடி | – |
| அச்சுவேலி | புத்தூர் |
| சங்கானை | பண்டத்தரிப்பு |
| சுன்னாகம் | கோப்பாய் |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி |
| யாழ். பல்கலைக்கழகம் | திருநெல்வேலி |
| | கல்வியங்காடு |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் |
| பருத்தித்துறை | புலோலி |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம், கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம். (சி/840)


# தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தேர்தல் சட்டத்தை மீறியுள்ளது

## ஜனாதிபதியை சாடுகிறது ஐ.தே.க.

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தொலைக்காட்சி நிகழ்ச்சி தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் அமைந்துள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

இந் நிகழ்ச்சியானது தேர்தல் ஆணையாளரின் விதிமுறைகளுக்கு புறம்பானதாகும் என ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தன தெரிவித்துள்ளார். இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாணசபைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அரசியல் கட்சிகளுக்கு சார்பான நிகழ்ச்சிகளை ஒளி, ஒலிபரப்புச் செய்வது சட்டவிரோதமானது.

ஜனாதிபதி மக்கள் சந்திப்பு என்னும் நிகழ்ச்சி அரச மற்றும் தனியார் தொலைக்காட்சிகளில் கடந்த வெள்ளிக்கிழமை ஒளிபரப்புச் செய்யப்பட்டது.

சுமார் மூன்று மணித்தியாலங்கள் இந்த தொலைக்காட்சி நிகழ்ச்சி நடைபெற்றதாகவும் இதேபோன்று எதிர்க்கட்சிகளுக்கும் ஊடகங்கள் சந்தர்ப்பம் அளிக்க வேண்டும்.

தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஜனாதிபதியின் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புவதற்கு எதிர்ப்பை வெளியிடவில்லை .அவை தேர்தல் சட்டங்களை மீறும் வகையில் அமையக் கூடாது.சுவரொட்டிகளை அகற்றியும் பொலிஸாரை கடமையில் ஈடுபடுத்தியும் சுயாதீனமானதுமான நீதியுமானதுமான தேர்தலை நடத்த முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

202

## அறிவாளி குரங்கு

அந்தத் தோப்பில் மா, தென்னை, வேம்பு, பலா, தேக்கு, வாகை, பூவரசு எனப்பலவகையான மரங்கள் இருந்தன. எனினும் மாமரமும் தென்னையும் அவற்றுள் மிகுதியாகக் காணப்பட்டன.

வேலி அடைக்கப்படவில்லை. நான்கு புறங்களும் திறந்தே கிடந்தன. யார் யாரோ வளர்க்கும் ஆடு மாடுகள் வரும்; புல்லை மேயும்; சென்றுவிடும். அங்கே கிளி, சிட்டு, காகம் போன்ற பறவைகளும் குரங்கு, மான் போன்ற விலங்குகளும் ஓணான், உடும்பு, அணில் போன்ற சிற்றுயிர்களும் ஏராளமாக வாழ்ந்து வந்தன.

படர்ந்து கிளை பரப்பி நின்ற மாமரத்தின் அருகில் நின்றிருந்த தென்னை மரத்திற்கு அன்றைக்கு என்ன வந்ததோ தெரியவில்லை. சற்று வாய்க்கொழுப்புடன் பேசிக் கொண்டிருந்தது.

இதோ பார்... உன்னை விட நானே உயர்ந்தவன் என்று தலையை உலுக்கிச் சொன்னது.

யாராவது எதையாவது சொல்லி விட்டுப்போகட்டுமே நமக்கென்ன போச்சு... என்று மாமரம் வாயை மூடிக்கொண்டு சும்மா கிடக்கவில்லை. வலுச்சண்டைக்குப் போகக் கூடாது வந்த சண்டையை விடக் கூடாது என்பது அதன் கொள்கை.

நான்தான் உன்னைவிட உயர்ந்தவன் என்றது மாமரம்.என்னுடைய உயரம் என்ன? உன்னுடைய உயரம் என்ன? பார்த்தாலே தெரியுமே! உனக்குக் கண் இல்லை. அதனால் தெரியவில்லை என்று மீண்டும் தென்னை மரம் குரல் உயர்த்தியது.


நோஞ்சானைப் போல் ஒல்லியாக உயர்ந்து நின்றால் மட்டும் போதுமா? என்னைப்போல் நூற்றுக்கணக்கில் கிளை பரப்பி இலை தழைகளோடு காய்கனிகளைத் தாங்கி நிற்க வேண்டாமா? என்று தென்னையின் மூக்கறுப்பது போல் கூறியது மாமரம்.

நானும்தான் இளநீர்க் குலைகளைச் சுமந்திருக்கிறேன். ஆண்டு முழுவதும் தேங்காய்களைக் கொடுப்பவன் நான். நீ ஆண்டில் சில மாதங்களே மாங்காய்களைக் கொடுக்கிறாய். உன்னைவிட நானே உயர்ந்தவன்! என்றது தென்னை.

நான் வெயிலில் களைத்து வருவோர்க்கு நிழல் கொடுப்பேன். உன்னால் முடியாது அது மட்டுமா? முக்கனிகளுள் ஒன்றாக என்னைத் தான் வைத்துள்ளனர் என்று மாமரம் விடாமல் பதிலுக்குப் பதில் பேசியது.

உன்னால் நிழல்தான் கொடுக்க முடியும். குடியிருக்கும் வீடுகளுக்கு கூரையாக அமைந்து வெயில், மழை, காற்றிலிருந்து மக்களைக் காப்பேன். அது மட்டுமா? இறைவனை வழிபட என் தேங்காய்களைத் தான் பயன்படுத்துகின்றனர். முக்கனி என உன்னைச் சொல்வதற்காகப் பீற்றிக்கொள்ளாதே! எனத் தென்னை சொல்லிவிட்டு வானத்தை அண்ணார்ந்து பார்த்தது.

அந்த நேரத்தில் எங்கிருந்தோ வந்த ஒருவன் தென்னை மரத்தில் விடுவிடுவென வேகமான ஏறினான். அதன் கழுத்துப் பகுதியில் தொங்கிக்கொண்டிருந்த தேங்காய்க்



குலைகள் அனைத்தையும் வெட்டிச் சாய்த்துவிட்டுக்கீழே இறக்கினான். சிதறிக்கிடந்த தேங்காய்களையெல்லாம் பொறுக்கி எடுத்து ஒரு கோணிப் பையில் போட்டுக்கட்டினான்.

அதைக்கண்ட மாமரத்திற்குத் தாங்கமுடியாத மகிழ்ச்சி. இனி மேலாவது தென்னை மரத்தின் கொழுப்பு அடங்கும் என எண்ணி எகத்தாளமாய்த் தென்னையை அண்ணார்ந்து பார்த்தது. தென்னைக்கு வெட்கம் பிடுங்கித் தின்றது. வானத்தை அண்ணார்ந்து பார்த்தபடியே நின்றிருந்தது. கீழே பார்க்கவில்லை.

சற்றுநேரம் மாமரத்தின் நிழலில் இளைப்பாறிய அந்த மனிதன் களைப்பு நீங்கி எழுந்தான். எழுந்த வேகத்தில் மாமரத்தில் ஏறினான். ஒரு கிளைவிடாமல் அத்தனை கிளைகளுக்கும் தாவி அங்கே கொத்துக்கொத்தாய்க் காய்த்துத் தொங்கிக் கொண்டிருந்த மாங்காய்களைப் பறித்துப்போட்டு விட்டுக் கீழே இறங்கினான்.

எல்லா மாங்காய்களையும் பொறுக்கினான். இரண்டு கோணிப்பை தேறியது.

அதுவரை வானத்தை அண்ணார்ந்து பார்த்துக் கொண்டிருந்த தென்னைமரம் இப்போது மாமரத்தைப் பார்த்து உள்ளுக்குள் சிரித்துக்கொண்டது.

நமக்கு வந்த துன்பம் பக்கத்து வீட்டுக்காரனுக்கும் வந்தால் ஒருவித ஆறுதல் கிடைக்குமே! அந்த ஆறுதல் தென்னைக்குக் கிடைத்தது. மாமரமோ சோகத்தில் மூழ்கிக் கிடந்தது.

அந்த மனிதன் இரண்டு மூட்டை மாங்காய்களையும் ஒரு மூட்டை தேங்காய்களையும் ஒரு கட்டை வண்டியில் ஏற்றிக்கொண்டு புறப்பட்டான். அவன் புறப்பட்டுச் சென்றதைத் தென்னைமரமும் மாமரமும் பரிதாபமாகப் பார்த்துக் கொண்டு நின்றன.

அப்போது கலகலவெனச் சிரிப்பொலி கேட்டது. சிரிப்பொலி வந்த திசையில் தென்னை மரமும் மாமரமும் பார்வையைச் செலுத்தின. எதிரே இருந்த பலா மரத்தில் கிடந்த பலாப்பழத்தைத் தின்று கொண்டிருந்த குரங்கு சிரித்தது என்பதை உணர்ந்துகொள்ள அவ்விரண்டிற்கும் அதிகநேரம் பிடிக்கவில்லை.

குரங்கே! ஏன் அப்படி எங்களைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தாய் என மாமரம் அழுகையுடன் கேட்டது.

சற்றுமுன் நீங்கள் இருந்த நிலையையும் இப்போது நீங்கள் இருக்கும் நிலையையும் எண்ணிப் பார்த்தேன். சிரிப்பு வந்தது. அதனால் சிரித்து விட்டேன்! என்று குரங்கு சொன்னது. நாங்கள் எப்படி இருந்தோம். பெரிசா கண்டுபிடிச்சிட்டே? என்று தென்னை கேலியாகப் பேசிற்று.

ஒரே இடத்தில் இருக்கும் நீங்கள் ஒற்றுமையாக இருக்காமல் நீ பெரியவனா? நான் பெரியவனா? என வாய்க்குவந்தபடி எல்லாம் பேசிக்கொண்டிருந்தீர்களே.

இப்போது தெரிகிறதா யார் பெரியவன் என்று? உங்கள் இருவரையும் மொட்டை அடித்துத் தேங்காய்களையும் மாங்காய்களையும் மூட்டையாகக் கட்டிக் கொண்டு போகின்றானே ஒரு குள்ளமனிதன் அவன்தான் உங்கள் இருவரைக் காட்டிலும் உயர்ந்தவன். உலகத்தில் யாருமே பெரியவர்களும் இல்லை. யாருமே சிறியவர்களும் இல்லை.

அவரவர் உண்டான பணியினை அவரவர் செய்தாலே போதும். நீ பெரியவனா நான் பெரியவனா என போட்டி போடாமல் வல்லவனுக்கு வல்லவன் வையத்தில் உண்டு என்ற உண்மையை எண்ணிப்பார்க்க வேண்டும் எனச் சொன்னது குரங்கு.

நீ தூக்கணாங்குருவியின் கூட்டைப் பிய்த்தெறிந்த கதை எங்களுக்குத் தெரியாதா... நீ என்ன பெரிய ஒழுங்கா? தூக்கணாங்குருவியின் வாழ்க்கை முறை வேறு என்னுடைய வாழ்க்கை முறைவேறு என்றது குரங்கு. பின் ஏன் பிரித்தெறிந்தாய்? கேட்டது மாமரம்.

தூக்கணாங்குருவிக்குத் திமிர் அதிகம். ஆணவம் அளவுக்கு அதிகமாக இருந்தது. கூட்டைக் கட்டிக்குடியிருந்தால் உலகத்தில் தானே புத்திசாலி என்றும் மற்றவர்கள் எல்லாம் உருப்படாதவர்கள் என்றும் எண்ணிக் கொண்டிருந்தது.


கூடியவரை அடுத்தவர் விவகாரத்தில் தலையிடாடமல் இருப்பதே நல்லது. எனக்குப் புத்தி சொல்லுகின்ற அளவுக்குத் தூக்கணாங் குருவிக்குக் கொழுப்புத் தலைக் கேறியிருந்தது. அந்தக் கொழுப்பை அடக்கத்தான் அப்படிச்செய் தேன் என்றது குரங்கு.நீ என்ன சொல்கிறாய் என்று தொடர்ந்தது மாமரம்.

கூடுகட்டத் தெரிந்த குருவிக்குக் காக்கத் தெரியவில்லை! கட்டுவதில் அதற்குப் பலம் என்றால் எனக்கு இன்னொரு வகையில் பலம். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு வகையில் பலம் இருக்கிறது என்பதை நிரூபிக்கத்தான் அவ்வாறு செய்தேன் என்று சொல்லிக் கொண்டே வேறொரு மரத்திற்குத் தாவிச் சென்றது குரங்கு.

குரங்கின் புத்திசாலித்தனத்தை எண்ணி ஆச்சரியமடைந்தது தென்னையும் மாமரமும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்கு மானவள் வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தவள்



அருள் மழை பொழியும் அம்பாளின் பெருமைமிகு திருத்தலம் தெல்லிநகர் துர்கா தேவி ஆலயம் என்றால் மிகையாகாது. தேசம் போற்றும் தெல்லிநகர் தேவியின் வருடாந்த பெருந் திருவிழா ஆரம்பமாகி மிகவும் சிறப்பாக பக்தர்கள் வழிபாடு செய்து நல்லருள் பெற்று வருகிறார்கள்.

இன்று திருத்தேர்விழா பல்லாயிரம் பக்தர்கள் திரண்டு வந்து வடம் பிடித்து வாழ்வு கேட்கும் நன்நாள். கலாகேசரி ஆ.தம்பித்துரையின் கைவண்ணத்தில் உருவான அழகிய சிற்பத் தேரில் அம்பாள் வீதி வலம் வரும் திருக்காட்சி அகத்தை ஆனந்த மயப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

இற்றைக்கு 350 ஆண்டுகளுக்கு முன் கதிர்காமர் என்ற ஞானி காசியிலிருந்து துர்க்கா இந்திரம் கொண்டு வந்து தெல்லிநகர் உழுகுடை பகுதியில் இலுப்பஞ் சோலை யில் ஸ்தாபித்த இத்திருக்கோவிலின் ஞானச்சுடர் தனித்துவமானது.

இத் திருக்கோவிலை சீரோடு பராமரித்த தர்மகர்த்தா சபையினர் பரந்த நோக்கத்தோடு பொதுக் கோவிலாக்கி நல்ல நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்கினார். நிர்வாக சபையில் கல்வியால், சமய அறிவால், சம வாழ்வால் நிறைந்த சான்றோர் பெருமக்கள் அணி செய்தனர்.

துர்க்கா தேவியின் திருவருளால் துர்க்காதேவியே அவதாரம் எடுத்து வந்ததுபோல் அன்னை சிவத்தமிழ்ச் செல்வி அவர்கள் இத் திருக்கோவில் பணியில் இணைந்த நாள் முதல் இத் திருத்தலம் உலகப் பிரசித்தி பெற்றது. அன்னையின் தலைமையில் இக் கோவில் சகல வளங்களையும் கொண்ட பெரிய தேவஸ்தானமாக வளர்ச்சி கண்டது.

இன்று எவ்விதமான குறையுமின்றி அம்பாள் நிறை செல்வத்தோடு தன்னை நாடி வருபவர்களுக்கும் நிறைந்த வாழ்வு கொடுத்து அருள் பாலிக்கின்றாள். 2011 ஆம் ஆண்டு நடைபெற்ற கும்பாபிஷேகத்தை முன்னிட்டு பல்வேறு திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டமை அம்பாளின் திருவருளே. எத்திருப்பணியை தொடங்கினாலும் அம்பாளின் அருளும் அடியார்களின் ஆர்வமும் திருப்பணி வேலைகள் உடன் பூர்த்தியாகி விடும் அற்புதத்தை எடுத்துரைக்க முடியாது.

எல்லாம் துர்காதேவியின் சித்தம். துர்க்காபுரம் மகளிர் இல்லம் கடந்த முப்பது ஆண்டுகளாக அம்பாளின் நிழலில் சிறப்பாக இயங்கி வருகிறது. தற்போது எமது இல்லத்தில் வன்னியுத்தத்தால் சிறுமிகளின் தொகை அதிகரித்திருப்பது யாவரும் அறிந்ததே.

அச்சிறுமிகளின் வசதிக்காக ஆலயத்தின் தென் திசையில் மிக நவீன வசதிகள் கொண்ட விடுதிச்சாலை அமைக்கப்பட்டு வேலைகள் பூர்த்தியடையும் நிலையிலுள்ளது.

ஆலயத்தில் தொடர்ந்து ஆதரவற்றவர்களுக்கு உதவும் அறப்பணிகள் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஏழை மாணவர்களுக்கு கல்வி ஊக்குவிப்புக் கொடை முதல் அவசர நோயாளர்கள், கணவனை இழந்த பெண்கள் போன்றோருக்கான உதவி வரை நிலை உணர்ந்து நிறைவேற்றப்பட்டு வருகிறது.

அம்பாளின் திருவருளால் தேவஸ்தானப் பணிகள் பாரிய வளர்ச்சி பெற்று வருகின்றது. தேவஸ்தான வளர்ச்சிக்கு உதுவும் பக்தர்களுக்கும் தர்மகர்த்தாசபை, நிர்வாகசபை, தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம், பெண்கள் தொண்டர் சபை, துர்க்காபுரம் மகளிர் இல்லப் பிள்ளைகள், தேவஸ்தான சிவாச்சாரியப் பெருமக்கள், பணியாளர்கள் அனைவரது பரிபூரண ஒத்துழைப்புக்கு நன்றி கூறுகின்றேன்.

ஆறு.திருமுருகன்
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

# தமிழ் அரசியல் பின்னணி உள்ளமையால் நாம் தொடர்ந்து புறக்கணிக்கப்படுகிறோம்

## மீனவசங்கப் பிரதிநிதிகள் மகா சம்மேளனத்திடம் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

அரசியல் பாகுபாடு காட்டப்படாமல் கடற்றொழிலாளர்களுக்கு உதவிகள் வழங்கப்படல் வேண்டும் என மகா சம்மேளனத்திடம் மீனவப் பிரதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்.நீரியல் வளத்திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் மேலும் விடுக்கப்பட்ட கோரிக்கைகள் வருமாறு,

எமது மக்கள் பல அரசியல் கட்சிகளின் பின்னணியை கொண்டவர்கள். ஆனால், இந் நாட்டின் ஆட்சிப்பீடமோ பெரும்பான்மை இனத்தவர்களால் ஆளப்படுவதால் தமிழ் அரசியல் பின்னணிகளைக் கொண்ட மீனவப் பிரதேசங்கள் ஏனைய பிரதேசங்களுக்கு வழங்கப்படும் உதவிகள், அபிவிருத்திகள் என்பவற்றிலிருந்து புறக்கணிக்கப்படுகின்றது.

அரசியல் என்ற பாகுபாடு இன்றி இம் மகா சம்மேளனம் உதவிகள் வழங்க வேண்டும்.

இதனைவிட தற்போது 6 ஆம் கட்டமாக மண்ணெண்ணெய் வழங்கப்படவுள்ளது.

எனினும் இதுவரை 5 கட்ட மண்ணெண்ணெய் கூட கிடைக்காதவர்கள் உள்ளனர்.

கூடுதலாக தீவகப் பிரதேசங்களில் மண்ணெண்ணெய் விநியோகம் முற்றாக வெற்றியளிக்கவில்லை.

தீவகத்திலுள்ள ஒருசில இடங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டாலும் ஏனைய இடங்களை அதிகாரிகள் எட்டிக்கூடப் பார்ப்பதில்லை.

மண்ணெண்ணெய் விநியோகிப்பதற்கு நடமாடும் சேவை ஆரம்பிக்கப்பட்ட போதும் அவை தீவகப் பகுதிகளுக்கு செல்லவுமில்லை. மண்ணெண்ணெய் வழங்கப்படவுமில்லை.

சங்கங்கள் ஊடாக இனி மண்ணெண்ணெய் வழங்கப்படல் மற்றும் அனைத்து உதவிகள், கடற்றொழில்சார் அபிவிருத்தி என்பன கிராமிய அபிவிருத்திச் சங்கங்களின் ஊடாகவே வழங்கப்படல் வேண்டும் என அவர்கள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் மகா சம்மேளனத்தின் தலைவர் தெரிவிக்கையில்,


நாம் இம் மண்ணெண்ணெய் விநியோகம் தொடர்பில் முதன் முறையாக கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சரிடமும் கதைத்துள்ளோம்.

மேலும் பதிவு செய்யப்பட்ட படகுகளுக்கே இம் மண்ணெண்ணெய் நிவாரணம் வழங்கி வருகின்றோம்.

பதிவு செய்யப்படாத படகுகள் வெகுவிரைவில் பதிவு செய்வதன் மூலம் மண்ணெண்ணெய் பெற்றுக்கொள்ள முடியும்.

இதுதவிர மண்ணெண்ணெய் கிடைக்கப் பெறாதவர்களைக் கண்டறிவதற்காகவும் அவர்கள் தொடர்பிலான பிரச்சினைகளினை ஆராய்வதற்காகவும் 4 பேர் கொண்ட குழு ஒன்றினை நியமித்துள்ளோம் என்றார். (அ-4)

# தெல்லிப்பழை துர்க்கை அம்மனுக்கு இன்று தேர்



## ஆதிசக்தி ஆனவளே துர்க்கையம்மா

ஆதிசக்தி ஆனவளே துர்க்கையம்மா
அகிலம் முழுவதும் காப்பவளே துர்க்கையம்மா
ஆவணி தோறும் உன் மஹோற்சவம் காண
அலை அலையாக உன் வாசல்
வந்தோம் துர்க்கையம்மா
அடியவர்களுக்கு அமுதமளிக்கும் அம்பிகையே!
ஏழைகள் துயரம் தீர்க்க
இரக்கம் காட்டாயோ துர்க்கையம்மா?
குறிஞ்சிக்கவி-செ.ரவிசாந், குப்பிளான்.

## சஞ்சலங்கள் தீர்த்திட சாந்தி நிலவிட சுந்தர வல்லி தேரேறி வருக

ஆதி பராசக்தி அம்பிகை பார்வதி அமிர்தவல்லி
அபிராமி தேரேறி வருக!
அண்டமெல்லாம் காப்பவளே அமிர்தவர்ஷிணி
ஆனந்த ரூபினி தேரேறி வருக!
சோதி வடிவானவளே துன்பமெல்லாம் தீர்ப்பவளே
திரிபுர சுந்தரி தேரேறி வருக!
சஞ்சலங்கள் தீர்த்திட சாந்தி நிலவிட
சுந்தரவல்லி தேரேறி வருக!
துர்க்கா துரந்தரியம்மா ஏற்றிப் போற்றிய
துர்க்கைத் தாயே தேரேறி வருக!
பொங்கு தெல்லி நகர் வாழும் நாரணி
நான்முகி தேரேறி வருக!
க.லோகேஸ்வரன்,தொல்புரத்தூர்.

## தெல்லியூர் துர்க்கை அம்மையே தேரேறி வருக

அவனியின் அன்னையே- தேரேறி வருக
அன்பெல்லாம் ஒருரு ஆனவளே- தேரேறி வருக
சிவனார் மனமகிழ் தேவியே- தேரேறி வருக
சிங்கமேறும் சேவகியே-தேரேறி வருக
வேப்பிலை நாயகியே-தேரேறி வருக
வேதம் போற்றும் வேத வல்லியே- தேரேறி வருக
மகிட முகத்தானை மாய்த்தவளே-தேரேறி வருக
மன்னும் கைலாச மாணிக்வல்லியே- தேரேறி வருக
தொல்லை நீக்கும் சுந்தரியே- தேரேறி வருக
தெல்லியூர் துர்க்கையம்மையே-தேரேறி வருக
சொக்கலிங்கம் தர்மகுலசிங்கம், நாயன்மார்கட்டு.

## தேரேறி வாம்மா துர்க்கை அம்மா

சூலம் தன்னை கையில் ஏந்தி
மகிடன் அவன் தலைமேலே
நீண்டருளும் திருக்கோலம்
தெல்லிப்பழை வாழும் துர்க்கை அம்மன் அருட்கோலம்
எலுமிச்சை தோளெடுத்து நெய்தீபம் ஏற்றிவர
ஏற்றம் மிகு வாழ்வதனை
அருளுகிறாள் துர்க்கை அம்மன்
முக்கண்ணன் நாயகியே
முக்குணங்கள் அழித்திடவே தேரேறி வாருமம்மா
பேரின்பநாதன் பரமநாதன்,
ஜி.எஸ்.லிங்கநாதன் அன்.கோ, யாழ்ப்பாணம்.

## "தளராத கீர்த்தி வேண்டும்"


வாழ வழிகாட்டியெமை வல்ல அறிவூட்டிடும்
வாமி அபிராமி அன்னையே
வையகம் போற்றிட வானவர் மகிழ்ந்திட
வீதியுலாவரும் தேவியே
தாழவே சிரம் தாழ்த்தி வரமொன்று கேட்கின்றேன்
தளராத கீர்த்தி வேண்டும்
தமிழாலே உனைப்பாடி அமுதாகப் பசியாறும்
தாற்பரிய வரமதுதான்
சூழுலகம் ஒருபோதும் பண மதில் திருந்தாது
செல்வமென உமையென்றும் நீ வருவாய்
சொத்தாகி நம் நாட்டின் சோபிக்கும் தெல்லியூர்
சுகமருள் கல்யாணி அம்மா!
கே.எஸ்.சிவஞானராஜா, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிறீப்ஸ் எனப்படும் ஜேர்மனிய நாடகம் தே.தேவானந்தாவின் நெறியாள்கையுடன் கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கனின் தமிழ் மொழிபெயர்ப்பிலும் யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் நேற்று முன்தினம் மேடையேறியது. இந்நிகழ்வில் கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் மங்கல விளக்கேற்றுவதையும் ஜேர்மனிய கோத்தே நிறுவனத்தின் இயக்குநர் லியோன் சோட்டில் உரையாற்றுவதையும் நாடகத்தின் ஒரு பகுதியையும் நாடக ரசிகர்களின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம். (படங்கள்: உ.சாளீன்)

# செல்வச்சந்நிதி வேலவனின் அற்புதங்களும் அனுக்கிரகங்களும்




ஸ்ரீவாணி வெளியீட்டகத்தின் இலவச வெளியீடான தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி **வேலவனின் அற்பு தங்களும் அனுக்கிரகங்களும்** எனும் நூல் சந்நி தியானின் இரதோற்சவ தினமான நாளை மறுதினம் வியாழக்கிழமை வெளியிடப்படவுள்ளது.

இந்நூலின் மதமாற்றத் திணிப்புக்கள், வற்புறுத்த ல்கள் நிறைந்த இக்காலகட்டத்தில் இன்னுமோர் மதம் சார்ந்த ஒரு பெண் தானாகவே முருகனிடம் அன்பு கொண்டு அற்புதங்களை அடையப்பெற்று சைவசமய நெறிமுறை களைப் பின்பற்றும் அதிசயத்தை இந்நூலில் காணலாம். மீண்டும் நடக்க வைத்த சந்நிதி முருகன் கண்ணுக்கு ஒளி தந்த கந்தனவன், சிறுநீரக நோயைக் குணப்படுத்திய குமரக்கடவுள் வழங்கிய வாக்கை நிறைவேற்றிய சந்நிதி யான் உத்தமனார் விரும்புவது உள்ளக் கமலம். சஞ்சலம் தீர்த்த சந்நிதி வேலன், துறவற நிலை யைத் தந்ததேனோ முருகா!, எத்திக்கும் புகழ் மணக்கும் திருப்புகழ் முதலான மிகப்பெரும் அற் புத நிகழ்வுகளையும் லண்டனிலும் பிரான்சிலும் நிகழப்பெற்ற அற்புதங்களையும் மக்களி டத்தில் காவிச் செல்லும் நோக்காக இந்நூல் அமைந்துள்ளது.பல முருகனடியவர்களால் அடையப்பெற்ற அற்புத நிகழ்வுகளைத் தாங்கி இந்நூல் வெளிவருகின்றது. (அ-9)

# ஆப்கானின் தென்பகுதியில் 17 பேரின் தலைதுண்டிப்பு

## தலிபான்கள் வெறியாட்டம்

(கந்தார்)



ஆப்கானிஸ்தான் நாட்டின் தென் பகுதியில் தலிபான்களின் கட்டுப்பாட் டில் உள்ள சமிண்தாவர் என்ற கிராம த்தைச் சேர்ந்தவர்கள் இசை நிகழ்ச்சி ஒன்றை நடத்தினர். அங்கு விழாக் காலங்களில் ஆதிவாசி பழங்குடியின பெண்கள் நடனமாடுவது வழக்கமான ஒன்று. எனவே, அந்த நிகழ்ச்சியில் இரண்டு பெண்கள் நடனம் ஆட மற் றவர்கள் இசை நிகழ்ச்சியை பார்த்து இரசித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது அந்த கிராமத்திற்குள் புகுந்த தீவிரவாதிகள் நிகழ்ச்சியில் கலந்து கொண் டவர்களைப் பிடித்து தலைகளை வெட்டினர். இதில் 2 பெண்கள் உட்பட 17 பேரின் தலைகள் துண்டிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டனர்.

நாட்டில் சர்வாதிகார ஆட்சி செய்த தலிபான்களின் செயலாகத்தான் இது இருக்கும் என்று அப்பகுதி அதிகார வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், இதற்கு எந்த இயக்கமும் இதுவரை பொறுப்பேற்கவில்லை. ஆப்கான் மற்றும் நேட்டோ படைகளுக்கு தகவல்கள் கொடு ப்பதாக சந்தேகப்படுகிறவர்களை தாலிபான்கள் பிடித்து இதுபோன்று சிரச்சேதம் செய்வது அவ்வப்போது நடந்து வருகிறது என்று அப்பகுதி முதியவர் ஒருவர் தெரிவித்தார். (அ-2)

# நுரைச்சோலை மின்நிலையம் போன்றதே இந்த அரசாங்கம்

## ஐக்கிய தேசியக் கட்சி கிண்டல்

தரம் குறைந்த உதிரிப்பாகங்களால் நிர்மா ணிக்கப்பட்ட நுரைச்சோலை அனல் மின் நிலையம் போன்றுதான் தரம் குறைந்த வேலை களை செய்யும் அமைச்சர்களைக் கொண்டு அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது என ஐக்கிய தேசியக் கட்சி விமர்சித்துள்ளது.

நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலையம் ஒருநாள் இயங்கினால் ஒரு மாதத்திற்கு மூட ப்படுகிறது. இப்போது நாடு முழுவதும் மின் வெட்டு அமுல்படுத்தப்பட்டுள்ளது. மின்னுற் பத்தி நிலையங்களை திறக்கும் போது அர சாங்கம் கூறியவற்றுக்கு முரணாக அவர்கள் இப்போது மேற்கொள்ளும் செயற்பாடுகள் உள்ளன.

எனவே, நுரைச்சோலை மின்நிலையம் போன்றுதான் இந்த அரசாங்கம் என மக்கள் கூறுகின்றனர் என ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் கயந்த கருணாதிலக்க நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாடொன்றில் கூறினார். (அ-2)

# குருபூசையும் முற்றோதலும்

(யாழ்ப்பாணம்)

அமரர் ஆத்மஜோதி நா.முத்தையாவின் 17 ஆவது குருபூசை விழாவும் திருவாசக முற்றோதலும் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 7 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை ஏழாலை ஆத்மஜோதி தியான மணிமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தொடர்ந்து **திருவாசகத் தேன்துளிகள்** எனும் அன்பளிப்பு வெளியீடும் நடைபெறவுள்ளதாக ஆத்மஜோதி தியான மணிமண்டபம் அறிவித்துள்ளது. (அ-9)

# துப்பாக்கிச் சூட்டில் தந்தையும் மகளும் பலி

(கொழும்பு)

ஹொரண, மொரகஹஹெனப் பகுதி யில் 32 வயதான தந்தை ஒருவரும் 4 வய தான மகள் ஒருவரும் இனந்தெரியாதோ ரினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிப் பலியாகியுள்ளனர்.

இந்தத் துப்பாக்கிச்சூட்டில் தாயார் காயம டைந்த நிலையில் ஹொரண வைத்தியசா லையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட் டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த மூவரும் சைக்கிளில் இரவு 8.30 மணியளவில் வீடு திரும்பிக் கொண்டிருந்த தாகவும் இதன்போது இவர்கள் மீது ஆயுதம் தாங்கிய குழுவினர் துப்பாக்கிச்சூடு மேற் கொண்டதாகவும் ஆரம்பக்கட்ட விசாரணை யிலிருந்து தெரியவந்துள்ளதாகவும் பொலி ஸார் கூறினர். (அ-2)

HDFC
GOLD LOAN
பொற் கடன்



உங்களது வீடமைப்பு வங்கியிடமிருந்து
பெறுமதி மிக்க தங்கத்தைக் கொண்டு

- அதி கூடிய தொகைப் பணம் குறைந்த வட்டியுடன்
- அதி உயர் பாதுகாப்பு
- தங்க ஆபரணங்கள் நவீன தொழில்நுட்ப முறையினால் பரிசீலிக்கப்படல்
- உத்தரவாதமளிக்கப்பட்ட நம்பிக்கை
- நம்பகமானதும் நட்புறவுமான வாடிக்கையாளர் சேவை

*நிபந்தனைகளுக்குட்பட்டது

பாதுகாப்பு பெட்டக வசதி யாழ் கிளையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு
011 5737373
011 2356800
அல்லது அண்மையில் உள்ள HDFC ...

HDFC BANK
The Housing Bank
HDFC BANK
www.hdfc.lk Email: hdfc@hdfc.lk
Fitch Rating - BBB+(lka)

(சி/843)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தட்டிக்கேட்க ஆள் இல்லாவிட்டால்
தம்பி சண்டப்பிரசண்டன்

–தமிழ் பழமொழி

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# வீதிச் சேட்டை விடுவோருக்கு தர்ம அடி கொடுக்க வேண்டும்

விடுதலைப் புலிகள் என்ற அமைப்பிற்கு விரும்பியோ விரும்பாமலோ தமிழ் மக்கள் ஆதரவு கொடுத்தார்கள். இதற்குக் காரணம் அவர்கள் விடுதலைக்காகப் போராடுகின்றார்கள் என்பதற்காக மட்டுமல்ல,

மாறாக அவர்களின் நிர்வாகத்தில் அச்சமற்ற உறக்கம், எந்த நேரமும் வீதியில் பெண்கள் பாதுகாப்புடன் நடமாடக் கூடிய சுதந்திரம், களவு, கொள்ளையென்ற பேச்சுக்கே இடம் இல்லாத நிலைமை, இவை காரணமாகவும் தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பை ஆதரித்தனர் என்ற உண்மையை புரிந்து கொள்வது அவசியம்.

விடுதலைப் புலிகள் மீண்டும் தோற்றம் பெற்று விடுவார்கள் என்ற அச்சம் இலங்கை அரசிடமும், இந்தியமத்திய அரசிடமும் இருக்கவே செய்கிறது.

விடுதலைப் புலிகள் தோற்றம் பெறுவார்கள் என்ற நினைப்பை இல்லாமல் செய்ய வேண்டுமாயின் – மீண்டும் புலிகள் தோன்றினால் அதற்கு தமிழ் மக்கள் ஆதரவு கொடுப்பதை முற்றாக தடுக்க வேண்டுமாயின் அதற்கான ஒரே வழி தமிழ் மக்களுக்கான உரிமையை இலங்கை அரசு வழங்குவது மற்றும் அச்சமற்ற பாதுகாப்பான சூழமைவை தமிழ் பிரதேசங்களில் ஏற்படுத்துவது என்பன முக்கியமானவையாகும்.

இவற்றை செய்யாது விடுத்து புலனாய்வுத் துறையின் தகவல்களைப் பெற்று தமிழ்ப் பிரதேசங்களில் அச்ச உணர்வை ஏற்படுத்தும் செயற்பாடுகளைச் செய்வதானது, புலிகளின் தேவையை மேன்மேலும் அதிகரிக்கச் செய்யுமே தவிர அரசு நினைப்பது போல, தமிழ் மக்களிடம் இருக்கக் கூடிய விடுதலைப் புலிகள் பற்றிய நினைப்பை இல்லாது செய்ய முடியாது.

இப்போதெல்லாம் வீதிகளில் பெண்பிள்ளைகள், மாணவிகள் மீதான சேட்டைகள் அதிகரித்துள்ளதால் பெற்றோர்கள் தங்களுக்குள் மிகுந்த வேதனை கொள்கின்றனர்.

உதாரணமாக யாழ்ப்பாணத்தின் பிரபல்யமான தனியார் கல்வி நிறுவனத்திற்குச் செல்கின்ற மாணவிகள் மீது, மோட்டார் சைக்கிள்களில் திரிகின்ற – நடுத்தர வயதுடைய ஒருவரின் சேட்டை அதிகரித்துள்ளதாக பலரும் கவலை கொள்கின்றனர்.

மோட்டார் சைக்கிளில் வந்து மாணவிகளின் முதுகில் ஓங்கி அறைந்துவிட்டு அந்த மர்ம நபர் ஓடித் தப்பி விடுகின்றார். இந்தக் கொடூரத்தால் மாணவிகள் தனியார் கல்வி நிறுவனத்திற்கு செல்ல முடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

இத்தகைய செயல்கள் எங்கள் பிள்ளைகளின் கல்வியை பெரிதும் பாதிக்கின்றதென்னும் உண்மையை பொலிஸ்தரப்பு உணர்ந்துகொள்ளவேண்டும்.

சம்மந்தப்பட்ட நபரை கைது செய்யாத வரை பொலிஸார் இருந்தும் என்ன பிரயோசனம் என்ற மன நிலை தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படும்.

இது போல சில இளைஞர்களின் தொந்தரவும் தாங்க முடியவில்லை என்ற வேதனையான சம்பவங்கள் குறித்தும் பொலிஸார் நடவடிக்கை எடுப்பது அவசியம். இல்லையேல் கலாசாரம் பேணவிரும்பும் தமிழ் இளைஞர்கள் ஒன்றுசேர்ந்து சேட்டை விடுவோருக்கு தர்ம அடி கொடுக்கத் தயாராக வேண்டும்.

# தெல்லிநகர் துர்க்கை அம்பாள் சித்திரத்தேரில் பவனி வருகிறாள்

நம் நாட்டிலே துர்க்கை வழிபாடு தனித்துவமானது. கிழக்கு நோக்கிய சந்நிதானத்திலே துர்க்கை அம்பாள் சங்கு, சக்கரம் ஏந்திய திருக்கரங்களோடு அகில உலகிலும் வாழ்ந்து வருகின்ற அடியார்களுக்கும் திருவருள் வழங்கும் அற்புதத் தெய்வம்.

கீரிமலை, மாவிட்டபுரம் ஆகிய புண்ணிய புராதன தலங்களுடன் தொடர்பு கொண்டது துர்க்கையம்மன் ஆலயம். இதன் பூர்வீக வரலாறுகளைப்பற்றி வைத்திய கலாநிதி வன்னியகுலம் அவர்களின் மகள் சட்டத்தரணி வ.குமாரசாமி 1935 இல் எழுதி சென்னையில் வெளியிட்டார். ஆலய வரலாற்றில் அம்பாள் உபாசகர் கதிர்காமர், முகாமையாளர் நாகநாத உடையார் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

இவர்களுக்குப் பின் இந்த நூற்றாண்டின் ஏகப்பிரதிநிதியாக விளங்கி எழுச்சிப்பெருநிலைக்கு வித்திட்ட பெருமை கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரையே சாரும். சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் தமது கணீர் என்ற குரலினால் சைவ சமூகத்தையும் தமிழ்ச் சமூகத்தையும் சுற்றமாகக் கொண்டவர்.

இன்று பவனிவரும் சித்திரத்தேரை கலாகேசரி ஆ.தம்பித்துரை 1978ஆம் ஆண்டு நிர்மாணித்தார். சிவத்தமிழ்ச் செல்வி அம்மையாரின் திருப்பணி சித்திரத்தேர்த் திருப்பணியுடன் ஆரம்பித்தது.

சிவத்தமிழ்ச்செல்வி அம்மையாரின் செவ்வாய்க்கிழமை, வெள்ளிக் கிழமை சமயப் பிரசங்கங்கள் ஐந்து நிமிடங்களே இடம்பெறும். இதன்போது கோயிலின் அமைப்பு முறைகளையும் வழிபாட்டு முறைகளையும் விரதங்கள், விழாக்களில் கடைப்பிடிக்கவேண்டிய முறைமைகளைப் பற்றியெல்லாம் சொற்பொழிவு செய்வார் அம்மையார்.

தர்மம் என்றொரு பொருள் உளது என்று மனிதர்களை எச்சரிக்கை செய்கின்றது கந்தபுராணம் என்றார் பண்டிதமணி. அதேபோன்று சிவத்தமிழ்ச்செல்வி அம்மாவும் கோயில் நிதி கூரிய வாள் நுனியிலும் நுள்ளியது என்பார். கோயில் சொத்து பெரு நெருப்பு என்பார். ஆலயத்தின் திருவீதி புனிதத்தன்மைக்காக எங்களைப் பல நூறுதடவை எச்சரிக்கை செய்திருக்கின்றார்.

இதனால்தான் துர்க்கையம்மன் சந்நிதி புனிதம் மிகுந்த திருத்தலமாக காட்சி தருகின்றது. இன்று துர்க்கையம்பாள் பவனிவருகின்ற சித்திரத்தேர் சிற்ப சாஸ்திர மரபுகளுக்கு அமைவானது.

குரும்பசிட்டி தந்த கலாகேசரி ஆ. தம்பித்துரையினால் நிர்மாணிக்கப்பட்டது. இதன் சிறப்புக்களையெல்லாம் கடந்த 1978ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 4ஆம் திகதி வெளிவந்த சித்திரத் தேர் சிறப்பு மலரில் பார்வையிடலாம்.

**கா. சிவபாலன்**

மரத்துக்கு உயிர் கொடுத்த பிரமாவாகிய கலாகேசரி ஆ. தம்பித்துரையை இச்சந்தர்ப்பத்தில் சிந்திப்போம். துர்க்கையம்பாளை சமுதாய நீரோட்டத்தில் பிரகாசிக்கச் செய்து இன்றைய எழுச்சிப் பெருநிலைக்கு வித்திட்ட சிவத்தமிழ்செல்வி அம்மையாரைப் போற்றுவோம். துர்க்கை அம்பாளுக்கு இன்று நடைபெறும் சமுதாயப் பெருவிழாவான தேர்விழாவில் அனைத்து அடியார்களுக்கும் திருவருள் மழை பொழிய துர்க்கை அம்பாளைப் பிரார்த்திப்போமாக.

# யாழ்.போதனா வைத்தியசாலையின் அபிவிருத்தி துரித முன்னேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் செயற்பாடுகள் முன்னேற்றகரமாக மேற்கொள்ளப்பட்டுவருவதாக வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுத் தலைவர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

எமது துரித செயற்பாட்டின் மூலம் பிரேத அறை குளிர் ஊட்டிகள் திருத்தப்பட்டுள்ளது.

சிற்றுண்டிச்சாலை நவீன வசதிகளுடன் புதுப்பொலிவுடன் காணப்படுகின்றது. திண்மக் கழிவுகள் தாமதம் இன்றி அப்புறப்படுத்தப்படுகின்றன.

வெளி நோயாளர் பிரிவில் நோயாளர்களுக்கான வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. அத்துடன் வைத்தியசாலையில் காணப்பட்ட சிறுசிறு குறைபாடுகளும் நீக்கப்பட்டு யாழ். போதனா வைத்திய சாலையின் செயற்பாடுகள் திறன்பட மேற்கொள்ளப்படுகின்றன என அவர் மேலும் தெரிவித்தார்.

யாழ் போதனா வைத்திய சாலையில் செயற்பாடுகளை கண்காணிப்பதற்கென சுகாதார அமைச் சினால் அபிவிருத்திக் குழுவொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (எ-11)

# சிறுவர்களுக்கு புகைப்பொருள் விற்ற 25 வர்த்தகர்களுக்கு அபராதம்

(யாழ்ப்பாணம்)

21 வயதிற்குட்பட்டவர்களுக்கு சிகரெட், பீடி விற்ற வர்த்தக உரிமையாளர்கள் 25 பேருக்கு யாழ்.நீதிமன்றம் 75 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்துள்ளது.

குறித்த 25 வர்த்தக உரிமையாளர்களுக்கு எதிராக 21 வயதிற்குறைந்தோருக்கு பீடி, சிகரெட் விற்றனர் என யாழ்.மது வரித் திணைக்களத்தினரால் யாழ்.நீதிமன்றில் நேற்றைய தினம் வழக்கு தொடரப்பட்டது.

குறித்த வழக்கினை விசாரணை செய்த யாழ்.நீதிவான், மா.கணேசராஜா குறித்த 25 வர்த்தக உரிமையாளர்களுக்கும் தலா 3 ஆயிரம் ரூபாய் வீதம் 75 ஆயிரம் ரூபாய் அபராதமாக விதித்தார். (எ-4)

# பின்னால் வந்த டிப்பர் வாகனம் ஆட்டோவை மோதிவிட்டு தப்பியது

## நால்வர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கட்டாக்காலி மாடுகளினை கடத்தி வந்த டிப்பர் வாகனம் ஓட்டோ ஒன்றுடன் விபத்துக்குள்ளாகியதில் ஓட்டோ சாரதி உட்பட நால்வர் படுகாயமடைந்தனர்.

இவ்விபத்துச் சம்பவம் நேற்றுக் காலை 8.30 மணியளவில் தாழையடிக்கும் சாவகச்சேரிக்கும் இடையில் உள்ள கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு அருகில் இடம்பெற்றுள்ளது.

குறித்த வீதியினால் ஆட்டோவின் சாரதி உட்பட நால்வர் பயணித்துக் கொண்டிருக்கும்போது பின்னால் வந்த டிப்பர் வாகனம் ஆட்டோவின் பின்பக்கத்திலேயே மோதியுள்ளது.

இதனால் ஆட்டோ முற்றாகச் சேதமடைந்ததோடு நால்வரும் படுகாயமடைந்தனர்.

எனினும் ஆட்டோவினை இடித்த டிப்பர் சாரதி அவ்விடத்தில் நிற்காமல் தப்பியுள்ளார்.

படுகாயமடைந்த ஆட்டோ சாரதி சாவகச் சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளதோடு ஏனைய மூவரும் சாவகச்சேரி வைத்தியசாலையிலேயே சிகிச்சை பெற்று வருகின்றனர்.

குறித்த டிப்பர் வாகனத்தின் இலக்கம் சாவகச்சேரி பொலிஸாரிடம் கொடுக்கப்பட்டுள்ளது எனவும் குறித்த வாகனம் கட்டாக்காலி மாடுகளினை திருட்டுத் தனமாக ஏற்றிக்கொண்டு வேகமாக சென்றபோதே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது எனவும் ஓட்டோ சாரதி தெரிவித்தார்.

குறித்த விபத்தில் ஓட்டோ சாரதியும் 5 பிள் ளைகளின் தந்தையாருமாகிய இராசையா ஜனார்த்தனன் (வயது 34) எனும் குடும்பஸ்தரே படுகாயமடைந்த நிலையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-4)

# சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்

## இரண்டுக்கும் வாழ்த்துக்கூறு!



பாமரனைப் பண்புள்ளவனாகவும் பண்புள்ளவனைத் தெய்வமாகவும் உயர்த்தும் கருத்தே மதம்.

உற்சாகத்துடன் இருக்கத் தொடங்குவதுதான் நீ ஆன்மீக வாழ்க்கை வாழ ஆரம்பிப்பதற்கான முதல் அறிகுறி.

நீ செய்த தவறுகளை வாழ்த்து; அந்தத் தவறுகள் நீ அறியாமலே உனக்கு வழிகாட்டும் தெய்வங்களாக இருக்கின்றன. துன்பங்களாக இருந்திருக்கின்றன. துன்பங்களுக்கும் நல்வாழ்த்துக்கள் இன்பங்களுக்கும் நல்வாழ்த்துக்கள்.

தூய்மை, பொறுமை, விடாமுயற்சி ஆகிய மூன்றும் வெற்றிக்கு இன்றியமையாதவை. இவை அனைத்திற்கும் மேலாக அன்பு வேண்டும்.


அடுத்தவர்களின் பாதையைப் பின்பற்றக்கூடாது. காரணம் அது அவர்களுடைய பாதை. உன்னுடையது அல்ல. உன்னுடைய பாதையைக் கண்டுபிடித்து விட்டால் அதன்பின்னர் நீ செய்யவேண்டியது எதுவும் இல்லை.

கடவுள் விருப்பு வெறுப்பற்றவர். உலகம், உயிர்கள், அண்டசராசரங்கள் அனைத்திடமும் அவர் அன்பு செலுத்துகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலுசந்தி மைக்கல் வி.க. உதைபந்தாட்ட போட்டியில் மயிலங்காடு ஞானமுருகன் அணி சம்பியன்





(கரவெட்டி)

வடமராட்சியில் மின்னொளியில் பல்லாயிரக்கணக்கான ரசிகர்கள் அலைமோத யாழ். மாவட்டத்தின் இரு பலம் வாய்ந்த முன்னணி நட்சத்திர அணிகள் மோதிய இறுதி ஆட்டத்தில் ஊரெழு றோயல் அணியை பனால்டி உதைமூலம் வெற்றிபெற்று மயிலங்காடு ஞானமுருகன் அணி மைக்கல் வெற்றிக்கிண்ணத்தை தனதாக்கிக்கொண்டது.

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவில் அழைக்கப்பட்ட 24 உதைபந்தாட்ட அணிகள் பங்குகொண்ட மின்னொளியிலான இறுதியாட்டம் நேற்று முன்தினம் கழக மைதானத்தில் கழகத்தலைவர் எஸ்.செல்வதீபன் தலைமையில் இடம்பெற்றது.

இதில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதியது.

பல்லாயிரக்கணக்கான உதைபந்தாட்ட ரசிகர்கள் மத்தியில் நடைபெற்ற இறுதி யாட்டத்தில் ரசிகர்களுக்கு விருந்தளிக்கும் வகையில் கடுமையாகத் தமது திறமைகளை வெளிப்படுத்தினர்.

ஆட்டத்தின் இறுதிவரை இரு அணிகளும் கோல்கள் எதுவும் பெறாத நிலையில் வெற்றியைத் தீர்மானிக்க பனால்டி உதை வழங்கப்பட்டது.

இதில் 4:3 என்ற கோல்கணக்கில் ஊரெழு றோயல் அணியை வெற்றி பெற்று மயிலங்காடு ஞானமுருகன் அணி சம்பியனாகியது.

இதில் முதலாமிடத்தைப் பெற்ற மயிலங்காடு ஞான முருகன் அணிக்கு 25ஆயிரம் ரூபா பணப்பரிசும் 15 ஆயிரம் ரூபா பெறுமதியான வெற்றிக் கிண்ணமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

இவ் உதைபந்தாட்ட தொடரில் சிறந்த வீரராக மயிலங்காடு ஞானமுருகன் அணியின் சேகர், அதிக கோல் அடித்த வீரராக இளவாலை யங்கென்றிஸ் அணியின் ஞானரூபன், தொடர் நாயகனாக ஊரெழு றோயல் அணி யின் கஜகோபன், மூத்தவீரராக அதே அணியின் தர்மகுலசிங்கம் (வெள்ளை) ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர்.

இவ் இறுதிப்போட்டிக்கு பிரதம விருந்தினராக கிளி.மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் செ.சிறினிவாச்ன் கலந்துகொண்டு சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

(9-24)




## தேசிய மட்ட விளையாட்டு போட்டி திகதிகள் மாற்றப்பட்டுள்ளன

அகில இலங்கை பாடசாலை அணிகளுக்கு இடையே கல்வித் திணைக்களத்தினால் நடத்தப்படும் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெறவிருந்த தினங்களில் மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் உடற்கல்வி பணிப்பாளர் ரோகன கருணாரத்ன அறிவித்துள்ளார்.

இதனடிப்படையில் எதிர்வரும் மாதம் 15, 16, 17 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த பெண்களுக்கான மென்பந்து கிரிக்கெட் போட்டி 22, 23 ஆம் திகதிகளுக்கு மாற்றப்பட்டுள்ளது.

ஆண்களுக்கான கிரிக்கெட் போட்டிகள் 23, 24 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன. 15, 16 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த உடல் கட்டழகுப் போட்டிகள் 23, 24 ஆம் திகதிக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

17, 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டிகள் 21, 22, 23, 24 ஆம் திகதிகளில் நடைபெறுவதாக இருந்த போதிலும் 19 வயது பிரிவினருக்கான போட்டிகள் 21, 22 ஆம் திகதிகளிலும் 17 வயதுப் பிரிவினருக்கான போட்டிகள் 22, 24 ஆம் திகதிகளிலும் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## மாகாண மட்டத்தில் வெற்றி பெற்ற பாடசாலைகளுக்கு பெருவிளையாட்டுப் போட்டி அடுத்த மாதம் ஆரம்பம்

இலங்கை கல்வி அமைச்சினால் அகில இலங்கைப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடத்தப்படுகின்ற பெரு விளையாட்டுப் போட்டியில் மாகாண மட்டத்தில் வெற்றி பெற்ற பாடசாலை அணிகளுக்கான இரண்டாம் கட்டப் போட்டிகள் அடுத்த மாதம் ஆரம்பமாகவுள்ளன.

இரண்டாம் கட்டப் போட்டிகளில் 19 வயதுப் பிரிவு ஆண், பெண்களுக்கான ஹொக்கிப் போட்டிகள் மாத்தளை எட்வெட் பாக் விளையாட்டு மைதானத்திலும் வேனாட் அலுவிகார் விளையாட்டு மைதானத்திலும் எதிர்வரும் 15 ஆம், 16 ஆம், 17 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளன.

வடமாகாண அணி சார்பில் ஆண்கள் பிரிவில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியும் யாழ்ப்பாணம் கல்வி வலயத்தைச் சேர்ந்த யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியும் கலந்து கொள்ளவுள்ளன. பெண்கள் பிரிவில் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்த உடுவில் மகளிர் கல்லூரி, வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, வவுனியா வடக்கு வலயத்தைச் சேர்ந்த சுந்தரபுரம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை ஆகியன கலந்து கொள்ளவுள்ளன.

## ஆசிய பாடசாலை காற்பந்து போட்டியில் வடமாகாண மாணவன் ஈரான் பயணம்

40 ஆவது ஆசிய பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவினருக்கான கால்பந்தாட்டப் போட்டி ஈரான் நாட்டில் கிஸ் தீவில் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 13 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

இந்தப் போட்டியில் கலந்து கொள்வதற்காக மன்னார் புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை மாணவன் கில்மன் சொய்சாவும் இலங்கை தேசிய அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளரும் இந்தப் பாடசாலையின் ஆசிரியருமான ப.ஞானராஜும் ஈரான் செல்லவுள்ளனர்.

இந்த சர்வதேச போட்டியில் சகல ஆசிய நாடுகளும் கலந்து கொள்ளவுள்ளன. இலங்கை அணியின் தலைமைப் பயிற்றுவிப்பாளராக வடமாகாணத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவு செய்யப்பட்டிருப்பது இலங்கை வரலாற்றில் இதுவே முதற்தடவை ஆகும்.

ஞானராஜ் மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியின் 1999 ஆம் ஆண்டில் பயிற்றப்பட்ட உடற்கல்வி ஆசிரியராக நியமிக்கப்பட்டார்.





யாழ்.மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கான மேசைப்பந்தாட்டப்பயிற்சி முகாம் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றதைப் படங்களில் காணலாம்


## இன்றைய ஆட்டங்கள்

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுமதியுடன் கற்கோவளம் ஐஸ் தொழிற்சாலை ஆதரவில் கற்கோவளம் உதய தாரகை விளையாட்டுக்கழகம் நடாத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இப் போட்டியில் இன்று செவ்வாய்க்கிழமை உதயதாரகை விளையாட்டு கழக மைதானத்தில் விண்மீன்விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சிவாநந்தா விளையாட்டுக் கழக ஏ அணி மோத வுள்ளது. (9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகக் கிரிக்கெட் லக்ஷ்மனை இழந்துள்ளது



## மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தார்

அன்மையில் தனது ஓய்வினை அறிவித்த இந்திய அணியின் மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர் வி.வி.எஸ்.லக்ஸ்மனை கிரிக்கெட் உலகம் இழந்து காணப்படுவதாக இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தார். அத்தோடு வி.வி.எஸ்.லக்ஷ்மனுக்கு தனது மதிப்பினையும் அவர் வெளியிட்டார்.

எங்களுடைய காலத்தில் வி.வி.எஸ்.லக்ஷ்மன் ஒரு மிகச் சிறந்த வீரராக காணப்பட்டார் எனத் தெரிவித்த மஹேல ஜெயவர்த்தன, அவர் விளையாடிய காலத்தில் அவர் தனது நாட்டின் வெற்றிக்காகவும், கிரிக்கெட்டுக்காகவும் ஏராளமான பங்களிப்புக்களை வழங்கியுள்ளதாகத் தெரிவித்தார்.

ஆகவே வி.வி.எஸ்.லக்ஷ்மனின் இன்மையை உலகக் கிரிக்கெட் உணரும் எனவும் அவர் தெரிவித்தார். என்னவாறான சூழ்நிலைகளில் அவர் ஓய்வு பெற்றார் என தெரியாது எனக் குறிப்பிட்ட மஹேல ஜெயவர்த்தன, எனினும் எல்லாச் சர்வதேச கிரிக்கெட் வீரர்களும் ஒரு கட்டத்தில் தனது ஓய்வினை அறிவிக்க வேண்டி ஏற்படும் எனவும், வி.வி.எஸ். லக்ஷ்மனும் ஓய்வுபெறுவதற்கு இது தான் சரியான தருணம் என கருதியிருப்பார் எனவும் மஹேல தெரிவித்தார்.

தனது ஓய்வினை அறிவித்த போது ராகுல் ராவிட் பலரை ஆச்சரியப்படுத்தியிருந்தார் எனத் தெரிவித்த மஹேல ஜெயவர்த்தன அதேபோல் வி.வி.எஸ்.லக்ஷ்மனுக்கு தனது எதிர்காலங்கள் குறித்த திட்டங்கள் காணப்படும் எனவும் தெரிவித்தார்.

ஆனால் வி.வி.எஸ்.லக்ஷமனின் கிரிக்கெட் சாதனையை மறக்க முடியாது எனக் கூறிய மஹேல ஜெயவர்த்தன ஒரு மனிதராகவும் வி.வி.எஸ்.லக்ஷ்மன் ஒரு மிகச் சிறந்த பண்பாளர் எனவும் மேலும் கூறினார்.

# சமனிலையில் இங்கிலாந்து பிரிமியர் லீக்

இங்கிலாந்து பிரிமியர் லீக் போட்டிகளில் நேற்று இடம்பெற்ற இரண்டு போட்டிகளும் சமனிலையில் முடிபடைந்துள்ளன. ஸ்ரோக், ஆர்சனல் அணிகளுக்கிடையிலான போட்டியும், லிவர்பூல், மன்செஸ்ரர் சிட்டி அணிகளுக்கிடையிலான போட்டியுமே சமனிலையில் முடிபடைந்துள்ளது.




ஸ்ரோக், ஆர்சனல் அணிகளுக்கிடையிலான போட்டியில் இரு அணிகளும் கோல்கள் எதனையும் பெறாமல் விட போட்டி 0:0 என்றக் கணக்கில் சமனிலையில் முடிபடைந்தது.

இப் போட்டியில் ஸ்ரோக் கழகத்திற்கு 2 மஞ்சல் அட்டைகள் கிடைக்கப்பெற்றிருந்தன. மன்செஸ்ரர் சிற்றி கழகத்திற்கும் லிவர்பூல் கழகத்திற்கும் இடையில் இடம்பெற்ற போட்டியில் லிவர்பூல் அணி போட்டியின் 34 ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றைப் பெற்றுக் கொண்டது. முதல் பாதிவரை இரு அணிகள் சார்பாகவும் மேலதிக கோல்கள் கிடைக்கப் பெறாது போக லிவர்பூல் அணி 1:0 என்ற கணக்கில் முன்னிலை வகித்தது.

அதன் பின்னர் போட்டியின் 63ஆவது நிமிடத்தில் மன்செஸ்ரர் சிட்டிக்கழகம் சார்பாக முதல் கோல் அடிக்கப்பட்டது. அதன் காரணமாக கோல்களின் எண்ணிக்கை 1:1 என்ற கணக்கில் சமப்பட்டது.

ஆனால் உடனடியாகவே பதிலடி வழங்கிய லிவர்பூல் கழகம் மூன்று நிமிடங்களில் இன்னுமொரு கோலைப் பெற்று 2:1 என்ற கணக்கில் முன்னிலை பெற்றது.

ஆனாலும் மன்செஸ்ரர் சிட்டிக்கழகம் தொடர்ந்து போராடி போட்டியின் 80 ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றைப் பெற்றுக்கொள்ள கோல் நிலை 2:2 என்ற நிலையில் சமப்பட்டது. அதன் பின்னர் கோல்கள் பெற்றுக் கொள்ளப்படாதுபோக 2:2 என்றகணக்கில் போட்டி சமனிலையானது.

# செல்ஸி அணி ஹட்ரிக் வெற்றி




பிரிமியர் லீக் கால்பந்துப் போட்டியில் நியூகாசில் அணியை அதிரடியாக வீழ்த்தி செல்ஸி அணி ஹட்ரிக் வெற்றியை பதிவு செய்தது.

இங்கிலாந்து பிரிமியர் லீக் கால்பந்து தொடர் நடைபெற்று வருகிறது. இதன் லீக் போட்டியில் செல்ஸி-நியூகாஸில் அணிகள் மோதின.

இதில் அபாரமாக ஆடிய செல்ஸி அணியின் ஈடன் ஹசார்ட் தனது முதல் கோலை அடித்தார். ஈடன், கோல் அடித்த 22 ஆவது நிமிடத்தில் செல்ஸியின் மற்றொரு வீரரான பெர்ணான்டோ ரொரஸ் அதிரடியாக மற்றொரு கோலை அடித்தார்.


இறுதிவரை நியூகாசில் அணி கோல்கள் எதுவும் அடிக்கவில்லை இறுதியில் செல்ஸி அணி 2:0 என்ற கோல்கணக்கில் வெற்றி பெற்றது.

ஏற்கனவே விகான், ரேடிங் அணிகளை வீழ்த்திய செல்ஸி அணி தொடர்ந்து மூன்றாவது வெற்றியைப் பெற்று 9 புள்ளிகளுடன் முதல் இடத்தில் நீடிக்கிறது. மற்றொரு போட்டியில் மன்செஸ்ரர் யுனைட்டட் அணி 3:2 என்ற கோல் கணக்கில் புல்ஹாம் அணியை வீழ்த்தி முதல் வெற்றியைப் பெற்றது.

மற்றைய போட்டிகளில் சுவான்சியா (3:0, எதிர் வெஸ்ட்காம்), எவர்டன் (3:1, எதிர் அஸ்ரன் வில்லா), விகான் (1:0, எதிர் சவுத்தாம்டன்) அணிகள் வெற்றிபெற்றன.

நார்விச்-குவின்ஸ் பார்க் ரேஞ்சர்ஸ், டாட்டன் ஹம்-வெஸ்ட்புறோம் அணிகள் மோதிய போட்டிகள் 1:1 என்ற கோல்கணக்கில் சமனிலையானது.

# வெற்றியைத் தொடர்ந்து தக்க வைப்போம் கடந்தகால மோசமான தோல்வியை நினைக்க விரும்பவில்லை : அஸ்வின்




நியூசிலாந்துக்கு எதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இந்திய அணி இன்னிங்ஸ் மற்றும் 115 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

இந்திய அணி முதல் இன்னிங்ஸில் 438 ஓட்டங்கள் குவித்தது. அடுத்து களமிறங்கிய நியூசிலாந்து அணி முதல் இன்னிங்ஸில் 159 ஓட்டங்களில் சுருண்டு பலோ ஒன் ஆனாது.

தொடர்ந்து இரண்டாவது இன்னிங்ஸை விளையாடிய நியூசிலாந்து அணி 164 ஓட்டங்களில் சுருண்டது. இதனால் இந்தியா இன்னிங்ஸ் வெற்றிபெற்றது.

நியூசிலாந்துக்கு எதிராக இந்தியா நான்காவது முறையாக இன்னிங்ஸ் வெற்றி பெற்றது. முதல் இன்னிங்ஸில் 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றிய தமிழக வீரர் அஸ்வின் இரண்டாவது இன்னிங்ஸிலும் சிறப்பான பந்து வீச்சை வெளிப்படுத்தினார்.

அவர் 54 ஓட்டங்களுக்கு 6 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார். ஓஜாவிற்கு மூன்று விக்கெட் கிடைத்தது.

அஸ்வின் இந்த டெஸ்ட்டில் மொத்தம் 85 ஓட்டங்களைக் கொடுத்து 12 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். இதன் மூலம் நியூசிலாந்துக்கு எதிராக சிறப்பாக பந்து வீசிய இந்திய பந்து வீச்சாளர் என்ற சாதனையைப் பெற்றார்.

இதற்கு முன்பு 1965 ஆம் ஆண்டு நியூசிலாந்துக்கு எதிராக எஸ்.வெங்கட்ராகவன் 152 ஓட்டங்கள் கொடுத்து 12 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதே சிறந்த பந்துவீச்சாக இருந்தது.

ஆட்ட நாயகன் விருது பெற்ற அஸ்வின் கூறுகையில், எனது பந்துவீச்சு இவ்வளவு சிறப்பாக அமைந்தது மகிழ்ச்சியளிக்கிறது. 12 விக்கெட்டுக்களை கைப்பற்றியது உண்மையிலேயே மகிழ்ச்சியைத்தருகிறது.

கிரிக்கெட்டை பொறுத்தவரை சில சமயம் வெற்றிபெறுவோம். சில சமயம் தோல்வி அடைவோம். இதனால் கடந்த காலங்களில் ஏற்பட்ட மோசமான தோல்வியை நாங்கள் நினைத்து பார்க்க விரும்பவில்லை.

ஹைதாராபாத்தில் பெற்ற இந்தவெற்றி எங்களது தொடக்கம் தான். இந்திய அணியின் வெற்றி நீடிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. சிறப்பாக பந்துவீசியிருப்பதால் எனக்கு எந்த வித நெருக்கடியும் இல்லை என்றும் பந்து வீச்சாளர்களுக்கு ஏற்ற வகையில் ஆடுகளம் சிறப்பாக இருந்தது எனவும் அவர் கூறியுள்ளார்.

# மன ரீதியான தயார் படுத்தல் அவசியம் : ரெய்லர்

இந்திய அணிக்கு எதிராக இன்னிங்ஸால் தோல்வியைச் சந்தித்த நியூசிலாந்து அணியின் தலைவர் ரோஸ் ரெய்லர்,

இந்திய சுழற்பந்து வீச்சாளர்களை சந்திக்க நியூசிலாந்து வீரர்களுக்கு துடுப்பாட்ட நுட்பத்தில் காணப்பட்ட குறைபாட்டை விட மன ரீதியான குறைபாடே முக்கியமான காரணம் என தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நிறைவடைந்த இப் போட்டியில் நியூசிலாந்து அணி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 115 ஓட்டங்களால் தோல்வியடைந்திருந்தது. நியூசிலாந்து அணி சார்பாக வீழ்த்தப்பட்டிருந்த 20 விக்கெட்டுக்களில் 18 விக்கெட்டுக்கள் அஸ்வின் மற்றும் பிரக்ஜான் ஓஜாவினால் வீழ்த்தப்பட்டிருந்தன.

இது குறித்து கருத்து தெரிவித்த ரோஸ் ரெய்லர், சுழற்பந்து வீச்சை கையாளுவதற்கு நுட்பரீதியான குறைபாடுகள் சிறிது காணப்பட்டாலும், பெருமளவில் மனரீதியான தவறுகளே காரணம் என தெரிவித்தார்.

தடுத்தாடும் ஆட்டத்தை நம்பிக் களமிறங்குவதுடன், தேவையான நேரத்தில் அடித்தாடியிருக்கவும் வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஒரு போட்டியில் 159 ஓட்டங்களுக்கும், 164 ஓட்டங்களுக்கும் சகல விக்கெட்டுக்களை யிழக்கும் போது கவலையடைவது வழக்கமானது என தெரிவித்த ரோஸ் ரெய்லர், இரண்டாவது டெஸ்ட் போட்டிக்காக 3,4 நாட்கள் காணப்படும் நிலையில் தங்களில் திருத்தங்களை மேற்கொண்டு இரண்டாவது போட்டிக்காக தயாராக காணப்பட வேண்டும் எனத் தெரிவித்தார்.



முதலாவது போட்டியில் இரண்டாவது இன்னிங்ஸில் கேன் வில்லியம்ஸன், பிரண்டன் மைக்கலம் இருவரும் இரண்டாவது விக்கெட்டுக்காக72 ஓட்டங்களை பகிர்ந்ததை சுட்டிக்காட்டிய ரோஸ் ரெய்லர், அவர்கள் தேவைக்கேற்றவாறு ஆடியிருந்ததாகவும், சிறப்பான முறையில் ஆடினால் சிறப்பான பெறுபேறுகளைக் காட்டலாம் என்பதற்கு அந்த இணைப்பாட்டம் உதாரணமாக காணப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கச்சதீவை மீட்க..

நிறைவேற்றப்பட்டுள்ள இலங்கை தொடர்பான தீர்மானங்கள் வருமாறு:

ஆட்சியில் இருக்கும் போது இலங்கைத் தமிழர்கள் அழிவிற்கு காரணமாக இருந்து விட்டு, ஆட்சியில் இல்லாதபோது இலங்கைத் தமிழர்களின் உரிமைப் பாதுகாப்பு என்ற போர்வையில் முதலைக் கண்ணீர் வடிக்கும் தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கும் தி.மு.கவிற்கும் கடும் கண்டனம்!

2009-ம் ஆண்டு இலங்கையில் இனக் கலவரம் உச்ச கட்டத்தில் இருந்தபோது, மத்திய கூட்டணி அரசை தாங்கிப்பிடித்து அறிவுரை வழங்கிக் கொண்டிருந்த தி.மு.க. தலைவர் கருணாநிதி, மத்திய அரசில் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி இலங்கையில் போர் நிறுத்தத்தை ஏற்படுத்த இந்திய அரசை வற்புறுத்தாமல், தமிழர்களை ஏமாற்றும் வகையில் காலை சிற்றுண்டி உண்ட பின், உண்ணாவிரதம் மேற்கொண்டு, மதிய உணவு நேரம் வந்தவுடன், இலங்கையில் போர் முடிந்து விட்டது என்ற பொய்யான தகவலைக் கூறி 3 மணி நேரத்தில் சாகும் வரையிலான தனது உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார்.

கருணாநிதியின் இந்த அறிவிப்பினை நம்பி, பதுங்குகுழிகளிலிருந்து வெளிவந்த அப்பாவி இலங்கைத் தமிழர்கள் மீது இலங்கை இராணுவம் குண்டு மழை பொழிந்தது. இந்தக் கொடூரத் தாக்குதலில் 50 ஆயிரத்திற்கு அதிகமான இலங்கைத் தமிழர்கள் மாண்டனர்.

அந்தத் தருணத்தில், இது குறித்து வாய் திறக்காத கருணாநிதி, தற்போது இலங்கை அரசு தன்னை ஏமாற்றி விட்டதாக கூறியிருக்கிறார். இதிலிருந்து, இலங்கையில், கொத்துக் கொத்தாக தமிழர்கள் உயிர் இழந்ததற்கு தன்னுடைய உண்ணாவிரதம்தான் காரணம் என்பதை கருணாநிதி மறைமுகமாக ஒப்புக் கொண்டிருப்பது தெளிவாகிறது.

ஆட்சியிலிருந்தால் தன் குடும்ப நலனில் அக்கறை செலுத்துவதையும், ஆட்சியில் இல்லாவிட்டால் இலங்கைத் தமிழர்கள் மீது அக்கறை செலுத்துவது போல நாடகம் ஆடுவதையும் வாடிக்கையாக கொண்டிருக்கும் தி.மு.க தலைவர் கருணாநிதியும், தி.மு.கவும் இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க கூட்டம் என்ற போர்வையில் கபட நாடகம் நடத்தியதை இந்தச் செயற்குழு வன்மையாக கண்டிக்கிறது.

தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையினரின் தொடர் தாக்குதல்களுக்கு நிரந்தர தீர்வு காணுமாறும், கச்சதீவினை மீட்டெடுக்குமாறும், இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் பயிற்சியளிப்பதை கைவிடுமாறும் மத்திய அரசை வலியுறுத்தல்!

தமிழக மீனவர்கள் மீன்பிடி தொழிலையே செய்ய முடியாத அளவுக்கு அவர்களது வாழ்வாதாரம் பாதிக்கும் வகையில், அவர்கள் மீது தாக்குதல் நடத்துவதையும், கொடுமைப் படுத்துவதையும், சிறைபிடிப்பதையும், அவர்களுடைய படகுகள் மற்றும் வலைகளை சேதப்படுத்துவதையும் இலங்கை கடற்படை வாடிக்கையாக கொண்டிருக்கின்றது.

இதேபோன்று, இலங்கை வாழ் தமிழர்களுக்கான உரிமைகளை அளிக்கவும் இலங்கை அரசு மறுத்து வருகிறது.

தங்களின் வாழ்வாதாரத்திற்காக மீன்பிடித் தொழிலை மேற்கொண்டு வரும் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் துன்புறுத்தப்படுவது கண்டிப்பாக தடுத்து நிறுத்தப்பட வேண்டும் என்றும், இனிவரும் காலங்களில் இது போன்ற சம்பவங்கள் நிகழக் கூடாது என்றும் இலங்கை அரசை இந்தியா அரசு எச்சரிக்க வேண்டும்.

கச்சைதீவை மீட்டெடுக்கும் வகையில் உச்ச நீதிமன்றத்தில் கழகப் பொதுச் செயலாளர், தமிழ்நாட்டு முதலமைச்சர் புரட்சித்தலைவி அம்மா அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் உள்ள அம்சங்களை கருத்திற்கொண்டு, கச்சதீவினை மீட்டெடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும், தற்போது வெலிங்டன் இராணுவப் பயிற்சிக் கல்லூரியில் பயிற்சி பெற்று வரும் இரண்டு இலங்கை இராணுவ அதிகாரிகள் மற்றும் பெங்களூரில் பயிற்சி பெற்று வரும் இலங்கை விமானப்படை வீரர்கள் திருப்பி அனுப்பப்பட வேண்டும் என்றும், இனிவரும் காலங்களில் இலங்கை இராணுவத்தினருக்கு இந்தியாவில் பயிற்சியளிப்பது கண்டிப்பாக நிறுத்தப்பட வேண்டும் என்றும் மத்திய அரசை இந்தச் செயற்குழு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது. (எ-11)

# துரித விசாரணை...

துரிதகதியில் விசாரணை நடத்தி அப்பாவிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மல்வத்து பீடாதிபதியை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சந்தித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிறு குற்றச் செயல்களில் ஈடுபட்ட வர்கள் தேவையின்றி நீண்டகாலத்திற்கு தடுத்து வைக்கப்படக் கூடாது என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

சந்தேகநபர்களுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் யுத்தத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ளனரா எனவும் மல்வத்து பீடாதிபதி, அமைச்சர் பீரிஸிடம் வினவியுள்ளார்.

சிலர் இன்னமும் தமது சொந்த இடங்கள்ல் மீள்குடியேற்றப்பட வில்லையென முறைப்பாடு செய்யப்பட்டு வருவதாக பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் பல் கலைக்கழக விரிவுரையாளர் பிரச்சினைகளுக்கு காத்திரமான தீர்வுத் திட்டத்தை வழங்க அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்தவர்கள் கூடுதல் முனைப்புக் காட்ட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார். (எ-11)

# மகேஸ்வரன்...

மரண தண்டனையை வழங்கியுள்ளது.

2008ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி கொழும்பில் உள்ள கோயில் ஒன்றில் வைத்து மகேஸ்வரன் எம்பியை சுட்டுக் கொன்றதாக இலங்கையின் சட்டமா அதிபரினால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

சந்தேக நபரான வலன்ஸ்டினோ அரச படைகளுடன் சம்பந்தப்பட்டவர் என அரச தரப்பு பேச்சாளரான அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல கூறியிருந்தார்.

பின்னர் பொலிஸாருக்கு வழங்கிய வாக்கு மூலத்தில் அமைச்சர் அதனை நிராகரித்திருந்தார்.

சுமார் 4 வருடங்களுக்கும் அதிகமாக நடந்த இந்த வழக்கின் தீர்ப்பை நேற்று வழங்கிய மேல் நீதிமன்ற நீதிபதி சுனில் ராஜபக்ஷ, சந்தேக நபருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக சந்தேக நபர் மேன்முறையீடு செய்யவுள்ளதாக அவரது சட்டத்தரணிகள் கூறியுள்ளனர். (எ-11)

# அமைச்சர் ரிசாத்...

ருடன் சிரேஷ்ட சட்டத்தரணிகள் பலர் உட்பட 20இற்கும் மேற்பட்ட சட்டத்தரணிகள் நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தனர்.

அமைச்சருக்கு எதிரான இந்த வழக்கில் இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தைச் சேர்ந்த 3 சட்டத்தரணிகள் ஆஜராகியிருந்தனர்.

இதேவேளை, மன்னார் நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தியது மற்றும் நீதிமன்றக் கட்டிடத்திற்கு கல்லெறிந்து அரச உடைமைகளுக்கு சேதம் விளைவித்தது தொடர்பில் கைது செய்யப்பட்டுவிளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 18 பேருக்கும் பிணை வழங்குவதற்கு மன்னார் நீதிமன்றம் மறுத்து விட்டது.

அத்துடன் அவர்களை வரும் செப்ரெம்பர் மாதம் 10-ம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்குமாறும் உத்தரவிட்டுள்ளது.

இந்த வழக்குத் தொடர்பில் மேலும் பலர் புலனாய்வுப் பொலிஸாரினால் தேடப்பட்டு வருகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (எ-11)

# அவுஸ் செல்ல...

ஜெயவர்த்தன தெரிவித்தார்.

நீர்கொழும்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சட்டவிரோத அவுஸ்திரேலிய பயணிகளை நேற்று நேரில் சென்று பார்வையிட்டு திரும்பிய ஜயலத் எம்.பி ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

தமது பிள்ளைகளின் எதிர்காலத்திற்காகவே அவர்கள் சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்கு செல்ல முற்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட அவர், வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கு விரைவில் பிணை வழங்கப்பட வேண்டும் எனவும் இது தொடர்பாக நாடாளுமன்றில் உரையாற்றவுள்ளதாகவும் குறிப்பிட்டார். (எ-11)

# இலங்கைப் படை...

சில சந்தர்ப்பங்களில் மாநில அரசாங்கங்களின் கோரிக்கைகள் குறித்துக் கவனம் செலுத்தப்படும் என அவர் தெரிவித்துள்ளார். (எ-11)

# கோமா நிலையில்...

இல்லையெனவும் இவருக்கு தொடர்ந்து சிகிச்சைகள் அளிக்க ப் பட்டு வருவதாகவும் கராப்பிட்டிய வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர் யாழ்ப்பாணம் கண்டி வீதி கொடிகாமம் பகுதியை சேர்ந்தவர் என தெரிவிக்கப் படுகிறது. (எ-11)

# சீன பாதுகாப்பு...

பாதுகாப்பு அமைச்சர் இலங்கைக்கு வரவுள்ளார். அவருடன் சீன மக்கள் இராணுவத்தின் உயர் அதிகாரிகள் பலரும் விஜயம் செய்யவுள்ளனர்.

பாதுகாப்பு சேவைகள் கல்லூரிக்கு சீன பாதுகாப்பு அமைச்சர் விஜயம் செய்யும் போது, 1.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவியையும் அவர் வழங்கவுள்ளார்.

சப்புகஸ்கந்த பாதுகாப்பு கல்லூரி, பனாகொட இராணுவ முகாம் ஆகியவற்றுக்கும் அவர் செல்லவுள்ளார். (எ-11)

# எந்தவொரு மதத் தலத்தையும்...

காத்தான்குடி பள்ளிவாசலில் தொழுது கொண்டிருந்த பல நூற்றுக்கணக்கான மக்கள் சுட்டுக்கொல்லப்பட்ட கோர சம்பவம் உட்பட பல சம்பவங்கள் உங்களுக்கு ஞாபகம் இருக்கும்.

இவ்வாறான துன்பத்தில் இருந்த சகல இன மக்களையும் பாதுகாப்பதற்கான துரித நட வடிக்கையினை மேற்கொண்டு நாம் பயங்கரவாதத்தினை இல்லாமல் செய்து இன்று நீங்கள் நிம்மதியாகவும் சந்தோசமாகவும் அச்சமின்றி வாழ்வதற்கான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்துள்ளோம்.

இதனால் இந்த நாட்டிலே வாழுகின்ற சகல இன மக்களும் சௌபாக்கியத்துடன் வாழ வேண்டும்.

ஒரு சமூகத்தை இன்னொரு சமூகம் சந்தேகக் கண்கொண்டு பார்க்கின்ற நிலையை இல்லாமல் செய்ய வேண்டும்.

எமது நாட்டில் பல்லின மக்கள் வாழ்ந்து வருகின்றனர். அதேபோன்று பல்லின மதங்களையும் கடைப்பிடிக்கின்ற மக்கள் வாழ்கின்றனர்.

பௌத்தம், இந்து, இஸ்லாம் மதங்களை கடைப்பிடித்து வாழ்கின்றனர்.

எந்தவொரு மதமும் அந்த மதத்தை போதித்த போதனையாளர்களும் கூறவில்லை ஒரு மதத்தை மற்றைய மதம் சிறுமைப்படுத்த வேண்டும் அல்லது நிந்திக்க, அவமதிக்க வேண்டும் அல்லது இல்லாமல் செய்ய வேண்டும் எனப் போதிக்கவில்லை.

மதங்கள் எல்லாம் நம்பிக்கையின் அடிப்படையிலேயேதான் போதனைகள் செய்யப்பட்டுள்ளதை நாம் அறிவோம்.

அந்த வகையில் நாம் புனித அல்குர்ஆனை எடுத்துக் கொண்டாலும் பைபிளை எடுத்துக் கொண்டாலும், இந்து மத நூல்களை எடுத்துக் கொண்டாலும் பௌத்த நூல்களை எடுத்துக் கொண்டாலும் எல்லாவற்றிலும் நம்பிக்கையுடன் வாழ வேண்டும் என்பதையே கூறியுள்ளது.

இந்த நாட்டின் ஜனாதிபதி என்ற வகையில் நாட்டில் உள்ள சகல இனங்களையும் மதங்களையும் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழவைக்க வேண்டிய பொறுப்பு என்னிடம் உள்ளது.

நான் இந்த நாட்டிலுள்ள பௌத்தர்களுக்கு மாத்திரமோ இந்துக்களுக்கு மாத்திரமோ இஸ்லாமியர்களுக்கு மாத்திரமோ உரிய தலைமைத்துவம் அல்ல.

நான் இந்த நாட்டிலுள்ள சகல இனங்களையும் மதங்களையும் பாதுகாக்குகின்ற காவலனாக உள்ளேன்.

அந்தப் பொறுப்பு என்னிடம் உள்ளது.

அதனை நான் மிகவும் சிறப்பாக செய்து பாதுகாத்து வருகின்றேன் எனக் குறிப்பிட்டார். (எ-11)


வர்த்தகர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள், வங்கியாளர்கள், ஆசிரியர்கள், ஓய்வூதியர்கள், Lions Club Members தாங்கள் விரும்பிய நாட்டிற்கு குறிப்பிட்ட காலத்திற்கு சென்று வர சந்தர்ப்பம்

10 நாட்களில் சாத்தியமாகும் வகையில் சட்ட ரீதியான ஆலோசனை வழங்குகின்றோம் Visit visa, Business visa

கனடா, அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, ஜேர்மனி, சுவிஸ், அமெரிக்கா, இங்கிலாந்து இன்னும் அனைத்து நாடுகளிற்கும் ஆலோசனை

முற்பணம் என்கின்ற பேச்சிற்கே இடமில்லை

புதன் கிழமைகளில் விடுமுறை

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் (PV82703)

முன்மாதிரியான விசா ஆலோசனை நிறுவனம்

37, சிவகுருநாதர் ஒழுங்கை,
பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
0212219016



(C-841)



## ஆசிரியர் தேவை

உயர்தர வகுப்புகளுக்கு உயிரியல் பாடம் கற்பிப்பதற்கு பட்டதாரி ஆசிரியர் தேவை. தகுதியுடையோர்

அதிபர்
கி/முருகானந்தா கல்லூரி
முரசுமோட்டை
பரந்தன்

எனும் முகவரிக்கு விண்ணப்ப படிவங்களை அனுப்பி வைக்கவும்.

அதிபர் (அ-848)



## வீடும் காணியும் விற்பனைக்கு

ஆதியாமலை உடுப்பிட்டியில் 3/4 பரப்பு காணியும் வீடும் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:
0778421209 சுதாகர் (301)



## கிரிஸ்டல் சென்ரர் நெல்லியடி

A/L 2014

வெப்ப இரசாயனம்

ஆரம்பம் - 2012.08.30 வியாழன்
பி.ப. 5.00 - 6.00 வரை

சுரேஷ்குமார் (அ-845)



## காணி விற்பனைக்கு

சுதுமலை தெற்கு, மானிப்பாயில் 3 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு:-
ஓய்வு பெற்ற பதிவாளர்,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (298)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org